# தக்க நாடகம்

*பதிப்பாசிரியர் :*

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்,**

எம்.ஏ.(தமிழ்) எம்.ஏ., (ஆங்கிலம்) பி.எட். டிப்.வ. மொ. பிஎச்.டி.,

*பொதுப்பதிப்பாசிரியர்*

**கு. தாமோதரன்,** எம்.ஏ.,

அ.கீ.சு.நூலக வெளியீடு எண் : 423
தமிழ் நூல் வெளியீடு எண் : 118

# நக்க நாடகம்

பதிப்பாசிரியர் :

**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
எம்.ஏ.எம்.ஏ.,பி.எட். டிப்.வ.மொ,பிஎச்.டி
காப்பாட்சியர்
அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்
சென்னை-5.

பொதுப்பதிப்பாசிரியர்:

**கு.தாமோதரன்** எம்.ஏ.
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை-113.

© அ.கீ.சு.நூலகம்
1999

விலை ரூ. : 79/-

முதற்பதிப்பு: 1999

வெளியிட்டபடிகள்: 500

பதிப்பாசிரியர் :

முனைவர் சு.சௌந்தரபாண்டியன்

பொதுப்பதிப்பாசிரியர் :

கு. தாமோதரன்

© அ.கீ.சு. நூலகம், சென்னை-5

விலை ரூ.79/-

---

அச்சிட்டவர்கள் : இராயப்பேட்டை எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் உபபொருள் உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கம் லிட்.,
26, கோயா அருணகிரி முதல் தெரு, இராயப்பேட்டை
சென்னை - 600 014.

G.O.M.L. PUBLICATIONS
Tamil Publications

# THAKKA NADAKAM

EDITOR :

**DR. S.SOUNDARAPANDIAN**
M.A.M.A.B.Ed. Dip.Skt. Ph.D.
Curator
Government Oriental Manuscripts Library
Chepauk, Chennai-5.

GENERAL EDITOR :

**K.DAMODARAN** M.A.
Director
Department of Archaeology
Tharamani
Chennai - 600 113.

© G.O.M.L.
1999

79/-

First Edition 1999
No. Copies : 500

**THAKKA NADAKAM**

Edited by :

**Dr. S. SOUNDARAPANDIAN**

General Editor :

**K. DAMODARAN**

© G.O.M.L., Chennai-5

Price Rs. **79/-**

---

**Printed at :** Royapettah Stationery and Printing and Allied Products Producers Indl. Co-op. Society Ltd.,
26, Koya Arunagiri 1st Street, Royapettah, Chennai - 600 014.

# தக்க நாடகம்

## பதிப்புரை

அ.கீ.சு நூலகத் தாட் சுவடியிலிருந்து (டி.485) பதிப்பிக்கப்பெறும் தமிசைநாடகம் இது.

தமிழிசைக்காகவே இந்நூல் பதிப்பிடப்படுகிறது.

தக்கன் கதை, தெரிந்த கதை எனினும், இக்கதை இன்னும் நன்கு ஆயப்படவில்லை.

குறிப்பாக இதில் ஊடுருவியுள்ள தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகள் நன்கு ஆயப்பட வேண்டும்.

தச்சன், என்ற தமிழ்ச்சொல்லே தக்ஷன் என்று வடமொழியில் திரிந்து வழங்குகிறது; தச்சனாகிய விசுவகர்மனே தக்கன் (தக்ஷன்). இதனால்தான், தக்கன் மகளாகிய காமாட்சியை விசுவகர்மவகுப்பார் குலதெய்வமாகக் கொண்டாடுகிறார்கள்.

வாயுபுராணம் முதலிய புராணங்களிலும் தக்கன் கதை நுவலப்பட்டுளது; ஸ்ரீமத் பாகவதத்திலும் தக்கன் கதை உளது.

தக்கநாடகம் என்ற இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

தக்கநாடகம், கி.பி.19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாக்கப்பட்டிருக்கலாம்.

## இந்நாடகத்தின் கதைச்சுருக்கம் :

தக்கப் பிரமர், தன் மருமகனாகிய சிவன் தன்னைப் பணியவில்லை என்பதற்காக, அவரையும் தன் மகளாம் சதியையும் அழைக்காமல், கலைக்கோட்டு முனிவரைக் கொண்டு சர்ப்பயாகம் செய்தார். அதற்கு உமை, வந்தாள். தக்கன் தன் கணவனை மதியாததால், யாகத்தீயில் இறங்கிப், பர்வதராசன் மகளாய்ப் பிறந்தாள் ! சிவனின் நெற்றிக் கண்ணில் உண்டான வீரபத்திரன், யூபத்தம்பத்தைப் பெயர்த்து, தக்கானக் கொன்றான்! பிறகு திருமால் வேண்டுகோளின்படி இறந்தவரை எழுப்பச் சிவன் ஒப்புக் கொண்டான் ! இதுவரை இந்நாடகத்தில் கதை உளது.

இந்நாடகம், இசைப்பாக்களும், வசனப்பகுதியுமாக இயைமிடைந்து செல்கிறது.

எனவே, 19ஆம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை நோக்கிலும் இந்நாடகம் ஓர் இடத்தைப் பெறுகிறது.

கட்டியக்காரன் உருவம், மற்றும் பிற மாந்தர்களின் உருவ, உடை அமைப்புகளும் கூறப்பட்டிருந்தலால், பழந்தமிழ்ச் சமுதாயப் பார்வைக்கு இந்நூல் பயன்படும் என்று உறுதிபடக் கூறலாம்.

கட்டியக்காரன் உருவம், மற்றும்பிற மாந்தர்களின் உருவ, உடை அமைப்புகளும் கூறப்பட்டிருந்தலால், பழந்தமிழ்ச் சமுதாயப் பார்வைக்கு இன்றும் பயன்படும் என்று உறுதிபடக் கூறலாம்.

இனி, நாடகத்தைப் பின்பற்றிக் கவனிப்போம்.

முதற்கள் தக்கனுடைய அரண்மனையில் இருக்கும் கட்டியக்காரன் வருகிறான்!

இக்கட்டியக்காரன் தக்கன் வருகையைத் தெரிவிக்கிறான்; பிறகு இரு மந்திரிகள், தக்கனின் வருகையைச் சபைக்கு உரைக்கின்றனர்.

இரண்டாவது மந்திரி கூற்றில் ( பாடல் 21 இன் பின்னே வருவது) தக்கன் ஒரு பிராமணன் என்ற கருத்து உள்ளது. ஸ்ரீமத்பாகவதத்திலும் இதே கருத்து உளது. அதனால்தான் இன்னும் விசுவகர்மர்கள் தங்களை விசுவப்பிராமணர்கள் என்று சுட்டுகின்றனர்.

நாடகத்தில், தக்கன் கொலுவிருக்கும்போது, அங்கு பிருகு முனிவர் வருகிறார்.

பிருகு முனிவர், புலோமிசை கூறும் கற்பிற்சிறந்தாளின் கணவர். சமதக்கினி நாடகம் எனும் தமிழ் நாடகத்தில் இப் புலோமிசை கதை உருக உருகக் கூறப்பட்டுள்ளது.

நமது இந் நாடகத்தில், தக்கன், பிருகு முனிவரிடம், சிவனால் தனக்கு ஏற்பட்ட அவமானத்தை விவரிக்கிறார்!

பொதுவாக, ''தக்கன் யாகத்துச் சிவனை அழைக்கவில்லை'' என்ற கதைதான் அனைவரும் கூறிவரும் கதையே தவிர, அதற்கு முன்பு, சிவன் தக்கனை அவமானப் படுத்தியதை யாரும் கூறுவதில்லை!

இத் தக்கநாடகம், சிவன் யாங்ஙனம் தக்கனை அவமானப் படுத்தினான் என்று (பாடல் 28) விவரிக்கிறது.

முப்பத்துமுக்கோடி தேவர்களும் கலந்து கொண்ட வேள்வி யின்போது, பலரும் தக்கனுக்கு வணக்கம் செய்த வேளையில், மருமகனான சிவன் மட்டும் இறுமாப்புடன் மரியாதை தராது இருந்தான்! இதுவே தக்கன் சினத்துக் காரணம்! இதனால்தான் தான்நடத்தும் வேள்வியிலும் இதே போல இறுமாப்புடன் நடந்து கொள்ளக்கூடும் என நினைத்து, அவனை அழைக்காமல் விட்டான் தக்கன்!

நாடகத்தில், தக்கன், சிவனைப்பற்றிக் கூறும்போது, சுந்த ரருக்காகப் பரவையாரிடம் நடந்ததைக் குறிக்கிறார். இது காலமுரண் ஆகும்! தக்கன் காலம், சுந்தரர் காலத்திற்கு மிக முந்தியது! சுந்தரரோ கி.பி.7ஆம் நூற்றாண்டினர். நாடக ஆசிரியர் தன்னை மறந்து, நாடகம் எழுதியபோது இதைக் கவனிக்கவில்லை போலும்.

நாடகத்தில், தக்கன், சிவன் தன்னை அவமானப்படுத்திய செய்தியைப் பிருகுக்குக் கூறியதும், பிருகு, ''சிவன் செய்தது தவறுதான்!'' என்று உறுதிப்படுத்துகிறார்! தக்கன் சினப்பது தவறில்லை என்கிறார் பிருகு!

இருப்பினும், மருமகனாதலின், உனது யாகத்துத் தள்ளவேண்டாம் சிவனை என்றும் பிருகு கூறுகிறார்.

தக்கன், தமது மகள்கள் 50 பேரையும் மணமுடித்துக் கொடுத்த விவரத்தையும் பிருகு முனிவருக்கு உரைக்கிறார்.

கசியப முனிவருக்குப் பதிமூன்று பெண்களையும் சந்திரனுக்கு ஒன்பது பெண்களையும், எமனுக்கு ஏழு பெண்களையும், சிவனுக்கு ஒரு பெண்ணையும், கௌதம ரிஷிக்கு ஒருபெண்ணையும் மணமுடித்துத் தந்தாராம் தக்கன்!

பிருகு முனிவர் கலைக்கோட்டு முனிவரைக் கொண்டு சர்ப்பயாகத்தை நடத்துமாறு, தக்கனிடம் கூறுகிறார்.

கலைக்கோட்டு முனிவரை அழைக்க ஓர் உபாயமும் சொல்கிறார் பிருகு! இரண்டு பெண்களை நிர்வாணமாக நிறுத்தி, வரச்செய்தால், அம் பெண்கள் பின்னே கலைக்கோட்டுமுனிவர் வந்துவிடுவார் என்கிறார் பிருகு!

இவ்விதம் நாடகம் செல்கையில், இடைவரு யாப்புகள் சிறப்பாக உள்ளன!

பரணி என்று பல பாக்கள் இந் நாடகத்தில் வருகின்றன. பரணி என்பது தாழிசை ஆகும்.

தருக்களும் விருத்தங்களும் இராக தாளங்களுடன் புனையப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

பாக்களின் அமைப்பை ஆயும்போது, சமதக்கினி நாடகம் என்ற நூலின் ஆசிரியரும், இத் தக்கநாடகம் முதியவரும் ஒரே புலவராகவே இருத்தல் வேண்டும் என்ற எண்ணம் எழுகிறது.

தக்கநாடக ஆசிரியரின் இசைப்புலமை போற்றத் தக்கது: இதிலுள்ள இசை நமது இசை! ஆம்! தமிழர் இசை!

தற்போதுள்ள திரைப்படம் பாடல்களில் வரும் பாடல்களைவிட, 25 ஆண்டுகளுக்கு முன்பு வந்த திரைப்படப் பாடல்கள் இன்றும் நம் நெஞ்சைக் கவரக் காரணம் என்ன?

ஆரம்பகாலத் திரைப்படப்பாடல்கள் நம் மண்ணுக்கு ஏற்ற ஏழு சுரங்களுக்கு மதிப்பளித்து, அவற்றை அனுசரித்து, அந்தக் கதியில் அமைக்கப்பட்டவை; ஆனால் புதுக்காலத் திரைப்படப் பாக்கள் வெளிநாட்டு இசையை அனுசரித்துப் போடப்பட்டவை; இதில் புதுமை இருப்பதால், இவற்றுக்கு வரவேற்பு உளது! ஆனால், நம் இரத்தத்திற்கு ஏற்ற ஏழ்சுர இசையமைப்பே நமக்கு இனிமை பயக்கும்! இதனால்தான், பழைய திரைப்படப் பாடல்கள் இன்னும் மனதிற்கு இனிக்கின்றன.

நாடகத்தில், தக்கன் கோரிக்கைப் படி சர்ப்பயாகத்தை நடத்தித்தரச் சம்மதிக்கிறார் கலைக்கோட்டுமுனி.

சூரியர் 12 பேர்கள், திக்குப் பாலகர்கள் - 8 பேர்கள், உருத்திரர்கள் - 11 பேர்கள், தேவர்கள்-முப்பத்துமுக்கோடிப் பேர்கள், ரிஷிகள்4800 பேர்கள் முதலியவர்களை அழைக்குமாறு கலைக்கோட்டு முனிவர் தக்கனிடம் சொல்கிறார்.

இந்த யாகத்திற்குரிய நாளை, பிராமணர்களைக் கொண்டு நிச்சயம் செய்யுமாறு கலைக்கோட்டு முனிவர் தெரிவிக்கிறார். நாள்குறிக்கும் சோதிடக் கலையில் பிறவகுப்பாரும் அக்காலத்தே ஈடுபட்டிருந்தனர்; ஆனால் அவர்களில் சிலர் சரிவரக் கணக்குப் போட்டு நாள் குறியாததால், பிராமணர்களுக்குச் சோதிடக் கலையில் புகழ்வர ஆரம்பித்தது எனலாம். இக் கருத்துக்குப்

பெருவாயில் முள்ளியாரின் ஆசாரக்கோவையில் ஆதாரம் உள்ளது. நாள் பார்க்கும்போது அந்தணரிடம் பார்க்க வேண்டும் என்றே ஆசாரக்கோவையில் ஒரு பாடல் உள்ளது.

அடுத்து நாடகத்தில் தக்கனின் சர்ப்ப யாகத்திற்காக அழைப்பு ஓலை அனுப்பும் காட்சி வருகிறது.

அழைப்பு ஓலையை எழுதுபவர் இராயசக்காரன். இராயசம் என்பவன் அரண்மனை எழுத்தர் ஆவார்; அரசு ஆணைகளை அந்நாளில் ஓலைகளில் எழுதுபவன். இராயசம் வெங்கண்ணா முதலிய வரலாற்று மாந்தர்களை வரலாற்றில் சந்தித்துள்ளோம். ஆனால், அப்படிப்பட்ட இராயசம் ஒருவனைப் பாத்திரமாக ஆக்கி, அவனுக்குச் சில காட்சிகளை ஒதுக்கித் தந்துள்ளது இத் தக்க நாடகம்

எனவே, வரலாற்று ஆய்வாளர்களுக்கு இந் நாடகம் நெஞ்சை அள்ளக் கூடியதாகவும், பயனுடையதாகவும் இருக்கும் எனலாம்.

இன்னும், பழு என்றால் காடு எனவும், பொறை என்றால் காடு எனவும், காட்டைச் சுட்ட இரு அரிய சொற்களை இந்த நாடகம் கொடுத்துள்ளது. பழுவேட்டரையர், இரும்பொறையன் என்றெல்லாம் வரலாற்று அரசர்களை நாம் சந்திக்கின்றோம்.

இவ்வகையிலும் இந்நாடகம் நல்ல ஆய்வுக்கு விருந்தாக உள்ளது எனலாம்.

அடுத்து நாடகத்தில், விசுவப்பிரம்மா, தக்கனுக்காக யாகசாலையை அமைத்துத்தருகிறார். வேடர்கள், யாகத்திற்குரிய சமித்துகளை நல்கின்றனர்.

பிறகு, யாகத்திற்கு வருவோர் பற்றி நாடகம் விரிவாக விரித்துக் காட்டுகிறது: சந்திர, சூரியர் முதற்கொண்டு பலரும் வருகின்றனர்.

நாடகத்தின் இக்கட்டத்தில் கியால்தரு என்ற இசைப்பாடல் எழுதப்பட்டுள்ளது.

சாதாரணத் தருவுக்கும், கியால் தருவுக்கும் உள்ள வேறுபாடு யாதெனில், கியால் தருவில் விரைந்தடை இருக்கும் என்பதேயாம்.

பின், தக்கனின் யாகம் பற்றி, நாரதர் மூலம் கேள்விப்படுகிறார்கள் சிவனும் பார்வதியும். ''யாகத்திற்குப் போவோம்'' என்று கூப்பிடுகிறாள் பார்வதி. ''நான் வரமாட்டேன்'' என்கிறார் சிவன். ''அப்படியானால் எனக்கு விடைதாருங்கள்'' என்று கேட்டு, விடைபெற்றுச் செல்கிறாள் பார்வதி.

ஆனால், தக்கநகரத்தில், பார்வதியை, அவள் தாயான வேதவல்லிகூட வரவேற்கவில்லை! தந்தையாகிய தக்கனோ ''நீ ஏன் வந்தாய்? மரியாதை கெட்ட சிவனின் மனைவியானதால் ஓலை அனுப்பாமல் இருந்தும் வந்தாயோ?'' என்று ஏசுகிறான்.

அவமானம் தாங்காத பார்வதி, ''இந்த உடலோடு சிவனைப் பாரேன்! இமவான் மகளாகப் பிறந்துதான் சிவனைப் பார்ப்பேன்!'' என்று சூளுரைத்து உயிர் துறக்கிறாள்!

பார்வதி இவ்வாறு உயிர்விட்டதைக் கேட்ட சிவன், வெகுண்டு, தன் கழுத்துமாலையிலிருந்து உருவாக்கிய வீரபத்திரனை, தக்கனை அழிக்க ஏவுகிறான்!

வீரபத்திரன், தக்கனின் யாக சாலைக்குள் புகுந்து, சரசுவதியின் மூக்கை அறுத்து, பன்னிருசூரியர் முதலானோரை அடித்து நொறுக்கி, யாகத்தம்பத்தைப் பிடுங்கிக் கீழே போடுகிறான்! தக்கனின் தலையையும் சீவுகிறான்!

அப்போது, மகாவிஷ்ணு, வீரபத்திரனை அழிக்கத் தனது சக்கராயுதத்தை எடுக்கிறார்!

உடனே சிவன், அதைத்தடுத்து, வீரபத்திரனை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறார்.

பதிலுக்கு விஷ்ணு, ''வீரபத்திரனால் இறந்தவர்களை நீ உயிர்ப்பித்து, யாகத்தை நடத்தி, அவிர்ப்பாகத்தைப் பெற்றுச் செல்'' என்கிறார்.

சிவனும் இசைகிறார்.

இத்துடன் நமது சுவடி நிறைவடைகிறது.

வேள்வியும் தமிழும் என்பது தமிழில் தனித்து ஆயப்பட வேண்டிய தத்துவம் ஆகும்.

இத்துறையில் இதுவரை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வில்லை.

பழந்தமிழரின் ஒழுக்க முறையில் வேள்வி நடத்துதலும் ஒன்று.

பெருவாயில் முள்ளியார் இயற்றிய ஆசாரக் கோவையில் இதற்குச் சான்று உள்ளது.

ஆசாரக்கோவை, சிறார்களுக்கு நீதி கூறும் நூல் என்று மட்டும் பலராலும் கருதப்படுகிறது: உண்மை அதுவல்ல! அரிய பெரிய தமிழ்ப்பண்பாட்டுச் செய்திகள், வரலாற்றுப் போக்கில் ஆயப்பட வேண்டிய கருத்துகள் முதலியனவும் ஆசாரக் கோவையில் உள்ளன.

கேள்விக்குண்டம் அமைக்கும் முறைகளைச் கூறும் ஆகமநூற்களை எல்லாம் படைத்தவர்கள் தமிழர்களே!

பழந்தமிழரின் கூடிவாழும் முறைக்கு ஒரு சான்று வேள்வி ஆகும்!

வேள்வி நடத்துவதும் தனி ஒருவரால் செய்யக்கூடிய செயலல்ல!

பெரிய அரசரானாலும், பலர்கூடிச் செய்வதே வேள்வியாக இருந்துள்ளது.

எனவே, அன்பால் கருத்து ஒருமித்துக் கூடி வாழ்ந்த தமிழரே வேள்வி முறையையும் கண்டறிந்தனர் என எடுத்துக் கொண்டு ஆய்வை மேற்கொள்ளலாம்.

தமிழினத்தின் வேள்விப் பண்பாட்டிற்கும், இத்தக்க நாடகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

வேள்வியைச் செய்யும்போது, அங்கு வந்திருந்தோர் முன்பாகத் தன்னைச் சிவனானவன் அவமதித்துவிட்டானே என்பதுதான் தக்கனின் சினத்திற்குக் காரணம்!

அந்த அளவுக்கு அக்காலச் சமுதாயத்தில் வேள்வி இடம் பெற்றிருந்தது என்பதே நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய பண்பாட்டுச் செய்தி.

யாகங்களில் பேசப்படும் அவிர்ப்பாகம் என்பது இறைச்சியே ஆகும்.

இவ்வகையில் எத்தனையோ ஆய்வுகளுக்கு நிலைக்களனாக இத்தக்க நாடகம் எனும் தமிழிசை நாடகம் திகழ்கிறது!

இந்நூலின் மெய்ப்புகள் திருத்துவதில் உதவிய திரு. கு. பெருமாள், எம்.ஏ, ஆர். பசுபதி மற்றும் நா. இலட்சுமிபதி ஆகியோருக்கு நன்றி.

அன்புடன்

முனைவர் சு. **சௌந்தரபாண்டியன்**
எம்.ஏ(தமிழ்), எம்.ஏ(ஆங்), பி.எட்,டிப்.வ.மா, பி.எச்.டி.
காப்பாட்சியர் அ.கீ.சு. நூலகம் சென்னை-5.

# HEART TO HEART

This is a musical drama with the story of Dhaksha.

Dhaksha belonging to the carpenter community was humiliated by Siva in a particular yaga. So, Dhaksha did not invite Siva to his own Sarpa yaga (Snake Yagna). This is the main reason for the interesting Dhaksha story.

Opening up new ways to further research this piece stands a solid evidence to Tamil (Carnatic) music.

This drama of unknown authorship may be ascribed to the 19th century A.D.

My thanks are due to the Director of Archaeology, Mr. K. Damodaran M.A. for his endeavours.

Dr. **S.Soundarapandian**
M.A.(Tamil), M.A.(Eng), B.Ed, Dip.Skt, Ph.D,
Curator, G.O.M.L., Chennai-5.

# தக்க நாடகம்

## விநாயகர் துதி

### நேரிசை வெண்பா

1. சீராரும் வேதனடி செய்தக்க நாடகத்தைப்
பேராரும் செந்தமிழாற் பேசவே - கூராரும்
வன்பரசு மானேந்தும் வள்ளற் றருஞ்சுதனை
அன்பினுட னேபணிகு வாம் !

(சுதன்-மகன், இங்கு விநாயகர்)

## சுப்பிரமணியர்

### எண்சீரடி விருத்தம்

2. பஞ்சதரு நினைத்த பொருள்தனை அளிக்க
பாங்குளகாஞ் சனநகரிற் பரிந்து வைகி
எநஞ்சலிலா வாழ்க்கையுறும் வாச வன்றன்
எழிலுளநற் புத்திரியை வதுவை செய்த

இஞ்சொலுமை மதலைவடி ஞாங்க ரத்தம்

ஏந்தியதி ராணிகுகன் சிகிமேல் எங்கும்

சஞ்சரிக்கும் சுப்பிரமண் ணியன்தாள் போற்றித்

**தக்கநா டகமதனைச் சாற்று வேனே!**

(இஞ்சொலுமை=இன்சொல்+உமை: சிகி-மலை : குகன்-முருகன்)

## மகாவிஷ்ணு

### *எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்*

3. சுருதியினைக் கவர்ந்தளக்கர் இடைஒளித்த

சோரனாகிய சோமுக னனாய திர்த்த

பொருதிசவட் டியஆண்மை மேவு மாலின்

புண்டரிக மலரனைய பொற்றாள் போற்றி

மருடலத்தில் யாவரையும் வரவ ழைத்து

மகஞ்செய்த வன்பிரமன் பெருவி ரற்கள்

பரிந்துதித்த தக்கனரு நாட கத்தைப்

பாவலர்மற் றவர்விரும்பப் பகடுவேனே!

(சுருதி-தேவம்: புண்டரிகம்-தாமரை)

## மகாலட்சுமி துதி

### கலிவிருத்தம்

4. ஒவி யத்தை உவமை சொல்லுமியன்
மேவி யச்செய்ய வண்மெல் லியவடிப்
பூவி னிற்பணிந் தேந்திப் புகழெங்கும்
தாவு **தக்கநன் நாடகம்** சாற்றுவாம்!

## *சிவன் துதி*

### *எண்சீர்க் கழிநெடில் விருத்தம்*

5. அருவிசொரி காஞ்சன மாதிரத்தை நென்னல்
ஆற்றலுடன் கொக்கரையாய் வாங்கிப் பொல்லா
திரிபுரர் மீதினிலே வெஞ்சமம் விளைக்க
சென்றபரா பரனமலன் கௌரி வாமம்
மருவியசங் கரனடிகோ கனகப் பூவை
வணங்கித் தௌத் தியம் செய்து மகிமை வேள்வி
பரிவுடன்செய் யத்தொடங்கும் தக்கன் காதை
பைந்தமிழால் நாடகமாய்ப் பகருவோமே!

(தௌத்தியம் செய்து - பூசித்துத் தொழுது)

## உமையவள் துதி

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

6. வனமுற்ற நீரோ ருகத்தை மான
வதனமர கதமேவு பாண்டிற் றோளும்
புனமுற்ற கிள்ளைநிகர் மொழியுங் கச்சு
பூண்டபுள கிதவிருகாம் மையுநீ ராரும்
கனமுற்ற பரிசார அம்பி கைப்பூங்
கழலிணையை அன்பினுடன் பணிந்து போற்றி
அனமுற்ற பிரமன்மகன் **தக்கன் காதை**
அம்புலியில் நாடகமாய் அறைகுவேனே!

(மான-ஒப்ப: கிள்ளை-கிளி)

## பிரமதேவர் துதி

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

7. சாகைமுழு தினுமுணர்ந்து வாரி சப்பூந்
திவிசினிற்சத் திடஉலகில் தங்கித் தூய
தோகைமயிற் சாயைசரஸ் வதியைத் தாரந்?
துன்னவைத்தே ஆன்மாவைச் சிருஷ்டி செய்யும்

வாகையுள இரணியகர்ப் பன்ப தத்தை

வணங்கித்துதித் தேபுவியிற் கிருது செய்ய

ஓசையுடன் தொடங்கியதக் கன்ச ரித்திரம்

ஓங்கிசைநா டகமாக உரைசெய் வேனே!

(சாகை- வேதம்)

## *கலைமகள் துதி*

### எண்சீர்க் கழிநெடில் விருத்தம்

8. பரவியதெண் டிரைத்துழனி வைகை யோணப்

பரணியினில் எதிரேறி வந்த மங்கை

பரமேட்டி யின்கிழத்தி சுவேத முற்ற

பங்கயத்தில் வீற்றிருக்கும் வாணி பாதம்

பரவிதௌத் தியஞ்செய்தே இரவி சோமன்

பலஇமையோர் பண்ணவரை வரவ ழைத்து

பரமனைநெஞ் கிற்கருதா தியாகம் செய்த

பதிதக்கன் நாடகம் பகரு வேனே!

(இரவி-சூரியன்: பரமனை- சிவனை)

## இதுவும் சரஸ்வதி துதி

### அறுசீரடி ஆசிரிய விருத்தம்

9. தலமதிங் கவிஞர் நெஞ்சந்
தங்கியே யெவையும் பாட
நலமுடன் வாக்க ளிக்கும்
நாமகள் மலர்த்தாள் போற்றி!
மலிபுகழ் பிரம தேவன்
வலதுகாற் பெருவி ரற்கண்
அலமுடன் வந்தோன் காதை
அரியநா டகம்சொல் வேனே!

(பிரம்மாவின் வலதுகாற் பெருவிரலில் உதித்தவன் தக்கன் என்கிறது இப்பாடல்: வலதுகைப் பெருவிரலில் உதித்தவன் தக்கன் என்று பழைய நூற்கள் சில கூறுவ)

## காளி துதி

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

10. வளைவான நீண்ட மருப்பிணையில் லாத
மங்குலுறழ் தாபரத்து மயிடன் முன்னே
இளையாமல் எதிர்த்த மரம் புரிந்த வீர
எண்டோளி மாதரிமுக் கண்ணி சூலி

தளையாரும் பதவனச மலரி றைஞ்சி

தௌத்தியம்செய் தேபுவியில் யாவ ருக்கும்

சளையாத திராணியுள தக்கன் காதை

தண்டமிழில் நாடகமாய்ச் சான்று வேனே!

(மயிடன் - ஓர் அசுரன்; அமரம் - போர்; அம்முச்சாரியை பெற்றது. எண்டோளி = எண் + தோளி; எண் - எட்டு)

## அவையடக்கம்

### எண்சீர்க்கழிநெடில் விருத்தம்

11. வெண்ணிறமார் வலம்புரி தண்டரள மன்னும்

விஞ்சுமலை நெருங்கும ரால யத்தை

திண்ணமைந்தோர் போலதனை விரைவில் தாண்ட

சிந்தையினில் ஊழ்த்தியசிற் றெறும்பு போல

அண்ணலிர ணியகர்ப்பன் சிருஷ்டி நாதன்

அம்புயக்காற் பெருவிரலில் அவத ரித்த

வண்ணமுயர் தக்கனரு நாட கத்தை

வாணர்முனம் மிகச்சிறியேன் வழங்கு வேனே!

(வெண்ணிறமார் - வெண்ணிறம் கொண்ட; தரளம் - முத்து; வாணர் - தமிழ்வாணர்)

## தோடையம்

இராகம் : நாட்டை தாளம் : ஜம்பை

12. திருமருவிய **இரணியகர்ப்பன்**

சிறுவனெனப் புடவியில்வந்த

கருதருதக்க ணங்காதை

களிப்புடனே சொலவே! - ஆஆ!

பொருதரு மதகய வானனமார்

பொலிவுறு முப்புரி நூற்றிவறம்

மருமம் விளங்கிய கணநாதன்

வாரிச வடிதுணையே! ஆ ஆ!

கருமையுடற் றகுவரி னீட்டங்

கண்டுவெருக் கொண்டிரி யவயில்

பெருமையுடன் விடுகுகன் அடியைப்

பெட்பினுடன் பணிவோம்! ஆ ஆ!

அருமையுடன் மகநிறை வேற்ற

அண்டரா திகளைவரு வித்து

குருமைகொ டக்கனருஞ் சரிதை

குவலயத்தில் சொலவே! ஆ ஆ!

எழுகந் தருவநனி கல்லருட

மீந்திட விரையில் பருப்பதமே

அழகிய கவிகையென ஏந்தும்

அரியத மலர்துணையே ஆ ஆ!

பழுதறு கதையம்பது பெற்ற

பாங்குள தக்கனருஞ் சரிதை

விழுமிய நாடகம் என்றுலகோர் "

வேட்கையுடன் கொளவே! ஆ ஆ!

கொங்கவிழ் மதலையலங் கன்மதி

கோடீரத்தில் வியந்துபுனை

சங்கரனுக் கொருபெண் ணீந்த

தக்கனாடகஞ் சொலவே ஆ ஆ!

பொங்கலை சீரவளக் கரினிற்

பொற்புடன் அவதரித்தே மன்னும்

மங்கள குணமலி செங்கமலை

மலரடிகள் துணையே ஆ ஆ!

பரிமளம் விஞ்சு சரோருகமாம்

பாங்குறு தவசினில் மன்னிநெடும்

பாவை யனந்தை படைக்குமியற்

பரமேட்டி யிணம்புய சரணம்!

பரவியெண் மாதிரர் சுரரிரவி

பனிமதி முனிவரை வருவித்து

பரமனை நீக்கிய தக்கனரும்

படர்சரிதை புகல்வாம் ஆ ஆ!

துளங்கிய வெண்கமலா சனமேற்

றுன்னிய வான்மணி பூணணியும்

விளங்கு புகழ்பெறு பாரதியின்

வியன்மலர் அடிபணிவாம் ஆ ஆ!

நளங்கள் மிசையினில் வைகுமயன்

நந்தன னாகபதம் வந்த

வளங்கொள் புகழ்தக்கன் சரிதை

வாஞ்சையுடன் சொலவே ஆ ஆ!

குஞ்சர மதள முரித்தகுணக்

குன்றாகிய தற்பரன் ஒளிசேர்

பஞ்ச முகத்துள சங்கரனற்

பதமகிழ்வாய்ப் பணிவாம் ஆ ஆ!

விஞ்சிய வெண்ணத் துடனரிய
வேள்வியைச் செயவா ரம்பித்த
செஞ்சிய தக்கன் சரிதமதைச்
சீருடனே சொலவே ஆ ஆ!

சுரகரி முகனயில் இலங்கைக்
கந்தனை ஈன்றஇளங் கொடியை
மரகத வல்லியினம் புயமா
மலரடிகள் துணையே ஆ ஆ!

விரதமுடன் கிருதினை செய்து
மேதகு பெறவே யுண்ணியவுட்
சரதமிகும் தக்கன் சரிதை
சாற்றிட நாடகமே ஆ ஆ!

மங்குனி காசத் தாபரமும்
வளர்பிறைபோல் வெண்வளை வெயிறுந்
தங்கிய மயிடத் தானவனைத்
தாக்கிய மாதரியைத் தொழுவாம்!
எங்கணு நன்கு சீர்த்தியுற
இணையறு மகஞ்செய்யத் தொடங்கும்

புங்கவ னாகிய **தக்கன்கதை**

புகன்றிட **நாடகமே** ஆ ஆ!

(கணநாதன்-விநாயகன்; குகன் - முருகன்; கொடக்கன் = கொள் + தக்கன்; குவலயம் - உலகு; கவிகை - குடை; சங்கரன் - சிவன்; பரிமளம் - நல்மணம்; சுரரிரவி = சுரர் + இரவி; புகலுதல் - சொல்லுதல்; குஞ்சரம் - யானை)

## மங்களத் தரு

**இராகம்: அசாவேரி** **தாளம்:அடதாளம்**

### பல்லவி

13. மங்களம் மங்களம் - ஜெயசுப
மங்களம் மங்களம்!

### அனுபல்லவி

அங்கய வானனத் தைங்கரறகுஞ் சொல்ல
அரியவனப்பு மிக்கமை வல்லபைக்கு நல்ல-மங்

திகழ்சுரர் துயர்தீர்த்த தேவர்சேனா பதிக்கும்
மகிழ்வள்ளி தெய்வயானை வதன மதிக்கும்-மங்

வரணத் திடர்தீர்த்த வயங்குஞ்சக்ர பதிக்கும்
தாரணியோர்க்குச் செல்வந்தரும் கிருபா நிதிக்கும்-மங்

இரசிதப் பருப்பத மியங்கும்பிறை முடிக்கும்
பரவிய புகழ்பார்வதி யாமிளங் கொடிக்கும் -மங்

உலகினைச் சிருஷ்டிசெய் தோங்குமறை யோனுக்கும்
இலகிய கல்வியை எவர்க்குந்தரு மானுக்கும்-மங்

வீரபத்திர னுக்கும் விளங்குமட்ட தோளும்
கூர்மை சூலங்கொள் கொற்றவைக்கு நாளும் -மங்

பிரமன் வலதுகாலிற் பிறந்தசிறு விதிக்கும்
அருமையாக அவனுக்(கு) அமைந்தகற்புச் சதிக்கும்-மங்

முப்பத்து முக்கோடி முதன்மையாக சுரர்க்கும்
தப்பில்லா வாறெட்டு சகஸ்திர முனிவார்க்கும்-மங்

மங்களம் மங்களம்- ஜெயசுப
மங்களம் மங்களம்!

(தேவர்சேனாபதி - முருகன்; வாரணம் - யானை; தாரணியோர் - உலகோர்; முதனீண்டது; இரசிதப்பருப்பதம் - வெள்ளிமலை; சுரர் - தேவர்)

## கட்டியக்காரன் வருகிற விருத்தம்

**இராகம் : தோடி**

14. சீருடன் சேக ரத்தில்
செய்யபா கையும்யு ணைந்து
ஏருடன் முண்ட கத்தில்
இலகவே திருமண் ணிட்டு
நேரிலா விறலி யங்கு
நிகழ்த்தரு தக்கன் வாசல்
தீரமாய்க் காத்தி ருக்கும்
திறைமைக்கட் டியன்வந் தானே!

(பாகை-தலைப்பாகை: முண்டகம்-நெற்றி)

### *வசனம்*

''அகோதெப்படி யென்றால், சிரசிலே சிவந்த பாகையைச் சிறப்பாகத் தரித்து, அலங்காரமாக நெற்றியிலே திருநாமம் பிரகாசிக்க வணிந்து, ஒருவரும் சமானம் சொல்ல அருமையான **தஷகப் பிரம்மாவின்** கொலுவாசலைக காததுக் கொண்டு இருக்கும் பராக்கிரமம் பொருந்திய தைரியவாணாகிய கட்டியக்காரன் வருகிற விதங்காண்க!''

## கட்டியன் வருகிற தரு

**இராகம் : மத்தியமாவதி** **தாளம்: ஆதி**

### பல்லவி

15. அஷ்டதிசை முழுதும் மட்டிலாப் புகழ்பெற்ற
கட்டியக் காரன் வந்தான்- விதரணக்
கட்டியக் காரன் வந்தான்!

### அனுபல்லவி

துஷ்ட ஜனரை யெல்லாம்
சுட்டி அடிக்க வல்ல
சூரன் கொலுவை அலங்
காரம் செய்ய நல்ல-அஷ்ட

வேத்திரஞ் தனையெடுத்துக் - கரமதனில்
விளக்கமுற வேபிடித்து- வேலைசூழும்
தாத்திரி மனிதரைக் தருக்குடனே அதட்டி
பார்த்துப் பணியச்செய்யும் பண்பினிலே கெட்டி -
அஷ்ட

அழகிய நீண்ட நெற்றி- தனில்திருமண்
அணிந்த தடையலரை வெற்றி-செயுநதிறம்

விமுமமுடை யகத்திமென் மலர்க்கரம் கொண்டு

பழுதாக நீதியைப் பகர்வோர்களை வெகுண்டு -
அஷ்ட

சென்னியில் பாகை சூட்டி- தோளில்உருமால்

சிறப்பாக விடுத்தாட்டி- விதவிதமாய்

மின்னிய நவமணி விளங்குமார் அமரும்

மன்ன அணிந்துவெகு வகைவகையாய் தரும -
அஷ்ட

தக்கப் பிரமன் துய்ய - கொலுவாயலைத்

தானலங் காரம் செய்ய- வெகுவிரைவில்

மிக்க மகிழுடனே விளம்புமென் றனுக்கீடு

தக்க வாரரென்று தகுமானந்தத் தோடு! - அஷ்ட

(கொலு-சபை: அடையமலர்- பகைவர்: உருமால்-துண்டு;
மாரமரும்- மார்பில் கிடக்கும்)

## கட்டியக்காரன் சொல்

### கட்டியம்

16. சீர்பரவும் எண்பத்து நான்கி லட்சஞ்

தொகைத்திணையில் உள்ளோர் உரைசெயுஞ்

சீவனைச் சிருஷ்டிக்கும் அரணியன் பெருவிரல்

சீர்த்தி பெருகச் சனித்தோன்

ஆர்பரவு கசிபற்கு **பதின்மூன்று புத்திரியை**

அருமணம் செய்து வைத்தோன்

அந்தகன் எனுந்தரும ராஜனுக் கேழ்சுதையை

ஆர்வ முடனே கொடுத்தோன்

கூர்பரசு பாணிக் கொருமடந் தையைக்

கொப்பென வியந்த ளித்தோன்

குளிரம் புலிக்கிருத சத்தேழு மடவாலை

குணமன்றல் செய்த ளித்தோன்

தேர்பரவு பாவற்கோர் வனிதையைத் தந்த

சீர்த்தி விசுசித வுதாரன்

திகழ்பெற்ற நவரத்தின கொலுவிற்கு வருகிறார்

செயசுரர்கள் எச்ச ரிக்கை!

(சீர்த்தி-கீர்த்தி; கசிபற்கு-கசிய ரிஷிக்கு; சுதை-மகள்)

# தக்கன் வருகிற விருத்தம்

**இராகம் : தோடி**

17. பரந்தநல் வனப்பர் ஆனந்தந் தனியே
பாங்குறு திருமண் செப்பமதாய்த்
தரமுடன் விளங்க நிகமம் உச்சரித்து
தங்கவம் பரன்பதம் பணிந்து
உரமிசை வெளிறு முப்புரி நூலும்
ஒளிசெய உத்துங்க தண்டு
கரதலம் பிடித்துத் தட்சகப் பிரமன்
களிப்புடன் விரைவில் வந்தனனே!

(கரதலம் பிடித்து- கையிற் பிடித்து; உத்துங்க-உயர்ச்சி பொருந்திய)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், நல்ல அழகும் விசாலமும் உள்ள நெற்றியில் அலங்காரமாகத் திருமண் செவ்வையாய்ப் பிரகாசிக்க அணிந்து, வாயினால் தேவமந்திரங்களைச் சொல்லிக் கொண்டு, தங்கமயமான பொன் வஸ்திரம் தரித்த மகாவிஷ்ணுவின் திருவடியை வணங்கி, மார்பிலே வெண்மை நிறமான பூணுல் ஒளிசெய்ய, உயர்ச்சி பொருந்திய தண்டு கையிலெ பிடித்துக் கொண்டு, தக்ஷகப்பிரமன் துரிதமாகக் கொலுவிற்கு வருகிற விதங்காண்க!

# தக்கன் வருகிற தரு

இராகம் : மத்தியமாவதி                    தாளம் : ஆதி

## பல்லவி

18. தக்ஷகப் பிரமன் வந்தான்- கொலுவிருக்கத்

தக்ஷகப் பிரமன் வந்தான்!

## அனுபல்லவி

தட்சகப் பிரமன் வந்தான்

லட்சஞ் சேனைகள் சூழ

இட்சணம் ஈசனைப்

பட்சணம் செய்வேனென்று! - தட்ச

சிரவணத்தில் துதிக்க - அரியகுழை

தினகரன்போலே உதிக்க-விசாலநனி

பரவிய மார்பில் - எக்யோபவீதம் இரசிதம்யால்

பளபளப் பாயொளிர் பண்புடனே கொலுபால் -
தட்ச

மருங்கில் பட்டுடை துன்ன - புயாசலத்தில்

வளையுத்த ரீகம் மின்ன - இடைவிடாது

நெருங்கிய மணியாரம் நெடியவாகம் சொலிக்க

நிகழ்த்துமா முகத்தினில் திருமண் பிரகாசிக்க ! - தட்ச

தேவசாஸ்திரம் படித்து-மலர்க்கரத்தில்

விறலுள கதையைப் பிடித்து - யாவர்க்கு

நாதனாகும் நாராயண நாமம்உச் சரித்து

நான்முக னானபிதா சரணநமஸ் கரித்து-தட்ச

(இட்சணம்-இக்கணம்; எக்யோபவீதம்- பூணூல்; இரசிதம்-வெள்ளி; கொலுபால்-கொலுவிற்கு; புயம்-தோள்; அசலம்-மலை; புயாசலம்= புய+அசலம்; விறலுள-வெற்றியுள)

## கட்டியக்காரன் சொல்

### கட்டியம்

19. அஷ்டதிசை முழுதினும் அளவிலாப் புகழ்பெற்ற

அமலனே எச்சரிக்கை!

அருமறையை அனுதினமும் மத்தியான மோது

மதுலனே எச்சரிக்கை!

இஷ்டமுடன் ஆதுலர்கள் கஷ்டமது நீங்கநிதி

ஈயுமிறை எச்சரிக்கை!

எந்நாளும் இணையிலாச் செல்வநனி ஓங்கிய
ஏந்தலே எச்சரிக்கை!
பட்சமுடனே சிருஷ்டிக்கும் பிரம்மா வினது
பாலனே எச்சரிக்கை!
பாங்காக ஐம்பது மடவாலை ஈன்றுபுகழ்
படைத்தவா எச்சரிக்கை!
துஷ்டர்களைச் சங்கரிக்கும் பராக்கி ரமமிகு
தோளனே எச்சரிக்கை!
சுகிர்தமுள இமையவர்கள் புடைபரவ வாழ்கின்ற
தூயனே வெகுபராக்கு!

## முதல் மந்திரி சொல்

### விருத்தம்

இராகம் : தோடி

20. ஐந்தரு நீழலில் வைகும்
ஐராணி கேள்வன் ஆன
இந்திரன் இமையோர் போற்றுன்
இணையடிக் கமலம் போற்றி!

முந்தைநான் மறைகள் எல்லாம்

முகரிமை யுடனா ராய்ந்து

சிந்தையில் தெளிவு வாய்ந்த

செம்மல்நின் சரணம் போற்றி!

(முகரிமை-அறிவு)

***வசனம்***

''கற்பகத்தரு, காமதேனு, சங்கநிதி, பதுமநிதி, சிந்தாமணி யென்னும் பஞ்ச தருவினாதரவிலிருக்கும் ஐராணி கேள்வனான இந்திரனும் தேவர்களும் துதிசெய்யும் உமது இரண்டு பாதார விந்தமே சரணம்! பழைமையாகிய நான்கு தேவதங்களைப் பேரறிவுடன் கற்று ஆராய்ந்து, மனதின் கண்ணே தெளிவு உண்டாகிய பெருமையுடையவனே, உமது பாதமே சரணம், சரணம், ஐயா!''

## இரண்டாவது மந்திரி சொல்

### விருத்தம்

21. அரியசா கையைஉ ணர்ந்த

ஆற்றல்கா சிபமு னிக்கு

பிரியமாய்ப் பத்து மூன்று

பெண்களை வியந்த ளித்த

இருபிறப் பாளன் ஆகும்

எங்கள்ஆண் டவனே போற்றி!

மருமலி தோட கத்து

மானசெஞ் சரணம் போற்றி!

(கசியப முனிக்குத் தன் பதிமூன்று பெண்களை மணம்செய்து கொடுத்தார் தக்கன்)

**வசனம்**

"சொல்லுதற்கு அருமையான சுருதிகளை யறிந்த ஞானப்பிரகாச முள்ள **காசிய முனிவருக்கு இஷடத்துடன் பதின்மூன்று பெண்களைக்** கலியாணஞ் செய்து கொடுத்த **பிராமணனாகிய** எங்கள் **ஆண்டவனே** சரணம்! வாசனை மிகுந்த தாமரை மாரை யொத்த, சிவந்த பாதமே சரணம், சரணம், சுவாமி!"

## தக்கன் நீதி விசாரணையும்

### *மந்திரி விடையும்*

22. அணிகொண்ட இந்திரன் பாவகன்றன் சக்கர

ஆக்கினை நடத்து றாரா?

அமலனே வச்சிரதரன் செந்தழற் கடவுள்

ஆக்கினை நடத்தி வாரார்!

திணிகொண்ட கருமயிட மறலிநிருதி யுமவர்
செய்தொழில் நடந்து வருதா?
தேவனேசண்ட ஸிருதியும் அவர்கள் கீர்த்தியு
தீரமாய் நடந்து வருது!

துணிகொண்ட வருணனும் மருத்துவனும் அவரவர்
தொழில்நன் நடந்து றாரா?
தூயனே நற்புனற் கரசன் மருத்துவன்
தொழில்மிக நடத்தி வாரார்!

மணிகொண்ட வடதிசைக் கதிபதி யானவர்
வாகையை நடத்து றாரா?
வள்ளலே பிங்கலன் ஈசானயன் அவர்களும்
வண்டொழில் நடத்தி வாரார்!

(புனற்கரசன்- வருணன்)

## தக்கன் மந்திரிமாருடன் வீற்றிருக்கும் போது பிருகு மகாமுனி வருகிற

### விருத்தம்

கடிகமழும் வெண்மைச் சரோருகத் துதித்த
கவின்மேவு பாரதியின் காந்தன் செ

அடிவலது விரற்பிறந்தே எவர்க்கும் மேலாய்

அரியவரம் பெற்றிருக்கும் தக்கன் தன்பால்

படிமுழுதும் சிருஷ்டிசெயும் இணையில் லாத

பரமேட்டி மார்பினிலே முனம்பிறந்த

கடிந்தவர்கள் தொகுதியில் சிரேஷ்ட ரான

கனத்தபுகழ்ப் பிருகுமுனி வருகின் றாரே!

(கடி-மனம்; சரோருகம்-தாமரை; சிரேஷ்டர்-சிறப்பானவர்; பாரதி-சரசுவதி)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், வாசனை பொருந்திய வெள்ளைத் தாமரை மலரிலுதித்த அழகு பொருந்திய சரஸ்வதியின் புருஷனாகிய பிரம்மதேவரின் வலதுகால் பெருவிரலிற் பிறந்து, எவர்களுக்கும் மேன்மையாக யிருக்கும்படி அருமையான வரங்களைப் பெற்றிருக்கும் சகப் பிரமனிடம், பதினாறு லோகமும் சிருஷ்டிக்கும் பிரமதேவர் மார்பில் பிறந்த, முனிவர் கூட்டங்களில் சிறந்தவராகிய மிகுந்த புகழுடைய பிருகுமகாமுனிவர் வருகிற விதங் காண்க!''

# பிருகுவருகிற

## விருத்தம்

**இராகம் : சாவேரி**

24. அந்தமாய் முண்ட கத்தில்
அழலுறு திருமண் ணிட்டுப்
பந்தமாய் மருங்கி னல்ல
பட்டுவஸ் திரம்பு னைந்து
சுந்தரம் அதனிற் குல்லை
கண்ணியும் திகழ ஆகம்
தந்துமுப் புரியி லங்கத்
தகைபிரு கிருடி வந்தார்!

(மருங்கு-இடை; இருடி-ரிஷி; கந்தரம்-கழுத்து; குல்லை-துளசி)

## வசனம்

''இந்தப் பிரகாரமாக, அழகாக நெற்றியில் அலங்காரமாகத் திருநாமமிட்டு, இடையிலே பட்டுவஸ்திரம் தரித்து, கழுத்திலே துளசிமாலையுந் திறமாய் விளங்க, மார்பிலே முப்புரி நூலாகிய பூணூல் அசைய, நாம் பண்பு பொருந்திய பிருகுமகாரிஷி, தட்சகப் பிரம்மாவினிடம் வருகிற விதங் காண்க!''

## பிருகு வருகிற தரு

**இராகம்: சௌராஷ்டகம்** **தாளம்: ஆதி**

### *பல்லவி*

25. பிருகுமா முனிவர் வந்தார் - தக்ஷகனிடம்
பிருகுமா முனிவர் வந்தார்!

### *அனுபல்லவி*

பெருகிய நிகமமும் பிரணவங்களைப் பன்னி
அருமையாக நடந்தே அமலன் பதத்தையுன்னி-பிருகு
திருவடியினிலே நல்ல - பாதக்குறடு
சிறப்புமருவியே புல்ல - மதிவதனம்
மருமலி மலர்க்குழல் மாபுலோ மிசைகாந்தன்
தருமகுணம் பொருந்திற் தகையை அமைந்தகாந்தன் -
பிருகு
மூவரைக் குழந்தையாக - செய்வில்லாட்கு
மொழிந்த அதிவிவேக - நனிபொருந்தும்
மாவிரத சுசீலன்
மலரயனுக்குப் பாலன்
தேவர்கட்கனு கூலன்
சீர்த்தியிலே விசாலன்!-பிருகு

தோளில் எக்கியோபலீ தம்- அதைப்பார்த்தால்

சொல்லுவார் அதிஉன்ன தம்!- இவரெழிற்கு

வேளின்அழகை இணைவிளம்பப் போகுமோ இந்த

நாளிலொரு காரியம் நயஞ்சொல்லவே ஆனந்த - பிருகு

(பாதக்குறடு-காலணி; மருமலி- மணம் நிறைந்த; புலோமிசை என்பது பிருகு முனிவரின் மனைவி பெயர். புலோமிசை மூவரைக் குழந்தையாக்கிய கதையை சமதக்கினி நாடகம் எனும் நூலிற் காணலாம்; வேள்-மன்மதன்)

## தக்கன் பிருகு முனிவருக்குச் சொல்

### விருத்தம்

26. வதுவை மல்கிய கஞ்சத்தை

மாதவி செனவே வுற்ற

புதுமைநான் முகற்கு மார்பில்

புத்திரன் எனவே வந்த

துதிபெறு முனிவ ரேஉன்

துணையடி நளினம் போற்றி!

சதுர்மறை களுமு ணர்ந்த

தாபகர்க் கரசே போற்றி

(வதுவை-மணம்; மல்கிய- நிறைந்த ; கஞ்சத்தை-தாமரை மலரை; மாதவிசெனவே= மா+தவிசு+ எனவே; தவிசு-ஆசனம்; சதுர்-நான்கு)

### வசனம்

"வாசனை நிறைந்த தாமரைக் கமலத்தை பெருமை பொருந்திய ஆசனமாக வீற்றிருக்கும், ஆச்சரியமாய் நான்குமுகம் பெற்ற பிரம்மதேவருக்குக் குமாரனாக, அவர் மார்பிலே அவதரித்த கீர்த்தி பொருந்திய மகாமுனிவரே ! உமது இரண்டு பாதார விந்தமே சரணம், நான்கு வேதங்களும் அறிந்த ரிஷிகளுக்கு முதல்வராகிய பிருகு மகாமுனிவரே! சரணம், சரணம் சுவாமி!

## பிருகு தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : தோடி**

27. மேதினி தனில்எ வர்க்கும்
 மேன்மையா யிருக்க என்று
நீதமாய் வரத்தைப் பெற்ற
 நிகரிலா தவனே வாழி!
மாதினுக் கரசாம் தேவ
 வல்லிநா யகனே வாழி!
ஓதரும் திறம்ப டைத்த
 ஓங்கல்நேர் புயனே வாழி!

(மேதினி-உலகு; நீதம்-நீதி; ஓங்கல்-மலை)

### வசனம்

''பதினாலு லோகத்திலும் எவர்களுக்கும் மேலாக இருக்கவேண்டுமென்று வரம் வாங்கிய, ஒருவரும் சமானமில்லாதவனே வாழி! பெண்களுக்கெல்லாம் நாயகமாகிய வேதவல்லிக்கு நாதனே வாழி! யாவரும் சொல்லுதற்கு அருமையான புஜபல பராக்கிரமம் பொருந்திய தக்ஷகப் பிரமனே! வாழி!''

## தக்கன் பிருகுக்குச் சொல்

### கண்ணிகள்

**இராகம் : காம்போதி** **தாளம் : ரூபகம்**

28. விப்பிரர் நவப்பிரம் மாக்களுமே- சத்திர
வேள்விக்கு என்றனை வரவழைத்தார்!
முப்பத்து முக்கோடி தேவர்களும்-மகா
முனிவர்களும் கூட வீற்றிருந்தார்!

என்னைப்பெற்ற தந்தை பிரமனுக்குமிக
இயான்வணங்கி அங்கே தெண்டனிட்டேன்!
அன்னக்கொடி கொளன்தந்தை தனக்கன்(று)
அன்பாக யான்பணிந்து துதிபுரிந்தேன்!

சபைதனிலே இருந்த பேர்களெல்லாம் - எழுந்து
சடுதியிலே எனக்குத் தெண்டனிட்டார்!
சுபயாகத்துக்கு வந்தோர் முழுதும்- என்னைத்
தொழுது திருவடியில் சூழ்ந்து நின்றார்!

ஆல முண்டசிவன் எழுந்திராமல்- இருந்த
ஆங்கா ரத்தையான் என்ன சொல்வேன்?
கோல முள்ளஎனை சிவன்வணங்கா-அந்தக்
குறையையான் என்னவென்று சொல்வேனையா?

மாடேறியே பிச்சை வாங்கித்தின்று-வனத்து
மாதர்களை வலுவழித் தவன்காண்!
வீடேறிப்போய் பரவை நாச்சியின்பால்-சுந்தரர்
விரும்பியனையச் சந்தி பேசினவன்!

சுடலையிலே சஞ்சாரம் பண்ணி- சாம்பல்
தோய்ந்து பேயோடாடித் திரிகிறவன்!
நடலை செய்துபத்மா சூரனுக்கு-மனம்
நாணிஐ வேலிக்காய் ஒளித்தவன்காண்!

பிள்ளைக்கறிசோறுதின்னும் அவன்சுவாமி
பிழைப்புக் கஞ்சாநஞ்சை உண்டவனே!

உள்ளன்புள்ள கண்ணப்பன் நேத்திரம்

உகப்புடனே முன்னம் பிடுங்கிக் கொண்டான்!

இன்ன தன்மையுள்ள கொடும்பாவிக்கு - நல்ல

எழில்மேவும் பார்வதியை அளித்தேன்!

என்னசெய் வேன்பெண்ணைச் சிவனுக்கீந்த

என்மோ சத்தையான் என்னசொல்வேன்?

சூத்திரற்கும் வேதவித்தை சொன்ன - இந்தத்

தோஷம்போல இதுவாச்சு தையோ!

நேர்த்தியுள்ள தாமரை இலையில்-தளும்பு

நீர்போலுள்ளம் தத்தளிக்கு தையோ!

(நவம்-என்பது; ஆலம்-விடம்; சுடலை-மயானம்; பிள்ளைக்கறி-சிறுத்தொண்ட நாயனார் வீட்டில் சிவன் உண்ண அமர்ந்த கதை இங்கு சுட்டப்படுகிறது)

## தக்கன் பிருகு முனிவருக்குச் சொல்

### விருத்தம்

29. குருவென எனக்கு நண்ணும்

கோமுனி நாதா அந்த

மருமலி கடுக்கை மாலை

மதியணி நெடிய வேணி

அரனது நடக்கை தன்னை

அகத்தினில் எண்ணிப் பார்க்கில்

சரியென எவரும் சொல்லச்

சாத்திய மாகா தையா!

(கடுக்கை-கொன்றை; வேணி-பிறை)

### வசனம்

"(குருவாக எனக்கு எழுந்தருளி யிருக்கின்ற முனிவருக்குள் முதன்மையான நாதனே! வாசனை மிகுந்த கொன்றைமாலை, மூன்றாம்பிறை தரித்த, நீண்ட சடாபாரத்தை யுடைய அந்தச் சிவனிட தாழ்வான நடக்கையை மனதிலே நினைத்துப் பார்த்தால், சரியான செய்கை என்று ஒருவரும் சொல்லுதற்குச் சாத்தியப்பட மாட்டாது, பிருகு மகாமுனிவரே!"

## தசஷக பிரமனுக்கும் பிருகுக்கும் தர்க்கம்

**இராகம் : மோகனம்** **தாளம் : அடதாளம்**

### தக்கன்

30. முயலகன் தன்னை முனிவர்கள் அறிய

முக்கண்ணான் மதித்த தென்ன முனிநாதா!

பிருகு :

கயல்விழி பார்வதி கடும்சினம் கொள்ளவே

கண்டு மெரித்திட்டார் தக்ஷகனே!

தக்கன் :

எல்லோர்க்கும் முதல்வனாய் இருக்கும் ஈசனவன்

எருதேறியது என்ன முனிநாதா?

பிருகு :

சொல்லக்கேள் திரிபுரஞ் சேர்ந்தெரிக்கும் போது

சோதியப்படி வந்தார் தக்ஷகனே!

தக்கன் :

முத்தி கொடுக்கின்ற முக்கட் பகவனும்

முனிபிள்ளையைத் தின்றார் முனிநாதா!

பிருகு :

பத்தி யறியவென்று பாலனைக் கறியாக்கி

பாங்காய் எழுப்பிவிட்டார் தக்ஷகனே!

தக்கன் :

எத்திசையும் புகழும் ஈசன் பார்வதிதன்னை

இடத்தில் வைத்ததென்ன முனிநாதா?

பிருகு :

சுத்தி வலம்வந்த சூதன் பிருங்கிக்காக

சுருக்காய் இடத்தில் வைத்தார் தக்ஷகனே!

தக்கன் :

ஓடு கரத்திற்கொண்டே உலகம் முழுமையும்

ஊரூராய் இரந்தானே முனிநாதா?

பிருகு :

ஈடில் கபாலம் நிரம்ப வேணுமென்று

எங்கெங்கும் போயிருந்தார் தக்ஷகனே!

தக்கன் :

அந்தசிவன் என்றனடி பணியாத தாலே

அவனுறவை வேண்டேன் முனிநாதா!

பிருகு :

சந்திரனை முடித்த சங்கரன் உறவினைத்

தள்ளிவிட் டிடலாமே தக்ஷகனே!

தக்கன் :

அவனைத் தள்ளிவிட்டே அனைவரையும் அழைத்தே

அருமகஞ் செய்யவேணும் முனிநாதா!

**பிருகு :**

சிவனை நீக்கியொன்றுஞ் செய்யக் கூடாதவனைச்

சேர்த்துயாகம் செய்வாய் தக்ஷகனே!

**தக்கன் :**

சேர்த்து யாகமது செய்யாவிட்டால் என்ன

செய்வான் சொல்லும் சிவன்முனி நாதா?

**பிருகு :**

பூர்த்தியாக வேள்வி நிறைவேறு தற்கொரு

புன்கண் உண்டாகுமே தக்ஷகனே!

(முக்கண்ணான் - சிவன்; கயல் - மீன்;
மெரித்திட்டார் - மிதித்திட்டார்; வழக்குச்சொல்;
எருதேறிய = எருது + ஏறிய; முனிபிள்ளை - சிறுத்தொண்ட
நாயனார் பிள்ளை; புன்கண் - இடையூறு)

## தக்கன் பிருகுக்குச் சொல்

### விருத்தம்

31. நவப்பிர மாக்கள் சேர்ந்து

நாடிச்செய் யாகத் திற்கு

இவர்தலாய் எனைய ழைத்தார்

இயாவரும் வந்தி ருந்தார்!

அவரெலாம் என்ற னுக்கங்(கு)

அடிபணிந் தேது தித்தார்!

சிவனெழுந் தெந்த னைத்தான்

சேவியா திருந்திட் டானே!

(இவர்தலாய்- அன்பாய்;சேவியா-வணங்கா)

**வசனம்**

''கேளும், பிருகு மகா முனிவரே! ஒன்பது பிரம்மாக்கள் சேர்ந்து, ஓர் இயாகஞ்செய்தார்கள்! அந்த யாகத்திற்கு யான் போயிருந்தேன்! அவ்விடத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள், கருட, காந்தருவர், சித்தர், வித்தியாதரர், அஷ்ட திக்குப் பாலகர், பதினோருருத்திரர், பன்னிரண்டு சூரியர் முதலிய இயாவரும் வந்திருந்தார்! சிவனும் வந்திருந்தான். என்னைக் கண்டு, அவர்களெல்லாம் எழுந்து வணங்கினார்கள்! சிவன், எழுந்திராமலும், என்னை வணங்காமலும் ஆங்காரத்துடன் உட்கார்ந்திருந்து அவமதிப்புச் செய்தான்! அப்படிப்பட்டவனை நான் செய்யும் யாகத்திற்கு எப்படி அழைக்கிறது சொல்லும் பிருகு முனிவரே!''

# இதுவும் தக்கன், பிருகு முனிக்குச் சொல்

## தரு

**இராகம் : சௌராஷ்டகம்** **தாளம் : ஆதி**

### *பல்லவி*

32. எப்படி அழைப்பேன் காணும்! - பேயாண்டியை
எப்படி அழைப்பேன் காணும்!

### *அனுபல்லவி*

செப்புமோர்பிள்ளை குளந்தெரு வழியினில் வைத்தான்
ஒப்பி ஒருவனை வேடுவச்சிக்கே ஒப்புவித்தான்! -
எப்படி

சுடலை தன்னில் ஆடினான்- ஓடெடுத்துச்
சூழ்தெரு எங்கும் பாடினான்! -தனதுபெரு
உடலிலொரு பாதியை உமையவட் களித்தானே!
தலையிலொரு பெண்ணைத் தான்சுமக் கின்றவனை!-
எப்படி?

பிள்ளை தின்றது மல்லாமல் - வேடனெச்சில்
பெலியுடனும் நில்லாமல் - அக்கிரமமாய்

துள்ளப் பிரமதேவன் தூய்தலை சாடினோனை

கள்ளக் காளியுடனே கால்தூக்கி ஆடினோனை! - எப்படி?

வஞ்சமாய் ஓடி ஒளித்தான்- பத்மாசூரனை

மாய்க்க மாலினை விடுத்தான்- மதிப்பதற்கு

கொஞ்சமும் நன்னடக்கைக் குணமவனுக் கேது?

அஞ்சவேண்டாம் அகத்துக்கவன் வரதேவத காது! - எப்படி?

நமது குலத்துக் கேற்ற - ஒழுக்கங்கள்

நண்ணி இருக்கிறதா சாற்ற- அயோத்தியாள்

விமலர்ஸ்ரீ ராமனுக்கு விறற்குரங் காய்வந்து

சுமந்துகொண் டேதிர்ந்த துஷ்டன் தனையுவந்து- எப்படி?

(குளந்தெரு வழியினில் வைத்தான் என்றது பிள்ளையாரை; வேடுவச்சிக்கே ஒப்புவித்தான் என்றது முருகனை; மால்-திருமால்; அகத்துக்கு-வீட்டுக்கு)

## தக்கன் பிருகு முனிவருக்குச் சொல்

### விருத்தம்

33. சொல்லரும் தவத்தில் ஓங்கும்

துறவோர்கள் பணிந்து போற்றும்

நல்லசர்க் கிர்த்தி யங்கள்

நாடிச்செய் குருவே கேளும்!

எல்லையில் தவம்இ யற்றி

ஏற்றமாய் வரமும் பெற்று

மெல்லியைக் கடவு ளர்க்கு

விவாகஞ்செய் மேன்மை சொல்வேன்!

**வசனம்**

''இயாவருஞ் சொல்லுதற்கு அருமையான தவத்தினா லுயர்ந்த துறவோராகிய மகா ரிஷிகள் வணங்கித் துதிசெய்யும் நன்மையான சத்காரியங்கள் செய்யும் குருசுவாமியே, கேளும்!

அடியேன், அளவில்லாத தவத்தைச் செய்து, மேன்மையடையும் படிக்கு வரம்பெற்று, எனது குமாரத்திகள் ஐம்பது பேர்களைத் தெய்வத் தன்மையுள்ளவர்கள் வந்து கலியாணஞ் செய்துகொண்ட மேலான நடத்தைகளையும் விவரமாகச் சொல்லுகிறேனையா முனிவரே!

# தக்கன் பிருகுக்குச் சொல்

## தரு

**இராகம் : கலியாணி** **தாளம் : அடதாளம்**

### பல்லவி

34. என் பெருமையைப் பாடும்-சொல்லுதற்கிங்(கு)
இணையெனக்(கு) இல்லை யாரும்!

### அனுபல்லவி

துன்பம் எவர்களுக்கும் தோன்றிடாமல் என்றும்
அன்புவைத்தே காக்கும் அமலகுருவே இன்று - என்

### சரணங்கள்

மிகுந்த தவத்தில் உற்றேன்- எவர்களுக்கும்
மேலான வரமும் பெற்றேன் ! - நிகரிலாத
மகத்துபமாய் ஐம்பது மாதர்களை அளித்தேன்
சுகத்துடன் இருக்கவே சொகுசுடனே வளர்த்தேன்!
- என்

**சந்திரன்** என்னை அடுத்து-மூவொன்பது

தனையைக் கேழ்க்கக் கொடுத்து-யானனி

விந்தையாய் அவனுக்கு விரும்பிக் கல்யாணஞ்செய்(து)

அந்தமுடன் வாழ்க்கை அமைந்திருக்
கின்றான்மெய் - என்

இயலுடனனே தெக்கணம் - அரசு செய்யும்

**இயமனுக்குத் திருமணம்** - செய்தேழ் பெண்ணை

நயமுடனே அளிக்க நாகர்களும் துதிக்கும்

பயம்விசு வாசமாய்ப் பணிந்துகரம் குவிக்கும் -
என்

**காசிபமுனிவ னுக்கு** - பதின்மூன்று

கன்னியைக் கொடுத்தே னிக்கு- வலயத்தினில்

மீகரமாய்ப் பரவ விர்த்தியுடன் டாச்சுது

ஆசிலா அப்புகழ் அகண்டமும் ஆச்சுது!-
என்

**பரமனுக்** கோர் மாது- பாவற்கோர்பெண்

பரிந்தளித் தன்பார் மீது- மற்றொருபெண்ணைத்

திறமாங் கௌதமற்குச் சிந்தை மகிழ்ந்தந்தேன்!

பரவிய மகிமையால் பலருக்குமே சிறந்தேன்! -
என்

(தனையையை= தன்+ஐயை+ஐ; அந்தம்-அழகு; ஆசிலா-குற்றம் இல்லாத)

**தக்கன் வசனம்**

''இப்படிப்பட்ட பெரிதான சற்கீர்த்திப் பிரதாபமுள்ள பிரமதேவர் புத்திரனாகிய நான், இந்த அற்பமான சிவனை அழைத்து வைத்துக் கொண்டு, யாகத்தை யெவ்விதஞ் செய்யலாம்? சொல்லும், பிருகு முனிவரே!''

## *பிருகு, தக்கனுக்குச் சொல் விருத்தம்*

**இராகம் : தோடி**

35. இப்புவிச் சுடலை வாசம்
எய்தியே இருந்தா லும்சீர்
செப்பிய வீதி தோறும்
திரிந்தன் மிகவி ரந்தே
எப்படிக் கிருந்தா லும்தான்
ஈசனைத் தள்ளி விட்டே
ஒப்பிலா யாகம் செய்ய
உன்னவும் ஆகா தப்பா!

(மிகவிரந்தே= மிக + இரந்தே; உன்னவும்- கருதவும்)

## வசனம்

"கேளும், தக்ஷகனே! இந்தப் பூமியில், மயானத்தில் வாசமாக இருந்தாலும், சிறப்புள்ள வீதிகள் தோறும் திரிந்து வீடு வீடாய்ச் சாதம் பிச்சைவாங்கிப் பொசித்து எந்தவிதமாகப் பரமசிவன் இருக்கினும், அவனைத் தள்ளிவிட்டு, மற்றவர்கள் சேர்ந்து, என்றும் சமானமில்லாத பெரிய யாகஞ் செய்ய நினைக்கவே கூடாது, தக்ஷகனே!"

(பொசித்து-புசித்து)

## தக்கன் பிருகுக்குச் சொல் விருத்தம்

**இராகம் : தோடி**

36. அற்பனல் ஈச னாலே
ஆகிற காரி யங்கள்
நற்பயன் என்று நெஞ்சில்
நாடவே வேண்டாம் ஐயா!
விற்பனர் எவரும் போற்ற
வேள்வியொன் றிவ்வி டத்தில்
அற்புத மாக நீரும்
அரனைநீக் கிச்செய் வீரே!

(அரன் - சிவன்)

## வசனம்

''கேளும், சுவாமி! அற்பமான குணமுள்ள சிவனாலே ஆகப்போகிற காரியம் ஒன்றுமில்லை! அவன் செய்யுங் காரியங்களில் பிரயோசன முண்டாகுமென்றும் நினைக்கவே வேண்டாம்! தெளிவுள்ள பெரியோர்கள் எவரும் போற்றும்படிக்கு ஒரு யாகம் சகலமான பேர்களும் அதிசயமடையும் படிக்கு இந்த இடத்தில் செய்ய வேணும், சிவனை நீக்கிவிட்டுச் சுவாமி!''

## *பிருகு, தக்கனுக்குச் சொல்*

### *அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

37. மீசுர மேன்மை யாக
        மிடலுடன் இருக்க என்று
    மாசிலா வரத்தைப் பெற்ற
        வள்ளலே கலைக்கோட் டாரைப்
    பேசியே அழைத்து வந்து
        பிரபல யாகம் தன்னை
    நேசமாய் நடத்தச் சொல்லி
        நிறைவேற்றிக் கொள்ளு வாயே!

(கலைக்கோட்டார் - கலைக் கோட்டு முனிவர்)

### வசனம்

''கேளும், மேன்மையுடன் அதிக வல்லமையாய் இருக்க வேணுமென்று குற்றமில்லாத வரத்தைப் பெற்ற தக்ஷகனே! கலைக்கோட்டு மகாமுனிவரை அழைத்துக் கொண்டுவந்து, அவரால் இந்தப் பிரபலமாகிய சர்ப்ப யாகத்தை அன்புடனே நடத்தச் சொல்லி, பூர்த்தி செய்து கொள்ளுவாய் எனது சீஷனாகிய தக்கனே!''

## தக்கன், பிருகுக்குச் சொல் விருத்தம்

**இராகம் : சாவேரி**

38. கருதரும் புகழின் மிக்க
கடிந்தவர் எல்லாம் போற்றும்
பிருகுமா முனிவ ரேஅப்
பிழையிலாக் கலைக்கோட் டாரைப்
பெருமையாய் யாகம் செய்யப்
பெட்புடன் அழைக்கு மார்க்கம்
தெரியவே உரைக்க வேண்டும்
சிறியனும் உணரத் தானே!

### வசனம்

''அருமையாகக் கீர்த்தியிலே மிகுந்த மகா முனிவர்களெல்லாம் துதி செய்யும் பிருகு முனிவரே! குற்றமில்லாத கலைக் கோட்டு

முனிவரைப் பெருமை பொருந்திய யாகஞ் செய்ய அன்புடன் அழைக்கும் பக்குவமான மார்க்கத்தைத் தெரியும்படிக்கு அடியேனுக்குச் சொல்ல வேணுமையா எனது குருநாதரே!''

## பிருகு, தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : மோகனம்**

39. தக்கனே இனிதாய்க் கேளும்
காற்றுமெவ் வர்ன காலப்
பக்குவ முள்ள ரூபப்
பாவையர் இரண்டு பேரை
மெய்க்குவஸ் திரமில் லாமல்
விடுத்தவ ரிடம்ப ழங்கள்
மிக்கவே கொடுத்த னுப்பில்
விரும்பியே வருவார் அப்பா!

(ரூபம்-உருவம்; எவ்வர்ன - யௌவன- இளமையான)

### வசனம்

''நான் சொல்லுகின்ற வார்த்தையை இஷ்டமுடன் கேட்டுக்கொள்ளும் தக்ஷகனே! ரூபலாவண்ணியமும் எவ்வர்ன

காலம் தகுதியாக இருக்கும் இரண்டு ஸ்திரீகளை அழைத்து, அவர்களிடத்தில் நல்ல மதுரமான மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் இதுகளைக் கொடுத்து அனுப்பி, அந்தக் கலைக்கோட்டு முனிவரைக் காணும்போது, அவர்கள் வஸ்திரங்களைக் களைந்து நிர்வாணமாகப் போய்க் கண்டு, பழவர்க்கங்களை அவரிடம் வைத்தால் அதை எடுத்துக் சாப்பிட்டு, அந்தஸ்திரீகளைப் பார்த்து ஆசைகொண்டு, அவர்கள் கூடவே வருவார் தக்ஷகனே!

## தக்கன் பிருகு முனிவருக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : மத்தியமாவதி**

40. நல்லது தேவ ரீரும்
நவின்றஅப் படியே யானும்
மெல்லியர் தமைய ழைத்து
மிகுதஅக் கலைக்கோட் டாரை
வல்லமை உடன்அ ழைத்து
வரும்படி திட்டம் செய்து
சொல்லிய அவரால் கேள்வி
துரிதமாய் முடிப்பேன் சுவாமி!

(மெல்லியர்-பெண்கள்)

### வசனம்

"கேளும், பிருகு முனிவரே! தேவரீர் அடியேனுக்கு உத்திரவு செய்த பிரகாரம் எவ்வர்ன பருவமுள்ள இரண்டு ஸ்திரீகளை அழைத்துத், தவத்திலே மிகுந்த கலைக்கோட்டு முனிவரை அவர்கள் வசத்தில் வருவித்து, அந்த முனிவரைக் கொண்டு யாகத்தைப் பூர்த்தி செய்கிறேன் சுவாமி!

## பிருகு முனிவர் சொல் பரணி

41. உன்னரும் வடிவோய்

உன்னினை வின்படி

பன்னரும் யாகம்

பாங்குடன் செய்வாய்!

### வசனம்

"இயாவரும் நினைப்பதற்கு அருமையான, அழகுள்ள தக்ஷகனே! உன் மனதிலே நினைத்த எண்ணப் பிரகாரம் சொல்லுவதற்கு அருமையான யாகம் பாங்காகச் செய்து முடிப்பாய் தக்ஷகனே !"

## தக்கன் மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : மத்தியமாவதி**

42. அறிவினிற் சிறப்பு வாய்ந்த
அமைச்சரே சொல்லக் கேளும்
மறுவிலாக் கலைக்கோட் டாரை
மகஞ்செய வரவ ழைக்க
சிறுநுதற் பவளச் செவ்வாய்
தேன்மொழிச் கணிகை மாதர்
உறுமழ குடைய ராக
உகந்திரு வரைய ழைப்பாய்!

### வசனம்

"கேளும், சிறந்த அறிவினையுடைய மந்திரி, களங்கமில்லாத புகழ்படைத்த கலைக்கோட்டு மகாமுனிவரை, சிவனை நோக்கிச் சர்ப்பயாகஞ் செய்வதற்கு, அம்முனிவரை வரவழைக்க வேணும்! சிறுத்த நெற்றியும் பவளம் போன்ற வாயும், தேன்போலும் மதுரமான வசனமும் பொருந்திய தேவதாசிகளில் ரூபலாவண்ணிய முடைய இரண்டு ஸ்திரீகளைச் சந்தோஷத்துடன் வரவழைப்பாய் மந்திரி!"

## மந்திரி, தக்கனுக்குச் சொல்

### பரணி

43. ஐயனே தேவர்

அருளிய படியே

தையலார் இருவர்

தான்வரச் செய்வேன்!

(தையலார்- பெண்கள்)

### வசனம்

''கேளும், சுவாமி!தேவரீர் உத்திரவுப் பிரகாரம் ரூபலாவண்ணியமுள்ள இரண்டு ஸ்திரீகளை வரவழைத்திருக்கிறேன், தக்ஷகப் பிரம்மாவே!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

44. கட்டியக் காரா கேளாய்!

கருத்துடன் விரைவிற் சென்று

பட்டிகை அணிந்த கொங்கைப்

பரத்தையர் இருவர் தம்மை

மட்டிலாக் கீர்த்தி தக்கன

வாஞ்சையாய் அழைத்தார் என்று

அட்டியில் லாமல் இப்போ

அழைத்துநீ வருகு வாயே!

(பட்டியை-முலைக்கச்சு; வாஞ்சை-அன்பு; அட்டி-தடை)

வசனம்

''ஆரடா, அடா கட்டியக்காரா! நீ அதிசீக்கிரமாகப் போய், ரவுக்கை யணிந்த, தனபாரத்தையுடைய தாசிகன் இரண்டு பேரை, அளவில்லாத கீர்த்திபடைத்த தக்ஷகப்பிரம்மா இஷ்டத்துடன் அழைத்துவரும்படி சொன்னாரென்று தடையில்லாமல் இப்பொழுதே அழைத்து வருகுவாய் கட்டியக்காரா!''

## கட்டியன், மந்திரிக்குச் சொல்

### *பரணி*

45. தாவிய புகழ்சேர்

சாந்த குணத்தரே

தேவ தாசிகளைச்

சீக்கிரம் அழைப்பேன்!

(தாவிய-உயர்)

### வசனம்

''கேளும், கீர்த்தியும் சாந்த குணமும் மிகுந்த மந்திரிமாரே! இப்பொழுதே தேவதாசிகளைச் சீக்கிரத்தில் அழைத்துக் கொண்டு வருகிறேனையா!''

## கட்டியன் தாசிகளுக்குச் சொல்

### கொச்சகம்

46. கந்தரத் தினைப்பழித்த
கார்குழலும் வாணுதலும்
பந்தனைய கச்சுதனப்
பாவையரே! இப்பொழுது
மந்தரப் புயத்திறஞ்சேர்
வள்ளல்தக்ஷ கப்பிரமன்
சிந்தைமகிழ்ந் தேயழைத்தார்
தீவிரமாய் வருவீரே!

(கந்தரம்-நீர்மேகம்)

### வசனம்

''நீர்கொண்ட மேகத்தைப் பழித்த கறுத்த கூந்தலும், ஒளிவு பொருந்திய நெற்றியும், பந்தையொத்த ரவிக்கை யணிந்த

தனபாரமும் பொருந்திய பாவை போலும் உருவமுள்ள மாதர்களே! இப்பொழுது மந்திரமலை பொலும் பலம் பொருந்திய புயத்தினையுடைய வள்ளலாகிய தக்ஷகப் பிரம்மாவும் மன மகிழ்ச்சியுடன் உங்களை அழைத்துக்கொண்டு வரும்படி சொன்னார்! சீக்கிரமாய் வாருங்கள் தேவதாசிகளே!''

## தேவதாசிகள், கட்டியனுக்குச் சொல்

### பரணி

47. கட்டிய னேதக்

கனும்அழைத் ததினால்

தட்டுச்சொல் லாமல்

சலுதியில் வாரோம்!

(சலுதி-விரைவு)

### வசனம்

''அகோ! கேளும், கட்டியக்காரா! தக்ஷகப் பிரம்மா எங்களை அழைத்துவரும்படி உத்திரவு செய்ததால், தடை சொல்லாமல் சீக்கிரமாகப் போவோம் கட்டியக்காரா!''

## தேவதாசிகள் வருகிற விருத்தம்

**இராகம் : மத்தியமாவதி**

48. திருத்தமாய்ப் பரிகா ரத்தைச்
சீப்பினால் வாரிப் பின்னிக்
தரித்தசெங் கதிரைப் போன்ற
சடைப்பில்லை அதன்மேற் சூட்டிப்
படுத்த பயோத ரத்துப்
பட்டிகை இறுக்கிப் பாவில்
நிருத்தத்தும் வல்லோ ரான
நேரிழை யரும்வந் தாரே!

(பரிகாரம்-கூந்தல்; பயோதரம்-கொங்கை; பாவில்-பாடலில்;
நிருத்தம்-நடனம்)

### வசனம்

''செவ்வையாகக் கூந்தலை வாரிப்பின்னி, அதின்பேரில் கிரணங்களையுடைய சூரியனைப் போல் இரத்தினங்கள் பதித்து, பிரகாசிக்கும் உடைப்பில்லை தரித்து, பெரிதாகிய கொங்கை களுக்குக் கச்சணிந்து, பாட்டிலும் நடனத்திலும் வல்லமை யுடையவர்களாகிய தேவதாசிகள் தக்கனிடம் வருகிற விதங் காண்க!''

# தேவதாசிகள் வருகிற தரு

இராகம் : சாவேரி	தாளம் : ஆதி

## *பல்லவி*

49. தேவதாசிகள் வந்தார்- தக்ஷகனிடம்
தேவதாசிகள் வந்தார் !

## *அனுபல்லவி*

தேவதாசிகள் வந்தார்-ஆவல்நனி படர்ந்து
தூவி எகினமென்ன மேவு நடைநடநது- தேவ

## *(சரணங்கள்)*

பம்பரம் போன்றஇரு கொங்கை-நனிசிறந்த
பங்கய மலரிடு செங்கை- அம்பயிலயில்
அம்பர முற்பல மரவிந்த மளிவிழி
விம்பக்கனி வாயினில் விளம்பு மதுரமொழி-தேவ

தண்டை சிலம்பு பதத்தொலிக்க- இரத்தினகசித
தம்படராரம் மார்பில் சொலிக்க- வனம்புலவ
முண்டக நுதலினில் மொழியுந்திலதப் பொல்ட்டு
கண்டவர் மயங்கமை கனப்புருவத்தி லிட்டு-தேவ

அமலைசெயக் கரத்தில் தொடியும்-சிற்றிடைதனக்

கஞ்சும் வானின்மின்னும் தொடியும் -
பொன்னுலகில்வாழ்

இமயவரும் விருப்பமெய்து இரண்டு தோளும்

அமையெனவேசொல்ல அம்புயமலர்த் தாளும் -
தேவ

வடபத்திரம் எனலாம் குக்கி- தக்கனழைத்த

வார்த்தைகேட் டுள்ளமும் தருக்கி -
பாந்தளினெழிற்

படமனைய அல்குற் பகருங்கதலித் தண்டை

அடல்செயும் இருதொடை அறன் முகிலெனக்
கொண்டை - தேவ

(எகினம்- அன்னம்; பதம்-பாதம்; நுதல்-நெற்றி;
தொடி-வளையல்; அமை-மூங்கில்)

## தேவதாசிகள், தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

50. நிதங்கனிந் தாதுலர்க்கு

நிதிதரும் கொடையா போற்றி!

மதிகளிற் றெனவு லாவும்

வண்மைசேர் நடையாய் போற்றி!

எதிரிலா தெவரை யும்வெல்

ஏற்றவன் புயனே போற்றி!

கதிரென எவர்க்கு மேவோய்

கதித்தஆண் டவனே போற்றி!

(ஆதுலர் - இரப்போர்)

வசனம்

''சதாகாலமும் யாசகர்களுக்குத் திரவியம் கொடுக்கும் கொடையாளனே சரணம்! மும்மதம் மொழியப்பட்ட களிற்று யானை போல உலாவுகின்ற நன்னடை யுள்ளவனே, சரணம்! சமான மொருவருமில்லாமல் வெல்லும் மேன்மையும் வலிமையுமுள்ள புயாசலனே சரணம்! சூரியபகவானைப் போல மேலாக கதித்த எங்களாண்டவனே சரணம் சுவாமி!''

## தக்கன், தேவதாசிகளுக்குச் சொல்

### விருத்தம்

51. வனமுறு கிள்ளை வார்த்தை

மாதரே சொல்லக் கேளீர்

கனமுறு கலைக்கோட் டாரைக்

கலையிலா மற்போய்க் கண்டு

இனிமையாம் பழவர்க் கங்கள்

ஈந்தவர் உண்டார் ஆனால்

மனதிலுங் களைவி ரும்பி

வருகுவார் அழைத்து வாரீர்!

(கிள்ளை - கிளி; கலை - ஆடை)

### வசனம்

"கேளுங்கள், சோலைகளிலிருக்கின்ற கிளிப்பிள்ளைகள் போலும் வசனத்தையுடைய தேவதாசிகளே, தவத்தினால் பெருமை பொருந்திய கலைக்கோட்டு மகாமுனிவரை, வஸ்திரமில்லாமல் நிர்வாணமாகப் போய்க் கண்டு,மதுரமான பழவர்க்கங்களைக் கொடுத்து, அவர் புசிப்பாரானால், மனதிலே உங்கள் பேரில் ஆசை கொண்டு வருவார்! கூடவே அழைத்து வாருங்கள் மாதர்களே!"

## தேவதாசிகள், தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

52. தேவரீர் மொழிப்ப டிக்குச்

சீக்கிர மாயா ரண்யம்

மேவியே கலைக்கோட் டாரை

மெய்யுடை யின்றிப் புக்கி

ஆவலாய்ப் பழங்கள் நல்கி

அவர்வரும் படிசெய் தேநின்

காவினில் கொண்டு வந்து

கதழ்வுடன் தெரிவிப் போனே!

(ஆரண்யம் - கானகம்; கதழ்வுடன் - சீக்கிரத்தில்)

**வசனம்**

''கேளும், தக்ஷகப் பிரம்மாவே! தேவரீர் உத்திரவுப் பிரகாரம் அதிசீக்கிரத்தில் ஆரணியமாகிய காட்டிற்குப்போய், கலைக்கோட்டு முனிவர் இருப்பிடம் அறிந்து, அவரிடத்தில் வஸ்திரமில்லாமல் நிர்வாணத்துடன் யாங்கள்போய்க் கண்டு, ஆசையுடன் தின்னும் பழவர்க்கங்களைக் கொடுத்துச் சாப்பிட்டுப் பார்த்து, அவர் எங்கள் பின்வரும்படி செய்து, உம்மிட பூங்காவனத்தில் அழைத்துக் கொண்டு வந்து, சீக்கிரத்தில் உங்களுக்குத் தெரிவிக்கிறேன், எங்களாண்டவனே!''

## தக்கன் தேவதாசிகளுக்குச் சொல்

**பரணி**

53. மைப்புயல் கேச

வனிதைய ரேநீர்

எப்படி யாகிலும்

இட்டுவந்திடுவீர்!

*வசனம்*

"மேகம்போலுங் கறுத்த அளகபாரத்தை யுடைய ஸ்திரீகளே! நீங்கள் எந்தவிதஞ் செய்தாவது இவ்விடத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள், எனது அன்புள்ள தேவதாஸ்திரீகளே!"

## தேவதாசிகள், கலைக்கோட்டு முனிவரிடம் வருகிற தரு

**இராகம் : சங்கராபரணம்** **தாளம் : ஆதி**

பல்லவி

54. வனத்துக்கு வாராரே? - தேவதாசிகள்

வனத்துக்கு வாராரோ?

அனுபல்லவி

தனத்துக்கு மனத்தினில் தக்கன்தனை நாடிக்

கனத்த தவமகிமைக் கலைக்கோட்டாரைத் தேடி-வனத்

### (சரணங்கள்)

சங்கீதத் தாராய்ந்தே - தலமுழுதும்

தகுதியாய்ப் புகழ்வாய்ந்தே - இருப்பவர்கள்

துங்கநற் றவமுள்ள

துறவோரும் பரிந்தவர்

இங்கித முறச்சைகை

இனங்களும் தெரிந்தவர்! -வனத்து

கரத்தில் தொடி கனைக்கவே - செவியில் கேட்டோர்

கருத்தில் இன்பம் நினைக்கவே - தனமிருக்கு

முரத்தில் நவரத்தின முற்றவாரங் கிளர

பரந்தன்புள்ளோர் குயபம்பரத்தைக் கண்டே தளர! -
வனத்து

அம்பணத் தண்டே தொடை-தூவிசிறந்த

அனங்கண்டு நாணு நடை! -கொடியிடையார்

சம்பிர மாகவே சமர்த்துகள் பேசியே

அம்புய மலாரொத்த அஸ்தமும் வீசியே! -வனத்து

(சைகை-கைக்குறிகள்; தனமிருக்கு முரத்தில்=தனம்+இருக்கும்+உரத்தில்; அனங்கண்டு = அன்னம் + கண்டு; தொகுத்தல் விகாரம்; அஸ்தம்-கை)

## கட்டியன் சொல்

### எண்சீரடி விருத்தம்

55. படர்ந்த செடிதரு நிறைந்த கானத்தில்
பைந்தொடியார்க் குங்கரத்துப் பரத்தை மாதர்
திடம்பெருகும் தவத்துடைய கலைக்கோட் டாரைத்
தேடியவர் இருக்குமிடம் அதனை நோக்கி
உடலிலவர் அணிந்திருக்கும் துகிலை நீக்கி
உற்றநிர்வா ணத்துடனே பழவர்க் கங்கள்
கடிகமழ அம்முனிவர் முன்னே வைத்துக்
காணுவார் அவர்வரவைப் பேணு வாரே!''

(கடிகமழ - மணம் கமழ)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், நெருங்கிய செடிகளும், விருட்சங்களும் நிறைந்திருக்கும் காட்டிலே, பசுமை பொருந்திய வளையல் சப்திக்கும் கரத்திளையுடைய தேவதாசிகள் மகத்தாகிய தவ வல்லபமுள்ள கலைக்கோட்டு மகாமுனிவரைத் தேடி, அவர் வாசஞ் செய்யும் ஆசிரமத்தில் இருக்கப் பார்த்து, தங்கள் தேகத்தில் அணிந்திருந்த சேலைகளை அவிழ்த்து வைத்துவிட்டு, நிர்வாணத்துடனே பழவர்க்கங்கள் வாசனை பரிமளிக்க, அந்தக்

கலைக்கோட்டு முனிவர் முன்னே வைத்து, அவரைத் தெரிசனஞ் செய்து, அவர் தக்கமாநகரம் வரவேணுமென்று விரும்புவாரென்றறிக!''

## கலைக்கோட்டு முனிவர் தேவதாசிகளுக்குச் சொல்

### விருத்தம்

56. இந்தநல்லா சீர்மத்திற் கெய்தி
என்னி டத்தி லேதான்
வந்தவர் நீங்கள் யாவர்
மதுரமாம் பழவர்க் கங்கள்
தந்ததும் என்னத் திற்கு
சலுதியில் என்ற னுக்கு
அந்தம தாக இப்போ
அன்புடன் உரைசெய் வீரே!

(நல்லாசீர்மம்-நல்லாசிரமம்; அந்தமதாக-அழகாக)

### வசனம்

''கேளும், இந்த நலமான ஆசிரமத்திற்கு என்னிடம் வந்து இருப்பவர் நீங்கள் யார்? தித்திப்புள்ள மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் முதலியவைகள் என்னிடம் கொடுத்து என்ன

காரணம்? சீக்கிரத்தில் எனக்கு விவரமாக அன்புடன் சொல்லுங்கள், பார்ப்போம்!''

## தேவதாசிகள், முனிவருக்குச் சொல்

### விருத்தம்

57. நிலையுடன் ஆற்றல் செய்யும்
நெறியுள்ள முனிவர் கோவே!
நலமது ரப்ப ழங்கள்
நயமுடன் புசிப்பீ ரானால்
அலகிலா உருசி மார்க்கம்
அகத்திற்கே தெரியும் அந்த
பலமதை அறிந்தே உண்டு
பயன்தனை அறிகு வீரே!

(அலகிலா- அளவில்லாத; பலமதை-பழமதை; எதுகைநோக்கி இப்படி வந்தது).

### வசனம்

''நல்ல நிலைமையுடனே நின்று ஆற்றலாகிய தவத்தைச் செய்யும் நெறிமிகுந்த முனிநாதரே, கேளும்! நாங்கள் உங்களிடம் சமர்ப்பித்த இனிமையுள்ள பழவர்க்கங்களை யெடுத்து,

சாப்பிடுவீரானால் அளவில்லாத அதன் தித்திப்பு உங்கள் மனதுக்கே தெரியும்! அந்தப் பழத்தை யறிந்து உண்டு, அதன் பிரயோசனத்தைத் தெரிந்துக் கொள்ளும், மாதவத்தோரே!''

## கலைக்கோட்டு முனிவர் சொல்

### விருத்தம்

58. நல்லது நீங்கள் இப்போ
நவின்றவாக் கியப்ப டிக்கு
சொல்லிய பழத்தை யானும்
துய்த்துப்பார்க் கிறவ ரைக்கும்
மெல்லவே இவ்வி டத்தில்
மேவியே இருப்பீர் அப்பால்
புல்லவே உரைக்கேன் அன்பு
பொருந்துவீர் திருந்து வீரே!

### வசனம்

''கேளுங்கள், மாதர்களே! நீங்கள் இப்பொழுது என்னுடன் சொல்லிய சங்கதி, நல்ல காரியம்! அந்தப்படிக்கு நான் அந்தப் பழவர்க்கத்தைச் சாப்பிட்டு, அதன் தன்மையை அறிகிறவரைக்கும் இவ்விடத்திலேதானே இருங்கள்! அப்பால் உங்களைப்

போங்களென்றுஞ் சொல்ல இல்லை! செவ்வையாய் யிஷ்டத்துடன் இருப்பீர்கள், பெண்களே!''

## கட்டியக்காரன் சொல்

### பரணி

59. கவைமலி கனிகளைத்

துய்த்தமா முனிவர்

நவில்கணி கையர்க்கு

நயமுடன் உரைப்பார்!

### வசனம்

''இந்தப் பிரகாரமாக, அதிகத் தித்திப்புள்ள பழவர்க்கங்களைக் கலைக்கோட்டு முனிவர் சாப்பிட்டுத் திருப்திகரமாய் அவ்விடத்திலிருக்கிற தேவதாசிகளைப் பார்த்து, ஆசையுடனே சொல்லுகிற விதம் காண்க!''

# கலைக்கோட்டு முனிவர், தேவதாசிகளுக்குச் சொல்லுகிற

## விருத்தம்

**இராகம் : மோகனம்**

60. பரிவுடன் என்னைத் தேடிப்
பாங்குடன் இவிடம் வந்த
அரிவையே மதுர மாம்இவ்
அருங்கனிஇருப்ப தெங்கே?
உரிமையாய் நீங்கள் எங்கே
உற்றிருப்பதுமெ னக்குத்
தெரியவே சொல்லு வீர்கள்
சிந்தையும் மகிழத் தானே!

(உற்றிருப்பதுமெனக்கு = உற்றிருப்பதும் + எனக்கு)

## வசனம்

"மனவாஞ்சையுடன் என்னைத் தேடி விசாரித்துக் கொண்டு, இந்த இடத்தில் வந்து என்னைக் கண்ட மாதர்களே! மிகுதியாய்த் தித்திப்பு அமைந்திருக்கும் இப்போது கொண்டுவந்த பழம், எந்த இடத்திலிருந்து கொண்டு வந்தீர்கள்? நீங்கள் வாசஞ் செய்யும்

உரிமையான இடம் எங்கே? அதைத் தெரியச் சொல்லுங்கள், என் சிந்தை மகிழ்ச்சியுண்டாகும் படிக்கு மாதரே!''

## தேவதாசிகள், கலைக்கோட்டு முனிவருக்குச் சொல்

### எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

இராகம் : முகாரி

61. வளமையுறுந் தக்கன் நகரம் தன்னில்
வான்முகில்கள் தவழ்ந்துறை யுத்தியா னத்தில்
அளிமன்னி யுறைவதியாம் பழவர்க் கங்கள்
அவந்திகிளி முதலான பறவைக் கூட்டம்
உளமகிழப் புசித்துக்கிடக் கின்ற தந்த
உயர்கனியில் சிலவற்றைப் பறித்துக் கொண்டு
விளரியுடன் உம்மிடத்தில் வந்தோம் ஐயா
விரைமலர்க்கா வினைப்பார்க்க வருகு வீரே!

(விரைமலர் - மணமுள்ள மலர்)

### வசனம்

''கேளும், முனிநாதரே! சகலமான வளங்களும் தழைந்த தக்ஷகப் பிரமாவின் அருமையான நகரத்தில் ஆகாயத்தில்

தவழப்பட்ட மேகங்கள் வந்து வாசஞ் செய்கிறது! யாங்கள் பட்சியினங்கள் மனமகிழ்ந்து, அந்தத் தோட்டத்திலிருக்கும் பழவர்க்கங்களைப் புசித்துத் திருப்பிகரமாகி மீதியாய்க் கிடக்கின்றது. அந்தக் கனிகளில் கொஞ்சம் பறித்துக் கொண்டு தங்களிடம் சமர்ப்பித்தேன்!

அந்த வாசனை பொருந்திய, மலர் நிறைந்த பூந்தோட்டத்தைப் பார்க்க வாரும், ஐயா சுவாமி!''

## கட்டியக்காரன் சொல்

### கொச்சகம்

**இராகம் : புன்னாகவராளி**

62. இந்தவண்ணம் தாசிகளும் எடுத்துரைத்துத் தாமிருக்கும்
அந்தமிகும் தக்கனுறை அம்பதிக்குத் தானைடக்க
கந்தமலர்க் கோதையர்பின் கலைக்கோட்டு மாமுனிவர்
சிந்தைமிக வேமகிழந்து தீவிரமாய் வருவாரே!

(கந்தமலர்- வாசனைமலர்)

### வசனம்

''இந்தப் பிரகாரமாகத் தேவதாசிகள் பழங்களும் தாங்களும் இருக்கும் தோட்டத்தின் பெருமையை எடுத்துச் சொல்லி,

தாங்களிருக்கும் தக்ஷகப் பிரம்மா வாசஞ் செய்யும் அழகிய நகரத்துக்கு நடக்க, அதைப் பார்து, கலைக்கோட்டு மகாமுனிவர், அந்தத் தேவதாசிகள் பின் தொடர்ந்து, மகிழ்ச்சியுடனே சீக்கிரமாக வருகிற விதங் காண்க!''

## கலைக்கோட்டு முனிவர் வருகிற தரு

**இராகம் : மத்தியமாவதி** **தாளம் : ஆதி**

### *பல்லவி*

63. கலைக்கோட்டு முனிவர் வந்தார்- மகிமைபெற்ற
கலைக்கோட்டு முனிவர் வந்தார்!

### *அனுபல்லவி*

கலைக்கோட்டு முனிவர் வந்தார் -
அலைமுற்றும் புரண்டோட
நிலைக்கெட்டாப் பரமனை
மலர்தொட்டுப் பூசிக்கும் - கலை

பரவும் கீர்த்திவி சாலன் - சிறப்புள்ளவி
பாண்டு தந்தருள் பாலன்! - அதிகசீலன்
சரதமாய் மடந்தையர் தம்முகத்தைப் பாரா
விரதமுடை யோன்தயை விரிந்தபாரா வாரன் -
கலை

காவி காம்பரம் புனைந்து - கூவிளம்பிறை

கடுக்கை சூடியை நினைந்து- துதிசெய்வோன்

மேவும் தவத்தினில் மீசுரச் சிலாக்கியன்

ஆவலாய் அடுத்தோரை ஆதரிக்கும் யோக்கியன்! -

கலை

மான்கொம் பிரண்டு முகத்தில்-முளைத்திருக்க

வாசம் செய்பவர்க் ககத்தில்- அயோத்தியர்

கோன்தச ரதனுக்குக் குழந்தைக்காக யாகம்

மேன்மையாய்ச் செய்வித்த வுபுலன்மிகு

விவேகன்! - கலை

அம்போருகப் பூம்பாதம்- புனைந்தமிதி

அடியேயுயர் விநோதம்- சுவேதநிறம்

பம்பாகு மெக்கியோய வீதந்தோள் அணிந்தவர்

கெம்பீரமாய் வேதம் கேள்வியில் மிகுந்தவர்-கலை

(கடுக்கைசூடி-கொன்றை சூடி-சிவன்; கோன்-அரசன்;

சுவேதநிறம்-வெள்ளை நிறம்)

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

**இராகம் : தோடி**

64. மான்வயிற் றினில்உ தித்த

மாதவக் கலைக்கோட் டாரை

தான்மலி வளமே சான்று

தக்கமா நகரத் துற்ற

தான்செறி மலர்த்தோட் டத்தில்

கணிகையர் அழைத்துச் சென்று

மேன்மையாய் இருக்கச் செய்து

விளம்புவார் தக்க னுக்கே!

(கலைக்கோட்டு முனிவர் மான் வயிற்றில் பிறந்தவர் என்ற செய்தி இப்பாடலில் குறிப்பிடப்படுகிறது).

## தேவதாசிகள் தக்ஷகப் பிரமாவுக்குச் சொல் தரு

**இராகம் : மோகனம்** **தாளம் : அடதாளம்**

### பல்லவி

65. அழைத்து வந்தோம் கலைக்கோட்டம் - முனிவரனை

அருமையாக நம்பூந் தோட்டம்!

## அனுபல்லவி

சரச சல்லாபம் பேசியே - அதனைக்கேட்டுத்

தளர்வாய் மனது கூசியே - உடன்படப்

பரபரப் பாகவே பலஅபிநயம் காட்டி

கரவுடன் முனியைஎங் கைவசப்பட மாட்டி! -

அழை

அரும்பழ வர்க்கம் தன்னைக்- கொண்டுபுக்கி

அவர்திரு முகத்தின் முன்னை- வைத்துண்ணவே

உரிமையாக நல்கி உண்டுமன மகிழ்ந்து

பரிவுடன் எங்கள்பின் படர்ந்துவரப் புகழ்ந்து -

அழை

களபம் கஸ்தூரி சந்தனம் - வாசனை வீச

கனத்த செண்டனையதனம் - தனில்பூசியே

உளமெங்கள் மேலாவல் உறும்படி செய்தேவால்

உளபசுவின் பின்னேற் றோடியேவந்த தாற்போல் -

அழை

(கரவுடன்-மறைவாக; வஞ்சனையாக)

# தேவதாசிகள் தக்கனுக்குச் சொல்

## விருத்தம்

66. நாற்றிசை யோரும் போற்றும்
நவறக்கப் பிரம னேயாம்
ஏற்றமாம் கலைக்கோட் டாரை
இட்டுவந் துமது தோட்டம்
பாற்றகை உடன்இ ருத்திப்
பாங்குடன் உமக்குச் சேதி
சாற்றவே வந்தோம் ஐயா
சலுதியில் போய்க்காண் பீரே!

(நவறக்க= நவல்+தக்க; பாற்றகை= பால்+தகை)

## வசனம்

''கேளும், நான்கு திக்கிலுள்ள இயாவர்களும் துதிசெய்யும் தக்ஷகப் பிரம்மாவே! யாங்கள் மேன்மை பொருந்திய தலைக்கோட்டு முனிவரை அழைத்துக் கொண்டு வந்து, உங்கள் பூந்தோட்டத்தில் ஓரிடத்தில் ஒரு ஆசனமிட்டு, அதிலிருக்கும்படி செய்து, உங்களுக்கு அவர் வந்த சங்கதி சொல்ல வந்தோம்! சீக்கிரத்தில் போய் அவரைக் காணுங்கள், ஐயா சுவாமி!''

## தக்கன் சொல் தரு

இராகம் : சாவேரி தாளம் : அடதாளம்

### பல்லவி

67. மெத்த சந்தோஷம் ஆச்சு!- செய்யநினைத்த
வேள்வி முடிந்து போச்சு!

### அனுபல்லவி

கத்தனை உளத்தினில் வைத்த கலைக்கோட்டாரே
மெய்த்தவத் துடையோரே இத்தலம் வந்ததால் - மெத்த

கால முழுதும் அறிந்த-தன்மையும் நல்ல
கருத்து மிகவே சிறந்த - மதிமந்திரி
சீலமுள்ள விபாண்டு பாலனென உதித்த
சாலமணர் மறையுணர் விசாலன் வந்ததினால் -
மெத்த

இறைதச ரதற்கு நென்னல்-அரியபுத்திர
இயாகம் செய்வித்தோர் மன்ன- இன்றும்
நறைகுழல் கணிகையர் பிறகினில் வந்தது
நிறையு நமதிஷ்ட முறைமையல்ல வோமந்திரி -
மெத்த

*சகல கலைகள் ஓர்ந்து - மீசுரமான*

தகுந்த நூல்கள் ஆராய்ந்து-பெருமையுற்றோர்

சிகரக் கைலாசவாச பகவன் பதமலரை

அகமதில் துதிசெயும் *தகமுனி வந்ததால்!*-மெத்த

(சீலம்-ஒழுக்கம்; நென்னல்-நேற்று; பிறகினில்-பின்னே)

## தக்கன், மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

68. காலமூன் றறிந்து ரைக்கும்

கருத்துள்ள அமைச்சே கேளும்!

ஏலவார் குழலாள் ஆன

ஏந்திழை கணிகை யர்க்கு

சாலவே சரிகைச் சேலை

தமனியம் மிகவ ளித்து

கோலமாய் அவர்ம னைக்குக்

கொப்பென அனுப்பு வாயே!

(ஏலவார்-மணம் நிறைந்த; தமனியம்-பொன்)

### வசனம்

''இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்களையும் தெரிந்து எனக்குச் சொல்லும் கருத்தையுடைய மந்திரியே கேளும்! நீண்ட அளக பாரத்தையுடைய தேவ தாசிகளும் திரவியமும் அதிகமாகக் கொடுத்து, அலங்காரத்துடனே அவர்கள் வாழ்கின்ற வீட்டிற்குச் சீக்கிரமாக அனுப்பும் மந்திரி!''

## மந்திரி தக்ஷகப் பிரம்மாவுக்குச் சொல்

### பரணி

69. தூயனே உன்தன்
சொற்பிர காரம்
தையலர்க் குப்பொன்
தந்தனுப் புவனே!

### வசனம்

''கேளும், பரிசுத்த முள்ள தக்ஷகப் பிரமாவே! உமது உத்திரவுப் பிரகாரம் தேவதாசிகளுக்குத் திரவியமும் சரிகைச் சேலையும் கொடுத்து அனுப்புகிறேன், எனது ஆண்டவனே!

## மந்திரி, கட்டியக்காரனுக்குச் சொல்

### விருத்தம்

70. கட்டியக் காரா கேளாய்

கவினணி கணிகையர்க்கு

மட்டிலாப் பொருள்நி றைந்த

வளமிகு களஞ்சி யத்தில்

இட்டமாய் அவர்க்கு வேண

இருநிதி யுடனே நல்ல

பட்டுவஸ் திரமும் தந்து

பரிவுடன் அனுப்பு வாயே!

(கவினணி=கவின்+அணி)

### வசனம்

"ஆரடா, அடா கட்டியக்காரா! அழகிய ஆபரணந் தரித்த தேவதாசிகளுக்கு, அளவில்லாத பொருள்கள் நிறைந்திருக்கும் வளமை மிகுந்த பொறகளஞ்சியத்தில் தேவதாசிகள் மனோபீஷ்டத்திற்குக் குறைவில்லாமல் அவர்களுக்குத் திரவியமும் பட்டுச் சேலையும் கொடுத்து அன்புடனே அவர்கள் மனைக்கு அனுப்பும் பிள்ளாய், கட்டியா!

## கட்டியன் சொல் வசனம்

''அப்படியே கொடுத்து அனுப்புகிறேன் மந்திரிமாரே!''

## கட்டியக்காரன் சொல் பொது

### பரணி

71. மாதர்கள் வெகுமதி
வாங்கியே போனபின்
மாதவத் தக்கன்
மந்திரிக் குரைப்பான்

(மந்திரிக் குரைப்பான் = மந்திரிக்கு + உரைப்பான்)

### வசனம்

''இந்தப் பிரகாரமாக தேவதாசிப் பெண்கள் வெகுமதித் திரவியமும் சரிகைச் சேலைகளும் பெற்றுக் கொண்டு, அவர்கள் வீட்டுக்குப் போனபின்பு, பெரிதாகிய தக்ஷகப் பிரமன், தன் மந்திரிக்குச் சொல்லுகிற விதங் காண்க!''

## தக்கன் மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : காம்போதி**

72. பேரறி வினில்சி றந்த
பிரபல அமைச்சே கேளும்!
காரமர் பூந்தோட் டத்தில்
களிப்புடன் வந்து வைகும்
சீரணி கலைக்கோட் டாரைத்
தரிசனம் செய்தன் னோனை
வாரமாய் அழைத்துக் கொண்டு
வருகுவோம் வருகு வீரே!

(வாரமாய்-அன்பாய்)

### வசனம்

''பெரிதாகிய அறிவிலே சிறந்த, கீர்த்திபெற்ற மந்திரி! மேகங்கள் வந்திறங்கி வாசஞ் செய்யும் உயர்ச்சியுள்ள பூந்தோட்டத்தில், சந்தோஷத்துடன் வந்து யெழுந்தருளியிருக்கும் சிறப்புப் பொருந்திய கலைக்கோட்டு மகாமுனிவரைக் கண்டு, அன்புடனே நமது இருப்பிடம் அழைத்துக் கொண்டு வருவோம்! வாருங்கள், மந்திரி பிரதானிகளே!

## மந்திரி, தக்ஷகனுக்குச் சொல்

### பரணி

73. பெருந்தகை உடையோய்
பேசிய படியே
அருந்தவத் தோரை
அழைத்துவந் திடுவோம்!

(பெருந்தகை-பெரும்பண்பு)

### வசனம்

''பெரிய பண்பினையுடைய தக்ஷகப் பிரம்மாவே! தேவரீர் சொல்லிய படிக்கு, அரிதாகிய தவப்பலமுள்ள கலைக்கோட்டு மகாரிஷியை அழைத்துக் கொண்டு வருவோம், வாரும் ஐயா!''

## தக்கன், கலைக்கோட்டு முனிவரிடம் போகுதல் தரு

**இராகம் : தர்பார்** **தாளம் : அட**

### பல்லவி

74. வாரும் வாரும் மந்திரி-பிரதானியே
மாமுனியிடம் போவோம்!

## அனுபல்லவி

காரியங்கு முயர்வாரும்-பூஞ்சோலையில்

சூரியன்என வைகும் ஆரியனைக் காண-வாரும்

மனத்தினில் அணுவேணும் சினத்தைநண் ணாமலே

தினத்தினந்தகை வந்தனை செய்வோரைக் காண-வாரும்

நவ்வியின் வயிற்றினில் செவ்வியுடன் உதித்த

ஔவிய மில்லகுட் பல்லவமுனி யைப்பார்க்க-வாரு

ஓகையுட னேயாம் வேகமாகச் சென்று

சாகையை அறிந்தநிர் வாகனை அழைக்கவே!-வாரு.

(நவ்வி - மான்)

## கட்டியன் சொல்

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

இராகம் : தன்யாசி

75. வரையனைய மொய்ம்புதக்கன் இந்த வாறு

வழுத்தி மந்திரியாதி அனைவரைச்

சேர்த்துக்கொள்

அரியபல வீதிகடஞ் துயர்தோட் டத்தில்

ஆசனத்தில் எழுந்நருளி மதிபோல் வைகும்

பெரியஅரும் தவத்துடைய கலைக்கோட் டாரின்

பிரசமலர் அனையதிரு அடியில் வீழ்ந்து

பரிவுடனே ஆனந்த மனத்தன் ஆகி

பாடுவான் முனிவனைக் கொண்டாடு வானே!

(மதி - திங்கள்)

**வசனம்**

"அகோதெப்படி யென்றால், பர்வதம் போன்ற புயத்தினையுடைய தக்ஷகப் பிரமன், இந்தப் பிரகாரம் சொல்லிக் கொண்டு, மந்திரி முதலிய இயாவரையும் சேர்த்துக் கொண்டு, அந்த நகரத்துக்குச் செல்லுதற்கு அருமையான பலபல தெருக்கள் தாண்டி, உயர்வாக வளர்ந்திருக்கும் பூஞ்சோலையில் ஒரு ஆசனத்தில், பூரணச் சந்திரனைப்போல் எழுந்தருளி யிருக்கின்ற கலைக்கோட்டு மகாரிஷியின் தேன் பொருந்திய கமலமலர் போன்ற பாதத்தில் சாஷ்டாங்கமாக வணங்கி, மனவாஞ்சையுடன் சந்தோஷத்தை அடைந்து, பதங்கள்பாடி அம் முனிவரைக் கொண்டாடுகிற *விதங் காண்க!"*

# தக்கன் கலைக்கோட்டு முனிவருக்கு வந்தனஞ் செய்கிற தரு

**இராகம் : மத்தியமாவதி** **தாளம் : அட**

## பல்லவி

76. சரணம் சரணம் குருநாதா! - இன்று
தற்காத் தருள்புரியும் தாமரைப் பாதா! - சரணம்

## அனுபல்லவி

பரவும் விபாண்டுவின் சுதனே-இந்தப்
பாரெட்டும் துதிசெய்யும் தீர உன்னதனே! - சர

## சரணம்

வேந்தன் தயரதற்குத் தனியே-புத்திரகா
மேஷ்டியாகம் செய்வித்த தாஷ்டீக முனியே! - சர

கலையில் வயிற்றில் உதித்தவரே-எல்லா
கலைகளும் மாதவநிலை கதித்தவரே! - சர

என்றன் நினைவை ஈடேற்றி விடமகிழ்
எய்தவே யாகத்தைச் செய்திடீர் போற்றி! - சர

(கலை - மான்)

## தக்கன், கலைக்கோட்டு முனிவருக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : மத்தியமாவதி**

77. நல்ல மாதவருக் கெல்லாம்
நாயகன் எனவி ளங்கும்
வல்லபம் படைத்த எங்கள்
மாதவ முனியே மகளும்
பல்லவத் துடனவை விட்டேன்
பட்டணந் தனக்கிப் போதே
சொல்லிய கருணை கூர்ந்து
சுகமுடன் வருகு வீரே!

(நாயகன் - தலைவன்)

### வசனம்

''சிரேஷ்டமாகிய பெரிய தவத்தையுடைய முனிவருக்கு எல்லாம் முதல்வனாகப் பிரகாசிக்கும் தபோபலத்தையுடைய கலைக்கோட்டு முனிவரே, கேளும்! தளிர்கள் நெருங்கிய பூந்தோட்டத்தை விட்டு எனது நகரத்திற்குக் கிருபை செய்து வாருமையா, சுவாமி!''

# கலைக்கோட்டு முனிவர், தக்கனுக்குச் சொல்

## பரணி

78. இக்குவில் வேளனை
    ஏந்தல் உன்னில்லம்
  யக்குல மாகப்
    பரிவுடன் வருவேன்!

(இக்கு-கரும்பு; இக்குவில்-கரும்பு வில்; வேளன்-மன்மதன்)

## வசனம்

"கருப்பு வில்லையுடைய மன்மதனையொத்த பெருமையுள்ள உன் அரண்மனைக்கு அன்புடன் போகலாம் ஐயா, தக்ஷகப் பிரம்மாவே!"

# கட்டியன் வசனம்

"அகோ தெப்படி யென்றால், கலைக்கோட்டு முனிவரைத் தக்ஷகப் பிரமன் முதலிய பேர்கள் அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்து, ஆசனங் கொடுத்து, அதிலிருக்கச் செய்து, தக்ஷகப் பிரம்மாவுக்கு மனம் பூரித்து, கலைக்கோட்டு முனிவருக்குச் சொல்லுகிற விதம் காண்க!"

## தக்கன், முனிவருக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

79. முந்தைநாள் யான்பு ரிந்த
மொழிவரும் தவப்ப லத்தால்
இந்தநாள் உம்மைக் காண
எழுந்தரு ளினர்நீர் இங்கு
அந்தமாய்ச் சர்ப்ப யாகம்
அரனைநீக் கிச்செய் விக்கச்
சிந்தையில் நினைந்தே உம்மைத்
தீவிரம் அழைத்தேன் ஐயா!

(அரனைநீக்கி-சிவனைத் தள்ளி வைத்துவிட்டு; சர்ப்பயாகம்-பாம்பு யாகம்; சர்ப்பயாகம் நடத்துவது என்ற இக்குறிப்பு, ஊர்வளர்ச்சி வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. புதிய ஊர்களை உண்டாக்கும் போது, அங்குள்ள விலங்குகளை ஓட்டிக் கொல்வது அரசனின் கடமையாக அன்று இருந்தது)

### வசனம்

" கேளும், முனிநாதா! ஆதி நாளையில் யான் செய்த தவசின் பலத்தினாலே இந்த நாளில் உங்களைக் கண்டு தெரிசனஞ் செய்ய இவ்விடத்திற்கு எழுந்தருளினது என் பாக்கியமே! அழகாகச்

சர்ப்பயாகம், பரமசிவனை விலக்கிச் செய்து முடிக்க வேண்டுமென்று, மனதிலே நினைத்துத் தேவரீரைச் சீக்கிரமாக அழைத்தேன் சுவாமி!''

## கலைக்கோட்டு முனிவர், தக்கனுக்குச் சொல்

### எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

80. அருமையுறும் யாகமது நடத்த நாளை
அந்தணரால் நியமனஞ்செய் தண்ட முற்றும்
பெருமையுறு கருடகாந் தருவர் சித்தர்
பிரமன்ஹரி முனிவர்மலர் மடந்தை வாணி
குருமையுறு மாறிருவர் எண்ம ரிந்து
கூறுபதி னொருவரிமை யவர்க ளாதி
இருமையுறும் சர்ப்பயாகம் தனக்கு இங்கு
இயாவர்களும் வரநிருபம் எழுது வாயே!

(நிருபம் - கடிதம்)

### *வசனம்*

''கேளும், தக்ஷகப் பிரம்மாவே! சொல்லுதற்கு அருமையான இந்தச் சர்ப்பயாகம் செய்ய நல்ல முகூர்த்தநாள் அந்தணராகிய பிராமணர்களைக் கொண்டு நிச்சயஞ் செய்து, ஆயிரத்தெட்டு

அண்ட முழுமையும் கருட, காந்தருவர், சித்தர், வித்தியாதரர், பிரமதேவர்,மகாவிஷ்ணு, மகாலட்சுமி, சரசுவதி, பன்னிரண்டு சூரியர், அஷ்டதிக்குப் பாலகர், சந்திரன் பதினோரு உருத்திரர், முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள் முதலிய சகலருக்கும் பெருமை பொருந்திய இந்தச் சர்ப்ப யாகத்துக்கு இவ்விடம் வந்து சேருவீர்காளென்று திருமுகம் எழுதி வரவழைக்க வேணும் தக்ஷகப் பிரம்மாவே!''

## தக்கன், கலைக்கோட்டு முனிவருக்குச் சொல்

### பரணி

81. கர்த்தனே நீரும்
கழறிய படியே
பத்திரி கையையான்
பரிந்தனுப் புவனே!

(பத்திரிகை-அழைப்பிதழ்)

### வசனம்

''கேளும், கலைக்கோட்டு முனிவரே! நீர் சொல்லிய பிரகாரம் புஂராகுதரால யாகத்துக்கு நாள் ஏற்படுத்தி, சகல தேவர்களும் வேள்விப் பத்திரிக்கையை அன்புடனே அனுப்புகிறேன் முனிவரே!''

# தக்கன், மந்திரிக்குச் சொல் விருத்தம்

இராகம்: தோடி

82. திரிகாலம் உணர்ந்து ரைக்கும்
திறமைமந் திரியே கேளும்!
சரியான வேள்வி ஒன்று
தகைமையாய்ச் செய்யத் தக்க
விரிவான ஓர்தி னத்தை
வியந்துநிச் சயிப்ப தற்குப்
புரியாக நூலா ராய்ந்து
புரோகிதர் வரச்செய் வாயே!

(திரிகாலம்-முக்காலம்)

## வசனம்

"கேளும், மூன்று காலமும் தெரிந்து எனக்குத் திராணியுடனே சொல்லும் மந்திரி! கிரமமாக ஒரு யாகஞ் செவ்வையாக முடிப்பதற்குப் பெருந்த நன்மையுள்ள ஒரு நாளை, சந்தோஷகரத்துடன் நியமிப்பதற்கு விருப்பத்துடனே கணித நூலாகிய சோதிட சாஸ்திரங்களை ஆராய்ந்த புரோகிதரை வரவழைப்பாய் அமைச்சனே!"

## மந்திரி, தக்கனுக்குச் சொல்

### பரணி

83. தக்ஷகப் பிரமனே
சகல கல்வியின்மேல்
பக்ஷபபுரோ கிதரைப்
பரிந்தழைத் திடுவேன்!

### வசனம்

''கேளும், தக்ஷகப் பிரம்மாவே! சோதிட நூல் சகலமும் பட்சம் வைத்து அறிந்திருக்கும் புரோகிதரை அன்பாக அழைத்துக் கொண்டு வரச் செய்கிறேனையா!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல் விருத்தம்

84. திண்மை தைரியமும் உள்ள
செல்வக் கட்டியனே கேளாய்
வண்மை சோதிடநூல் ஓர்ந்த
மகத்துவம் மிகுந்தோர் ஆன
தண்மைப் புரோகிதரை இந்தத்
தக்ஷணந் தக்கப் பிரம்மா

உண்மையாய் அழைத்தார் என்றே

உரைசெய்திங் கழைத்து வாராய்!

### வசனம்

"கேளும், பராக்கிரமும் தீரமும் பொருந்திய பாக்கியமுள்ள கட்டியக்காரா! வளப்பமுடைய சோதிடச் சாஸ்திரங்கள் அறிந்த மிகுந்த பெருமையுள்ளவரான சாந்தகுணம் பொருந்திய நமது புரோகிதரை, யிப்பொழுதே தக்ஷகப் பிரம்மா அழைத்துவரச் சொன்னாரென்று சொல்லி, இவ்விடம் அழைத்துவாரும் பிள்ளாய் கட்டியக்காரா!"

## கட்டியன் சொல்

### பரணி

85. மதிமந் திரியே

வகைபுரோ கிதரை

அதிதுரி தமதாய்

அழைத்திதோ வாரேன்!

### வசனம்

"அறிவினிற் சிறந்த மந்திரியே! சோதிடத்திற் பலவகையுந் தெரிந்த புரோகிதரை அதிக சீக்கிரத்தில் அழைத்துக்கொண்டிதோ வருகிறேன், ஐயா சுவாமி!"

## கட்டியன் புரோகிதருக்குச் சொல்

### விருத்தம்

86. பிரபலச் சோதி டத்தில்
பிரகஸ்பதி யைநி கர்த்த
தாமுள புரோகி தஞ்சொல்
சதுர்மறை யவரே போற்றி!
திறப்புகழ் தக்கன் உம்மைச்
சீக்கிரம் அழைத்துக் கொண்டு
வரவெனக் காக்ஞா பித்தார்
மகிழுடன் வருகு வீரே!

(ஆக்ஞாபித்தார்-ஆணையிட்டார்)

### வசனம்

''சோதிடத்தில் பிரபல மிகுந்த தேவ குருவுக்குச் சமான முள்ளவரான புரோகிதரே, சரணம்! சாஸ்விதமாய்க் கீர்த்தி பெற்ற தக்ஷகப் பிரம்மா உங்களைச் சீக்கிரமா யழைத்துக்கொண்டு வரும்படி எனக்கு ஆக்கியாபித்தார்! சந்தோஷத்துடனே வாரும் சுவாமி!''

## புரோகிதர், கட்டியனுக்குச் சொல்

### வசனம்

"அப்படியே வருகிறேன், கட்டியக்காரா!"

## புரோகிதர் வருகிற விருத்தம்

**இராகம் : மோகனம்**

87. செய்யதா மரைம லர்போல்
சிவந்தமுண் டகத்தில் நல்ல
துய்யதாம் திருமண் ணிட்டு
துகில்பட்டு மருங்கில் கட்டி
பையஉத் தரிகம் ஒன்று
பருப்பதப் புயத்தின் மேற்போட்(டு)
ஐயன்தக் கன்ச பைக்கிங்(கு)
அந்தணர் வருகின் றாரே!

(முண்டகம்-நெற்றி)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், சிவந்த தாமரை மலரைப் போன்ற நெற்றியிலே பரிசுத்தமாகிய திருமண் பிரகாசமாக இட்டு,

பட்டுவஸ்திரம் இடையிலே தரித்து, உத்தரியமொன்றைப் பருப்பதமாகிய மலைபோன்ற தோளின் மேலே தொங்கும்படிக்குப் போட்டு, அழகு பொருந்திய தக்ஷகப் பிரம்மாவின் சபைக்குப் புரோகிதர் வருகிற விதங் காண்க!''

## புரோகிதர் வருகிற தரு

**இராகம் : மத்தியமாவதி**

### *பல்லவி*

88. பஞ்சாங்கப் புரோகிதர் வந்தார்-சோதிடஞ் சொல்ல
அஞ்சாத புரோகிதர் வந்தார்!

### *அனுபல்லவி*

மஞ்சாரு மணிமாடம் விஞ்சியிருக்கும் தக்க
மாநக ரத்தினிற் றானமைந் திருக்கின்ற - பஞ்

சந்திரனை நிகாச-வதனத்தினில்
தகைதிருமண் பிரகாச-மாகப்புனைந்து
சுந்தரமான பட்டுதுகில் நுசுப்பில் தரித்து-பஞ்
கந்தவிழ் தண்டுழாய்க் கண்ணியனைத் துதித்து - பஞ்

அரவிந்த மலர்த்தாளில்-மிதியடியை
அணிந்து குவவுத்தோளில் - உத்திரியம்
பரவிச் சரிமைமின்னப் பாங்குள்ள வேள்விக்குத்
திறமுள்ள முகூர்த்த நாள் திகழஸ்தா பிக்கமிக்கு - பஞ்

சந்தனங்களைப் பூசி-சோதிட சாஸ்திரம்
சமர்த்தாய் எடுத்துப் பேசி-வரும்போது
வந்தனஞ் செய்வோர்க்கு மகிழ்ந்தாசிகள் சொல்லியே
அந்தணருக் குள்ளே அதிகப் பிரபல்லிய-பஞ்

## தக்கன், புரோகிதருக்குச் சொல்

### விருத்தம்

89. விளம்பரும் சோதி டத்தில்
மீசுர மாக வோர்ந்த
களங்கமில் லாத சீர்த்தி
கவின்புரோ கிதரே நீரும்
வளம்பெறும் கிருது நல்ல
வண்மையாய்ச் செய்ய வேணும்
உளங்கனிந் ததற்குத் தக்க
உயர்ந்தநாள் நேமிப் பீரே!

(மீசுரமாக - அதிகமாக)

### வசனம்

''இயாவரும் சொல்லுதற்கு அருமையாக சாஸ்திர நூல்களை அதிகமாகத் தெரிந்த குற்றமில்லாத கீர்த்தியும் அழகையுமுடைய புரோகிதரே, நீர் இப்பொழுது யான் நினைத்திருக்கும் சிறந்த ஓர் யாகம் நல்ல புகழ்ச்சியுடன் நடத்த வேண்டியிருப்பதால் மனமகிழ்ந்து அதற்குத் தகுதியான வோர்தினம் நிச்சயஞ் செய்யுமையா, புரோகிதரே!''

## புரோகிதர், தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

90. செப்பரும் தவத்தை மேலாய்ச்
செய்துநல் வரத்தைப் பெற்ற
எப்பொருட் கிறைவ னாகும்
ஈசற்குப் பெண்ண ளித்த
அப்பனே மாம கத்துக்
கமையுள்ள ஓர்தி னத்தைத்
தப்பில் சாஸ்திரம் பார்த்தே
நிச்சயமதைச் செய்கு வீரே!

(மா மகத்துக்கு - வேள்விக்கு)

### வசனம்

''கேளும், சொல்லுதற்கு அரிதான பெரிய தவங்களைச் செய்து, நல்ல வரங்களைப் பெற்று, சகலமான பேருக்கும் கர்த்தனாகும் பரமசிவனுக்கு உமது குமாரத்தியை விவாகஞ் செய்து கொடுத்த அப்பனே! பெருமை பொருந்திய வேள்விக்கு எல்லாம் அமைந்திருக்கும் ஓர் தினத்தைக் குற்றமில்லாத சோதிட சாஸ்திரங்களைப் பார்த்து, நிச்சயஞ் செய்கிறேன் ஐயா!''

## தக்கன், புரோகிதருக்குச் சொல்

### பரணி

91. மீசுர மான
வேள்வி செய்வதற்கு
நேசமாய் ஓர்தினம்
நிச்சயம் செய்வீரே!

### வசனம்

''கேளும், புரோகிதரே! அதிகமான ஒரு இயாகம் செய்வதற்கு இஷ்டம் வைத்து, ஓர் நாள் ஏற்படுத்தும் ஐயா, புரோகிதரே!''

# புரோகிதர், பஞ்சாங்கம் பார்த்து யாகத்துக்கு ஓர்தினம் நிச்சயித்துச் சொல்லுகிற

## எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

92. ஆனந்த வருடம் உத்தரா யணத்தில்
ஆன்ற மகரத்திங்கள் ஐயைந் தானாள்
ஞானம்சொல் குருவாரம் பூர்வ பக்ஷம்
நவில்கின்ற சத்தமிமா யோனாள் யோகம்
தானந்த விதிபாதம் பால வத்தில்
தபனனுதையஞ் செய்தா றரைக்கு மேலே
ஈனந்த புங்கடிகை பதினொன் றுக்குள்
இயலாது செய்திடுதற் கிசைந்த நாளே!

(தபனன் - சூரியன்)

## வசனம்

''கேளும், தக்ஷகப் பிரம்மாவே! ஆனந்த வருஷம் உத்தராயணம் தை மாதம் இருபத்தைந்தாம் தேதி, குருவாரம், சுக்கிலபக்ஷம் சப்தமி திதி, திருவோண நட்சத்திரம் விதிபாத நாம யோகம் பாலவா கரணம், இந்தச் சுத்தக் கணிதப் பஞ்சாங்கச் சுபதினத்தில் சூரிய உதயமாய், ஆறரை நாழிகைக்குள்ளாக மீன

லக்கினத்தில் யாகஞ் செய்ய உத்தமம்! சுபமஸ்து, தக்ஷகப் பிரம்மாவே!''

## தக்கன் மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

93. மதியினில் உயர்ந்த அமைச்சனே கேளும்
வழுத்தரு மாமகம் தொடங்க
திதியுள நல்ல தினமதைப் பார்த்துச்
சிறப்புடன் நிச்சயம் செய்த
சதுர்மறை யவராகிய புரோகி தர்க்குத்
தாம்பூலம் தக்ஷணை நல்கிப்
புதியமா மணிபதித்த மாளி கைக்குப்
புகுந்திட விரைந்த னுப்பு வாயே!

### வசனம்

''கேளும், அறிவிலே உயர்ந்த மந்திரியே கேளும்! அருமையாக யாகம் செய்வதற்கு ஸ்திரமாய் நல்ல முகூர்த்தநாள் நேமனஞ் செய்து வைத்த நான்கு வேதமுந் தெரிந்த பிராமணராகிய புரோகிதருக்குத் தாம்பூலம் திரவியம் இதுகள் விசேஷமாகக் கொடுத்துப் புதிதான மணிகள் பதித்த அரண்மனைக்கு அனுப்பி வைக்க வேணும், மதிமந்திரியே!''

## மந்திரி, தக்ஷகப் பிரம்மாவுக்குச் சொல்

### பரணி

94. சீலனே தாங்கள்
செப்பிய விதம்போல்
சாலபு ரோகிதற்குத்
தந்தனுப் புலனே!

(சீலனே-ஒழுக்கமுள்ளவனே !; சால-மிகுதி; கால
மிகுத்துப்பெயின் எற்றார் திருவள்ளுவர்)

### வசனம்

''கேளும், பரிசுத்தமுள்ள தக்ஷகப் பிரம்மாவே! உங்கள் உத்திரவுப் பிரகாரம் புரோகிதருக்கு அதிகத் திரவியம் கொடுத்து அனுப்புகிறேன், சுவாமி!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

95. தடமிகு கட்டி யாகேள்!
தீவிர மாகச் சென்று

தடமிகு களஞ்சி யத்தில்

தாங்கிய திரவி யத்தில்

மிடலுடன் அதையெ டுத்து

வியன்புரோ கிதற்க ளித்தே

படபடப் பாக என்தன்

பாலினில் வருகு வாயே!

(வியன் புரோகிதர் - பெருமைக்குரிய புரோகிதர்)

### வசனம்

"ஆரடா, அடா வலிமை மிகுந்த கட்டியக்காரா! நீ அதி சீக்கிரமாக நமது தக்ஷகப் பிரம்மா பொற்களஞ்சியத்தில் இருக்கிற திரவியத்தில் கொஞ்சம் திரவியம் எடுத்து, பெருமை பொருந்திய புரோகிதருக்குக் கொடுத்து, அவர் வாழ்மனைக்கு அனுப்பிவிட்டுத் துரிதமாக என்னிடம் வந்து சேருவாய் அப்பா கட்டியக் காரா!"

## கட்டியன், மந்திரிக்குச் சொல்

### பரணி

96. பராவிய கீர்த்திப்

பண்புள அமைச்சே!

இராயசன் தன்னை

இட்டிதோ வருவேன்!

(இராயசன்-அரண்மனை எழுத்தர்)

**வசனம்**

''கீர்த்தி பரவிய குணமுள்ள மந்திரியே! இராயசக்காரனை அழைத்துக் கொண்டு இதோ ஒடிவருகிறேன் ஐயா, சுவாமி!''

## கட்டியன், இராயசனுக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : ஆனந்த பைரவி**

97. வக்கணை பலவ மைத்து

வகையுடன் வரைய வல்ல

பக்குவ நனிஅ றிந்த

பண்புள இராய சாகேள்

மிக்கநற் புகழ்ப டைத்த

மேன்மைதக்ஷ கப்பிரம் மாவும்

இக்கணத் தினிலே உம்மை

இட்டுவா என்று ரைத்தார்!

### வசனம்

''கேளும், நிருபம் எழுதுதற்குரிய வக்கணைகள் பலவும் பொருத்தமாக யெழுத வல்லமையுள்ள இராயசக்காரனே! நல்ல கீர்த்தியும் மேன்மையும் மிகுதியாகப் பெற்ற தக்ஷகப்பிரம்மா, உங்களை இந்தக்ஷணம் அழைத்துக் கொண்டு வரும்படி சொன்னார்! வாரும் ஐயா, இராயசம்!''

## இராயசக்காரன், கட்டியனுக்குச் சொல்

### பரணி

98. கட்டியா தக்ஷகன்
கனிந்தழைத் ததனால்
இஷ்டமாய்ச் சபைக்கே
இதோவரு கின்றேன்!

### வசனம்

''கேளும், கட்டியக்காரா! தக்ஷகப் பிரம்மா மனக்கணிவுடன் என்னை அழைத்தபடியால் இஷ்டத்துடன் சபைக்கு இப்பொழுதே வருகிறேன், கட்டியா!''

# இராயசன் வருகிற விருத்தம்

**இராகம் : மோகனம்**

99. கனத்தோர் பாகை யைச்சே
கரத்தினில் புனைந்து கொண்டு
வனப்புயர் நுதலில் நாமம்
வன்மையாய்த் தரித்து நெஞ்சில்
நினைக்கவும் தொழவும் எட்டா
நெடியமால் பாதம் போற்றி!
இனிப்புடன் கட்டி யன்பின்
இராயசக் காரன் வந்தான்!

(சேகரத்தினில்-தலையில்; நுதல்-நெற்றி)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், பெரிதாகிய பாகையைச் சிரசிலே தரித்துக் கொண்டு, அழகு மிகுந்த நெற்றியில் திருநாமம் அணிந்து மனதில் நினைப்பதற்கும், சிரசினால் வணங்குவதற்கும் அருமையான நெடிய மாலான மகாவிஷ்ணுவினுடைய திருவடியைப் போற்றி செய்து, இஷ்டத்துடன் கட்டியக்காரனுடனே இராயசக்காரன் வருகிற விதங்காண்க!

# இராயசன் வருகிற

## தரு

இராகம் : சௌராஷ்டகம் தாளம் : ஆதி

### பல்லவி

100. இராயசக் காரன்வந்தான்! -தக்கன் சபைக்கு
இராயசக் காரன்வந்தான்!

### அனுபல்லவி

கராம்புய மலத்தினில் கதிராழி வால்வளை
கதைவாள் சாரங்கக்கை கண்ணன் அடியைப்பணி - இராய

### சரணம்

பட்டுப் பிடிய லுடுத்துப்-புயாசலமேற்
பாங்குத் தரீயம் விடுத்துப் - பதமுடனே
கட்டுக் கதைகள் சொல்லிக்
கனத்த பொருளை வாங்கும்
கருத்தினிலே சிறந்த
உரப்பன் புகழே ஓங்கும்! -இராய

வக்கணை பலஅமைத்தே - வரைவதிற்

சமானம் இந்தவிடத்தே ! - சொல்லுதற்குத்

தக்க ஒருவர்களும்

தானில்லை என்றோதத்

தண்டமிழ்க் கலைகளும்

கண்டறிந்த பிரக்கியாத - இராய

மலிவாய் வாசனை வீசிக்-கொண்டிருக்கின்ற

மலையக் குழம்பைப் பூசி-மார்புந்தோளும்

வலிவாகிய மலர்வாளி மன்மதன் உள்ளம்

மகிழ்ந்து வளர்ப்பதற்கு மாழ்கியேவெருக் கொள்ள -

இராய

(அசலம்-மலை; வாளி-அம்பு)

## இராயசன், தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

101. எவருக்கு மேன்மை யாக

இருக்கஉள் ளத்தில் எண்ணி

தவமுனி நனிபு ரிந்த

தக்ஷகப் பிரம்மா போற்றி!

இவர்தலுற் றிக்க ணத்தில்

இவ்விடத் தழைத்த சேதி

விவரமாய் எந்த னுக்கு

விரைவினில் உரைசெய் வீரே!

(தவமுன-தவம் முற்காலத்தில்; நனி-மிகுதியாக; உரிச்சொல்)

**வசனம்**

"சகலருக்கும் மேன்மையுள்ளவனாக இருப்பதற்கு மனதிலே நினைத்து அருமையாகிய தவங்கள் செய்து, வரம் பெற்ற தக்ஷகப் பிரம்மாவே, சரணம்! மனவாஞ்சையுடன் இப்பொழுது இவ்விடத்திற்கு என்னை வரவழைத்த சமாச்சாரத்தை விவரமாக எனக்குச் சீக்கிரம் சொல்லி யருளுமையா, தக்ஷகப் பிரம்மாவே!"

## தக்கன், இராயசக்காரனுக்குச் சொல்

**விருத்தம்**

102. நித்திலக் கோர்வை போல

நிகரிலாக் கரங்கள் தீட்டும்

புத்தியில் அதிக னான

புகழிரா சயனே வாழி!

எத்திசை களிலும் உற்ற

இயாவரும் உணரா வேள்விப்

பத்திரிகை யைவ ரைந்தே

பாங்குடன் தருகு வாயே!

(நித்திலம்-முத்து; வேள்விப் பத்திரிகை- வேள்விக்கான அழைப்பிதழ்)

**வசனம்**

"முத்தினது கோர்வைக்குச் சமானமாக எழுத்துக்களை வரிசையாக எழுதும்அறிவிலே மிகுந்தவனாகிய கீர்த்தி பெற்ற இராயசனே, வாழக் கடவது! சகல அண்டங்களிலும் இருப்பவர்கள் இயாவத்திராளும் தெரிந்து கொள்ளுவதற்கு இயாகப்பத்திரிகை செவ்வையாக எழுதிக் கொடுப்பாய் இராயசக்காரா!"

(யகரம் சொல்லின் முதற்கண் வரும்போது, அதற்குமுன்னர் இகரத்தை எழுதுவது இந்நாடக ஆசிரியரின் ஒரு போக்காக உள்ளது)

## இராயசன், தக்கனுக்குச் சொல் பரணி

103. ஒழுக்கமும் மிகுந்த

உயர்ந்தவ னேயான்

எழுதிப் பத்திரிகை

இன்புடன் அளிப்பேன்!

**வசனம்**

''ஆசாரத்திற் சிறந்த தக்ஷகப் பிரம்மாவே! இயாகத்திற்கு வரும்படி எழுத வேண்டிய பத்திரிகையை விவரமாக எழுதி, இன்பமாகக் கொடுக்கிறேன், ஐயா, தக்ஷகப் பிரம்மாவே!''

## கட்டியன் சொல் பரணி

104. இவ்விதம் ஆக

இயம்பிய ராசன்

செவ்வையாய் எழுதித்

திருமுகம் படிப்பான்!

(திருமுகம் - அழைப்பிதழ்)

**வசனம்**

''இந்தப் பிரகாரமாகச் சொல்லிய இராயசக்காரன், தக்ஷகப் பிரமன் செய்யப் போகிற யாகத்திற்கு வருகிறதென்று எழுதியதைத் தெளிவாய் வாசிக்கிற விதங் காண்க!''

## இராயசன் விருத்தம்

**இராகம்: மத்தியமாவதி**

105. அஷ்டத்திக்குப் பாலகர் பிரகாசம் உற்ற
ஆதித்தர் ஆறிருவர் பணிநாட் டுள்ளோர்
வட்டமுறு சந்திரனே காத சாத்தோர்
வானவர் தாபதர் வித்யாதரர் இயக்கர்
இட்டசித்தர் கருடகாந் தருவர் ஆதி
இவர்களும் இத்தினத்துத் தக்கன் செய்யும்
கஷ்டமிலா மகத்தில் அவிர்ப்பாகம் கொள்ளக்
கடிதினிலே தக்கநகர் வருகு வீரே!

(அஷ்டதிக்கு - எண்டிசைகள்; ஆதித்தர் - சூரியர்; ஆறிருவர் -12 பேர்; 62=12; ஏகாதசத்தோர் - 11 பேர்; 11 உருத்திரர்களைக் குறிக்கும்)

**வசனம்**

"ஆனந்த வருஷம், தை மாதம், இருபத்தைந்தாம் தேதி, குரு வாரம், சுக்கில கக்ஷம், சப்தமி திதி, திருஓண நட்சத்திரம், விதிபாத நாம யோகம், பாலவாகரணம் இந்தச் சுத்தக் கணிதப் பஞ்சாங்க சுபதினத்தில், சூரிய உதயமாய் ஆறரை நாழிகைக்கு மேல், பதினோரு நாழிகைக்குள்ளாக மீன லக்கினத்தில், தக்கமா நகரத்தில் தக்ஷகப் பிரம்மா சர்ப்பயாகஞ் செய்ய ஆரம்பிக்கிற படியால்,

அஷ்டதிக்குப் பாலகாராகிய இந்திரன், அக்கினி பகவான், இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன், பன்னிரண்டு சூரியர், நாகலோகத்தார், சந்திரன், பதினோரு உருத்திரர், முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத் தொண்ணாயிரம் ரிஷிகள், வித்தியாதரர், இயக்கர், சித்தர், கருட காந்தருவர் இவர்கள் முதலாக சகலமான பேர்களும் அந்த யாகத்தில் அவிர்ப்பாகம் பெற்றுக் கொள்ளச் சீக்கிம் வந்து சேரவேண்டியது! இங்ஙனம்-(தக்கன்)''

## தக்கன், இராயசனுக்குச் சொல்

### விருத்தம்

106. தராளத்தின் சரத்தைப் போலச்
சாலவே யக்க ரங்கள்
வரிசையா யெழுது தற்கு
வாய்ந்தரா யசனே கேளாய்
திறமுள யாகத் துக்குத்
தெரிவிக்கும் முடங்க லுக்குத்
துரிதமாய் மஞ்சள் பூசிச்
சுருண்போட் டென்முன் வைப்பாய்!

(முடங்கல் - ஓலைக்கடிதம்; சுருள்போட்டு- சுருளாக அக்கடித ஓலையை அமைத்து முத்திரை இடுதல், மஞ்சள் பூசி- ஓலைக்

கடிதத்தில் மஞ்சளைப் பூசினால்தான், படிக்க இயலும். இந்தப் பழையகால ஓலைச் சுவடிப் பழக்கம் காரணமாகவே, இன்று அச்சிட்ட தாளானாலும், அதன் ஓரங்களில் மஞ்சள் தடவுகின்றனர்)

### வசனம்

''முத்தினது சரத்தைப் போன்ற, ஒழுங்கான எழுத்துக்கள் எழுதத் திராணி பொருந்திய இராயசனே கேளும்! நாம் ஸ்திரமாகச் செய்யப்பட்ட யாகத்துக்கு வரும்படித் தெரிவிக்க இப்பொழுது நீர் எழுதிய ஓலைக்கு மஞ்சள் பூசி, சுருள் போட்டு என் முன்னே வைப்பாய் இராயசக்காரா!''

## இராயசன் சொல் வசனம்

''அப்படியே செய்து வைக்கிறேன் தக்ஷகப் பிரம்மாவே!''

## தக்கன், மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : சாவேரி**

107. நற்குணம் பொறை ஒழுக்கம்

ஞானமந் திரியே கேளும்!

பற்பலர் எவரும் போற்று

பாங்குள யாகத் திற்குப்

பொற்புடன் நிருபம் இன்று

பொறித்தஇ ராய சற்கு

அற்புத மாகச் சொன்னம்

அளித்துநீ அனுப்பு வாயே!''

(பொறை -பொறுமை; பொறையுடைமை என்று வள்ளுவர் ஓர் அதிகாரமே பாடியுள்ளது இங்கு நினையத் தக்கது; சொன்னம்- தங்கம்)

### வசனம்

''நல்ல குணம், பொறுமை, ஆசாரம், பேரறிவு இதுகள் அமைந்த மந்திரியே, கேளும்! அநேகரும் துதி செய்யும் அலங்காரமான வேள்விக்கு வருவீர்கள் என்று ஓலை யெழுதிய இராயசக் காரனுக்கு மனம் அதிசயிக்கும் படிக்குப் பொருள் திரவியம் கொடுத்து அனுப்பும் மந்திரி!''

## மந்திரி, தக்ஷகப் பிரம்மாவுக்குச் சொல்

### பரணி

108. பிரபல தக்ஷகப்

பிரமனே உமதுத்

தரவின் படிக்குத்

தந்தனுப் புவனே!

### வசனம்

''பெருமையுள்ள மதிமந்திரியே! இராயசக்காரர் சந்தோஷப்படும் படிக்கு, வேண்டிய வரைக்கும் திரவியம் கொடுத்துச் சீக்கிரம் அவர்வாழ் மனைக்கு அனுப்புகிறேன், ஐயா சுவாமி!''

## தக்கன், மந்திரிக்குச்சொல்

### விருத்தம்

109. காற்றென வேக மாகக்

கடுநடை நடக்க வல்ல

ஆற்றல்சேர் தூதர் தம்மை

அரிதுரி தத்த ழைத்த

ஏற்றமாம் யாகம் என்றே

எழுதிய திருமு கத்தைச்

சாற்றிய அவர்கை நல்கிச்

சகலர்க்கும் தெரிவிப் பாயே!

(அதிதுரிதத்தழைத்து = அதி+துரிதத்து+அழைத்து)

### வசனம்

''கேளும், மந்திரி! காற்றைப் போல அதிகச் சலுதியாய் நடை நடக்கும் வலிமை பொருந்திய தூதர்களைச் சீக்கிரமாக அழைத்துவரச் சொல்லி, மேன்மையாகமென்று இயாவருக்கும் எழுதிய ஓலையை அவர்கள் கையில் கொடுத்து இயாவர்களுக்கும் தெரிவிப்பாய் மந்திரி!''

## மந்திரி, தசஷகனுக்குச் சொல்

### விருத்தம்

110. பேழ்குணம் தனில்க தித்த
பிரமத க்ஷகனே கேளும்!
வேள்விப்பத் திரிகை தன்னை
விரைவினில் அனுப்பு தற்குத்
தாழ்விலா நடைந டக்கத்
தகுந்தஒற் றுவரைக் கூவிச்
சூழ்நெடும் அண்டம் முற்றும்
சுருக்கினில் அனுப்பு வேனே!

(ஒற்றுவர்-ஒற்றர்)

### வசனம்

''கேளும், பெருத்த குணத்தினையுடைய தக்ஷகப் பிரம்மாவே! இயாகத்துக்கு இயாவருக்கும் தெரிவிக்க எழுதிய ஓலையை அனுப்புவதற்கு வேகமாக நடை நடக்கப்பட்ட, தகுதியான தூதர்களை அழைத்துப் பெரிதாகிய அண்ட முழுமையும் சீக்கிரமாக அனுப்புகிறேன், ஐயா சுவாமி!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

111. மிகுந்தவெம் புலிபோல் சீறி
மேவியே எரிரில் நிற்கும்
தகுதியார் கட்டி யாகேள்!
தக்ஷகப் பிரம்மா வேள்வி
மகிமையாய்ச் செய்வ தற்கு
வரைந்தபத் திரிகை எங்கும்
மகிழுடன் அனுப்பத் தூதர்
வந்திடச் செய்கு வாயே!

### வசனம்

"கொடூரமான புலியைப்போற் சீறி, எனது எதிரில் நிற்கின்ற நல்ல பக்குவமுள்ள கட்டியக்காரா, கேள்! தக்ஷகப்பிரம்மா இயாகம் பெருமையாய்ச் செய்கிறதற்கு எழுதிய ஓலையைச் சகல அண்டங்களுக்கும் அனுப்புகிறதற்குத் தூதர்களை அழைத்தக் கொண்டு வருவாய் கட்டியக்காரா!"

## கட்டியக்காரன், மந்திரிக்குச் சொல்

### பரணி

112. மாதயை நெஞ்சக

மந்திரி யேயான்

தூதரை அழைத்துத்

துரிதமாய் வருவேன்!

### வசனம்

"கேளும், பெரிதான இரக்கம் பொருந்திய மனதையுடைய மந்திரியே! தங்களுத்தரவுப் படிக்கு, யான் தூதர்களை யழைத்துக் கொண்டு சலுதியிலிவிடம் வருகிறேன், ஆண்டவனே!"

## கட்டியயன், தூதருக்குச் சொல்

### விருத்தம்

113. அதிகவெங் கவனம் உள்ள
அருநடை ஒற்ற ரேகேள்
எதிரிலாத் திறமை வாய்ந்த
எங்களாண் டவனும் வைகும்
துதிமலி கொலுவி னிற்குத்
துரிதமாய் உமைஅ ழைத்தார்!
இதயமும் உவந்தே என்பின்
இக்கணம் வருகு வீரே!

(துதிமலி- துதிக்கப் பெறும்)

### வசனம்

"கேளுங்கள், அதிக வேகமான நடைகள் பொருந்திய எங்கள் ஆண்டவனாகிய தக்ஷகப் பிரம்மா இருக்கும் தனது கொலுவிற்கு அழைத்து வரும்படி சொன்னார்! நீங்கள் மன மகிழ்ச்சியுடன் என்னுடன் கூடவே இப்பொழுதே வாருங்கள், அப்பா தூதர்களே!"

## தூதர்கள், கட்டியக்காரனுக்குச் சொல்

### பரணி

114. மடங்கலை அனைய

வலிமைக் கட்டியனே

தடையிலா துன்னுடன்

தருக்குடன் வருவோம்!

(மடங்கல் - சிங்கம்)

### வசனம்

''கேளாயப்பா! சிங்கத்தைப் போலும் திராணியுள்ள கட்டியக்காரா! உன்னுடன் கூடவே தடையில்லாமல் சந்தோஷத்துடன் வருகிறோம், ஐயா!

## தூதர்கள் வருகிற விருத்தம்

இராகம் : தன்னியாசி

115. மல்லற்செங் கரத்தில் தண்டு

வசையுடன் பிடித்துக் கொண்டு

துல்லிய பாகை ஒன்று

துன்னசே கரம்பு னைந்து

வல்லவர் தமையொ துக்கி

வழிநடந் திடுவ ரான

அல்லலில் லாத ஒற்றர்

அன்புடன் வருகின் றாரே!

(மல்லல் - வலிமை)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், வலிமை பொருந்திய சிவந்த கையிலே தடி பிடித்துக் கொண்டு, பரிசுத்தமான பாகையை சிரசிலே தரித்துப் பலசாலிகளை யெல்லாம் ஒதுங்கிப் போகும்படி செய்து வழிநடக்க வல்வரான துன்பமில்லாத தூதர்கள் அன்புடனே கொலுவிற்கு வருகிறவிதங் காண்க!''

## தூதர்கள் வருகிற தரு

**இராகம் : தோடி**

**பல்லவி**

116. கடுநடைத் தூதர் வந்தார்!-தக்கன் சபைக்குத்

திடமுடைத் தூதர் வந்தார்!

## அநுபல்லவி

கடுநடைத் தூதர் வந்தார் - கையில் தண்டு பிடித்துக்
கட்டியன் பின்தொடர்ந்து-கவனமுடன் நடந்து-கடு

## சரணங்கள்

தகுந்த சல்லடந் தட்டி-இடையினிலே
தங்க இறுக்குக் கட்டி-தோளின் மீதினில்
மிகுந்த செந்துகில் ஒன்றை
மேவ நன்றாய் விடுத்து
விளம்பற் கருந்தக்ஷகன்
மேன்மைக் கொலுவடுத்து!-கடு

மகந்தெரி விக்க ஓலை-கொடுபோய் யார்க்கும்
வழங்கவே மிகும் வாலை-பருவமுள்ளோர்
சகலஅண்ட முழுவதும்
தருக்குடன் போய்வாரும்!
சமர்த்துடை யவர்எந்தத்
தலமும் புகழவரும்!

எந்த உலகம் ஆனாலும்-ஒருநொடிக்குள்
எய்தி வருவோர்கள் மேலும்-மிகச்சிறந்த

அந்த மருவு பாகை

அழகு மலிந்த சென்னி

அதனிற் றரித்துதன்

ஆண்மைகளைப் பண்ணி!-கரு

(வாலைப்பருவம் - இளம்பருவம்)

## தூதர்கள், தக்ஷகனுக்குச் சொல்

### விருத்தம்

117. நூற்றுடி மின்னை ஒத்த

நுடங்கிடை வேத வல்லிக்

கேற்றநா யகனே உன்தன்

எழில்மலர் அடிகள் போற்றி!

கூற்றுவன் தனக்கேழ் பெண்ணைக்

கோலமா மணஞ்செய் வித்துச்

சாற்றரும் புகழ்ப டைத்த

தக்ஷகப் பிரம்மா போற்றி!

(நூற்றுடி=நூல்+துடி; துடி-உடுக்கை; நுடங்கு-துவண்ட;
கூற்றுவன்-எமன்)

### வசனம்

''நூலிடை, உடுக்கை, மின்னலை நிகரான துவளப்பட்ட இடையுள்ள வேதவல்லிக்குத் தகுதியாக அமைந்த நாயகனாகிய தக்ஷப் பிரம்மாவே! உமது அழகிய மலர்போற்றிகழும் பாதமே சரணம்! எமதரும ராஜனுக்கு உமது குமாரத்திகள் ஏழுபேரைத் திருக்கல்யாணஞ் செய்து கொடுத்துச், சொல்லுதற்கு அருமையான கீர்த்தி பெற்ற தயாபரா சரணம், சரணம் சுவாமி!''

## இதுவும், தூதர்கள், தக்ஷகனுக்குச் சொல்

### பரணி

118. ஐயனே எம்மை

அழைத்த காரியத்தைப்

பையவே இன்று

பகர்ந்தருள் வீரே!

### வசனம்

''கேளும், எங்கள் ஆண்டவனாகிய தக்ஷகப் பிரம்மாவே! எங்களை இவ்விடம் அழைத்த காரியங்களைச் செவ்வையாக இன்று தெரியச் சொல்ல வேணுமையா சுவாமி!''

## தக்கன், தூதர்களுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம்: தன்யாசி**

119. பவனன்போல் நடக்க வல்ல
பண்புறும் ஒற்ற ரேகேள்
சிவனிடம் அன்றி மற்ற
தேவர்கள் பலரி டத்தும்
கவனமாய்ச் சென்று வேள்வி
கவின்திரு பங்கொ டுத்து
விவரங்கள் கூறி இங்கு
விரைவினில் வருகு வீரே!

(பவனன் - காற்று)

### வசனம்

"கேளுங்கள், சண்டமாருதம் போல் நடக்கும் வலிமை பொருந்திய குணமமைந்த தூதர்களே! கைலாச வாசனாகிய சிவன் இடத்துக்கு நீங்கள் போகவேண்டாம்! மற்ற சகலமான தேவர்களிடத்துக்கும் முனிவர்களிடத்துக்கும் அதிக வேகமாய்ப் போய் இவ்விடத்தில் நடக்கப் போகிற யாகத்தின் பத்திரிகையை

அவர்களிடங் கொடுத்து, விவரஞ் சொல்லிவிட்டு, இவ்விடம் சீக்கிரம் வந்து சேருங்கள், தூதர்களே!''

## தூதர்கள், தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

120. காசிப முனிவ ருக்குக்
கன்னிகை பத்து மூன்று
பாசமாய் மணஞ்செய் வித்த
பாங்குள முதல்வா கைலை
ஈசன்வாழ் இடமல் லாது
எவ்விடங்களும் விரைவில் சென்று
மீசுர நிருபம் தன்னை
விரும்பியே அளித்து வாரோம்!

### வசனம்

''கேளும், காசிப மகாரிஷிக்கு உமது புத்திரி பதின்மூன்று பேரைத் திருக் கல்லியாணஞ் செய்து கொடுத்து அழகினையுடைய முதன்மையானவனே! யாங்கள் கைலாச வாசனாகிய சிவனிடம் விட்டு, மற்ற எந்த இடங்களும் சீக்கிரத்தில் போய், வேழ்விப்

பத்திரிகையை விருப்பத்துடன் கொடுத்து வருகிறோமையா, சுவாமி!''

## தக்கன், தூதர்களுக்குச் சொல் வசனம்

''அப்படியே செய்யுங்கள், தூதர்களே!''

## தூதர்கள், யாகத்துக்கு ஓலைகொண்டு போகிற தரு

**இராகம் : ஸ்ரீராகம்** **தாளம் : ரூபகம்**

### *பல்லவி*

121. தூதர்கள் வாரார்!-நடையில்பிரக்
கியாதர்கள் வாரார்!

### *அனுபல்லவி*

வாதத்தின் வேக மனவேறாம் போலே
நீதமாக நிருபங் கொண்டொருக் காலே-தூத

### *சரணம்*

அஷ்ட திக்குப் பாலர் - ஆதித்தர்கள்
ஆறிரண்டு சீலர்!-ஏகாதச

இஷ்ட உருத்திர - இணையில்லாத விந்து
எட்டக்கர மாயன் இடந்தேடியே உவந்து-தூத

சத்திய லோகம் புக்கி-ருவழ்வி நடத்துஞ்
சனது கொடுத்துத் தருக்கி-அளவில்லாத
வித்தியாதரர் கந்தருவர் மிகுபேர்க்கும்
சித்தாயிரம் பணச்சேடன் முதலினோர்க்கும்-தூத

முப்பத்து முக்கோடி- இமையாக்கண்
மூர்த்திகடனை நாடி- தீவிரமாகத்
தப்பிலா வாறெட்டுத் தபமுனி வரரிடம்
செப்பமா கச்சென்று சேதி கொடுக்கத்திடம்-தூத

வரத்தைக் கொடுக்கத்திடம் வாக்கி-வெள்ளிவரை
வாச னிடத்தை நீக்கி- அதிகமெய்ச்
சிரத்தையுட னேமற்ற தேவரிடங்கள் நண்ணிக்
கருத்துடனே நமஸ்காரம் பலர்க்கும் பண்ணி!-தூத

(வாதத்தின்-காற்றின்; ஏகாதசம்= ஏகம்+தசம்; எட்டக்கர= ட்டு+அக்கர; எட்டெழுத்து; இமையாக்கண்-இமைக்காத கண்; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத் தொடர்)

## கட்டியன் சொல்

### எண்சீரடி விருத்தம்

**இராகம் : காவேரி**

122. பங்கயத்தில் உதித்ததிரு மகிழ்நனான
பரமபத நாதனருஞ் சத்திய லோகப்
புங்கவனா கியபிரம தேவன் வீறும்
பொன்னுலக வாசவமார் கள்கு ழாத்துஞ்
செங்கதிரோன் சந்திரன் ஏகா தசத்தோர்
சேடனாகிய எண்மர் நாற்பத் தெட்டு
தங்குசகஸ் திரமுனிவர தமக்கும் ஓலை
தந்துதக்கன் சபையிலொற்றர் சார்ந்தார் அன்றே!

(குழாத்தும்-கூட்டத்தும்)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், தாமரைக் கமலத்திலே அவதாரஞ் செய்த மகாலட்சுமியின் புருஷனாகிய ஸ்ரீபரமபதநாதன் அருமையான சத்தியலோகத்துக்கு மேன்மையுள்ளவனாகிய பிரமதேவன் பெருமை பொருந்திய பொன்னுலக வாசஞ் செய்யும் முப்பத்துமுக்கோடி தேவர்கள், பன்னிரண்டு சூரியர், சந்திரன்,

பதினோரு உருத்திரர், ஆதிசேடன் முதலிய நாகலோகத்தார் அஷ்டதிக்குப் பாலகர்கள் நாற்பத் தொண்ணாயிரம் ரிஷிகள் இவர்கள் இடத்தில் யாகபத்திரிகை கொடுத்து, தக்ஷகப் பிரமன் சபைக்கு தூதர்கள் வந்து சேர்ந்தார்கள் என்று அறிக!''

## தூதர்கள், தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

123. திங்களுக் கிருபத் தேழு
தெரிவையர் தமைஅ ளித்த
எங்களாண் டவனே உன்தன்
இணையடிக் கமலம் போற்றி
சங்கரன் தவிர மற்ற
சகலமா னவர்க்கும் ஓலை
இங்கித மாக நல்கி
இவ்விடம் வந்தோம் ஐயா!

### வசனம்

''கேளும், சந்திரபகவானுக்கு இருபத்தேழு புத்திரியை விவாகஞ் செய்து கொடுத்த எங்கள் ரக்ஷகனாகிய தக்ஷகப்

பிரம்மனே! உமது இரண்டு பாதார விந்தமே சரணம்! சங்கரனாகிய **சிவன் தவிர** மற்ற இயாவருக்கும் தாங்கள் எங்களிடம் கொடுத்த யாகப்பத்திரிக்கையைக் கொடுத்து, தங்கள் சமூகத்துக்கு வந்தோமையா, சுவாமி!''

## தக்கன், மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : தோடி**

124. மந்திரி கேளாய் இந்த

மகத்துக்கு நிருபம் கொண்டு

அந்தி ரம்மத் தியம்பா

தாளம்அன் பாகப் புக்கி

பந்தஒற் றுவர்க்கு வேண

மாநிதி வஸ்தி ரங்கள்

தந்தவர் வாழ்ம னைக்குச்

சலுதியில் அனுப்பு வாயே!

### வசனம்

''கேளும், எனது மந்திரியே! நாம் செய்ய நினைத்த இயாகத்துக்கு ஓலை கொண்டு சொர்க்கம், மத்தியம், பாதாளம்

என்னும் மூன்று உலகமும் அன்பாகப் போய், நம்மிடம் வந்து சேதி சொல்லிய தூதர்களுக்கு, வேண்டிய வரைக்கும் திரவியம் வஸ்திரம் கொடுத்து, அவர்கள் வாழ்கின்ற வீட்டிற்குச் சீக்கிரம் அனுப்பிவையும் அமைச்சனே!''

## மந்திரி, தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

இராகம் : தோடி

125. மந்திரி மொய்ம்பு தக்க
மன்னனின் உரைப்ப டிக்கே
எந்தெந்த இடமும் புக்கி
இயாகத்தின் சேதி ஓலை
சிந்தையும் மகிழ்வாய் ஈந்து
தீவிர மாக வந்த
தந்திர தூதர்க் குப்பொன்
தானைதந் தனுப்பு வேனே!

(மந்திர-மந்திர மலை)

### வசனம்

''மந்திர கிரியைப் போல, புயத்தினையுடைய தக்ஷகப் பிரம்மாவே! உமது உத்தரவின் பிரகாரம் சகலமான இடத்துக்கும் போய், இயாகத்தின் சமாச்சாரம் எழுதிய பத்திரிக்கையை மனக் களிப்புடனே கொடுத்து, சீக்கிரமாய் நம்மிடம் வந்த சாமர்த்தியமுள்ள தூதர்களுக்குத் திரவியமும் வஸ்திரமும் கொடுத்து, அனுப்புகிறேனையா, சுவாமி!''

### மந்திரி, கட்டியனுக்குச் சொல் விருத்தம்

126. கட்டுதிட் டத்தோ டிங்கு
காத்திருக் கின்ற தீரக்
கட்டியக் காரா நீதான்!
களஞ்சியத் தினிலி ருக்கும்
மட்டியலாத் திரவி யத்தில்
வகையுள்ள ஒற்ற ருக்கு
இஷ்டமம் பரம்பொன் ஈந்தே
இல்லினுக் கனுப்பு வாயே!

(இஷ்டமம்பரம்பொன்= இஷ்டம்+அம்பரம்+பொன்; விருப்பமான ஆடையும் பொன்னும்)

### வசனம்

''ஆரடா, அடா கட்டுதிட்டத்தோடு இந்தக் கொலுவாசலைக் காத்துக் கொண்டிருக்கும் தைரியசாலியான கட்டியனே! களஞ்சியத்திலே இருக்கின்ற திரவியத்தில் வல்லமையுள்ள தூதர்களுக்கு இஷ்டமுள்ள வரைக்கும் பொருளும் வஸ்திரமும் கொடுத்து, அவர் வாசஸ்தலத்துக்கு அனுப்புவாய் கட்டியக்காரா!''

## கட்டியன், மந்திரிக்குச் சொல்

### பரணி

127. சத்துவ குணனே

சாலஒற் றுவர்க்குன்

உத்திர வின்படி

உடைபொருள் அளிப்பேன்!

(சத்துவகுணனே-நற் குணனே)

### வசனம்

''நல்ல குணம் பொருந்திய மந்திரியே! அதிகமாகத் தூதர்களுக்கு உமது உத்திரவுப் பிரசாரம் வஸ்திரம் திரவியமும் கொடுத்து அனுப்பிகிறேன் என் ஆண்டவனே!''

# தக்ஷகன், மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

**இராகம் : மோகனம்**

128. செப்பரு ஞானம் வாய்ந்த
திராணிமந் திரியே கேளும்
ஒப்பனை யாக சாலை
ஒன்றுநிர் மிப்ப தற்கு
தப்பிலாச் சாஸ்தி ரங்கள்
சகலமும் உணர்ந்தோன் ஆன
துப்புள்ள **விஸ்வப்** பிரம்மன்
துரிதமாய் வரச்செய் வாயே!

(திராணி-வலிமை; ஒப்பனை-அலங்காரம்;
துப்புள்ள-அறிவாளியான விஸ்வப்பிரம்மன்)

## வசனம்

"கேளும், சொல்லுதற்கு அருமையான பேரறிவும் பராக்கிரமும் பொருந்திய மந்திரி! அலங்காரமாக ஓர் யாகசாலை ஏற்படுத்துகிறதற்குக் குற்றமில்லாத சோதிட சாஸ்திரங்கள் எல்லாம் குறைவில்லாமல் தெரிந்தவனாக அறிவுள்ள **விஸ்வப் பிரம்மனை** அதிசீக்கிரமாய் வரவழைக்கச் சொல்லும் அமைச்சனே!"

## மந்திரி, தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

இராகம் : பைரவி

129. தேவரீர் சொற்ப டிக்குச்

செழுமை யாகச் சாலை

ஆவலாய் அமைப்ப தற்குஇங்(கு)

அடைவுள பலக ணக்கும்

மேவுசோ திடசாஸ் திரத்தின்

விதிமுறை தெரிந்தோன் ஆக

மாவிஸ்வப் பிரமன் தன்னை

மகிழுடன் வரச்செய் வேனே!

(சாலை-யாகசாலை)

### வசனம்

"கேளும், தக்ஷகப் பிரம்மாவே! தேவரீர் உத்திரவுப் பிரகாரம் மை பொருந்திய ஓர் யாகசாலை ஆசையுடன் இவ்விடத்தில் ாடு செய்கிறதற்குத் தகுதியான பலவிதக் கணக்குகளும் டிட சாஸ்திரங்களும் அதிலுள்ள விதிகளின் முறைகளையும் ந்த பெருமையுடைய ஒரு விஸ்வப் பிரமனைச் ஷத்துடனே அழைத்துவரச் செய்கிறேன், ஐயா!"

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : தோடி**

130. மறமுள்ள வல்லி யம்போல்
வாசலிற் காத்தி ருக்கும்
திறமுள்ள கட்டி யாநீ
தீவிர மாகச் சென்று
நிறைவுள்ள சோதி டத்தில்
**நிபுணவிஸ் வப்பிரம் மாவை**
முறையுடன் அழைத்துக் கொண்டென்
முன்னிலே வருகு வாயே!"

### வசனம்

"ஆரடா, அடா வீரம் பொருந்திய புலியைப்போற் சீறி, கொலுவாசலைக் காத்துக் கொண்டு இருக்கும் பராக்கிரமுடைய கட்டியக்காரா நீ வேகமாகப் போய்ச் சோதிட சாஸ்திரத்தில் பூரணமாகத் தெரிந்த நிபுணனான விஸ்வப்பிரம்மாவை நல்ல மார்க்கமாக அழைத்துக் கொண்டு இந்தச் சமூகம் வருவாய் கட்டியா!"

## கட்டியன், மந்திரிக்குச் சொல்

### பரணி

.31. அமைச்சரே நிபுணன்
ஆனவிஸ் வப்பிரமன்
இமைக்கடி கையினில்
இங்குறச் செய்வேன்!

### வசனம்

"கேளும், ஐயா மந்திரியே! கல்வியில் நிபுணனாகிய விஸ்வப் பிரம்மாவை ஒரு நிமிஷ நேரத்தில், இந்தக் கொலுவிற்கு அழைத்துக் கொண்டு வருகிறேன், சுவாமி!"

## கட்டியன் விஸ்வப்பிரமனுக்குச் சொல்

### விருத்தம்

132. சிகரகோ புரங்கள் நல்ல
சினகரம் வாவி மாடம்
அகரங்கள் செய்யும் ஆண்மை
அடைவிஸ்வப் பிரம்மா கேளும்!

பகரரும் தக்கன் உம்மைப்

பண்புடன் அழைக்கச் சொன்னார்

நிகரறு சாஸ்திரம் ஏந்தி

நிமிஷத்தில் வருகு வீரே!

(வாவி-குளம்; அகரம்-அக்கிரகாரம்)

## வசனம்

"சிகரங்கள் அமைவாகச் செய்த கோபுரங்கள், தேவாலயங்கள், தடாகங்கள், மாளிகைகள், கிராமம் இதுகள் ஏற்படுத்தும் பெருமை பொருந்திய விஸ்வப்பிரம்மாவே,கேளும்! தக்ஷகப் பிரம்மா உங்களை அழைத்துக் கொண்டு வரும்படி உத்திரவு செய்தார்! ஒன்றும் சமானமில்லாத சோதிட சாஸ்திரங்களை எடுத்துக் கொண்டு, ஒரு நிமிஷத்தில் என்னுடன் கூடவே வாருமையா, விஸ்வப் பிரம்மாவே!"

## விஸ்வப்பிரமன் வசனம்

"அப்படியே வருகிறேனப்பா கட்டியக்காரா!"

# விஸ்வப் பிரமன் வருகிற

## விருத்தம்

இராகம் : சாவேரி

133. கிளர்பெறு திருமு கத்திற்
**கீறுசந் தனத்தை** இட்டு
வளமுறு முரத்திற் றோளின்
மருமலை யக்கு ழம்பை
அளவிலா தெடுத்துப் பூசி
அருமய நூல்கைக் கொண்டே
உளமகிழ் விஸ்வப் பிரமன்
ஓடியே வருகின் றானே!

(கீறுசந்தனம்-விஸ்வப் பிரம்மாவின் இத்தோற்றம் நோக்கற்பாலது; இன்னும் விஸ்வகர்மர்கள் சந்தனத்தை நெற்றியில் பட்டையாகப் பூசாது, பூணுல் தோய்த்து, அதைக் கொண்டே மூன்று கீற்றுகளாக(கோடுகளாக) நெற்றியில் அணிவர். இதனால், கீற்றுக்காரர்கள் என்றும் விஸ்வகர்மர்கள் அழைக்கப்படுவர். மயநூல்-மயன்நூல்)

## வசனம்

"அகோதெப்படி யென்றால், பிரகாசம் பொருந்திய அழகாகிய நெற்றியில் கீற்றாகிய சந்தனத்தைத் தரித்து, வளமையுடைய

மார்பிலே வாசனை பொருந்திய சந்தனக் குழம்பைப் பூசி, சொல்லுதற்கு அருமையான மயனுடைய நூல்களைக் கையில் எடுத்துக்கொண்டு, மனமகிழ்ச்சியுடனே விஸ்வப்பிரமன், வேகமாகத் தக்ஷகப் பிரமன் சபைக்கு வருகிற விதம் காண்க!''

## விஸ்வப்பிரமன் வருகிற தரு

**இராகம் : மத்தியமாவதி** **தாளம் : அட**

### பல்லவி

134. விஸ்வப்பிரமன் வந்தான்- தக்கன் சபைக்கு
விஸ்வப்பிரமன் வந்தான்!

### அனுபல்லவி

அம்ச முடையயாகம்அமைக்க ஒருநொடி
அதனிற் சிருஷ்டிசெய்யப் பதமுள்ளவன் கெடி!-விஸ்வ

### சரணம்

சோதிட மாகிய சாஸ்திரம்-புத்தகக்கட்டு
துன்ன வேதன் மலர்க்கரம்!-சற்றும்
தீதில்லாத வெள்ளி சிமயப் பரன்செழும்
செய்ய தாமரைமலர் அனுதினமும் தொழும்!
-விஸ்வ

வயங்கி ரசிதமென்னவே-எக்கியோபவீதம்

மார்பிற் பளபளென்னவே!-மிகும்வாசம்

இயங்கும் சாந்தக் குழம்பு

இருகரங்களிற் பூசி!

எதிரில் வாதஞ்சொல்வோர்க்

கிகலெடுத்துப் பேசி!-விஸ்வ

மூன்று பன்னிரண்டடங் குலம்- கொண்டகோலை

முளரிக் கையினிலே நலம் - பெறப்பிடித்து

கான்ற ஒளிகுழைகள்

கதிரவர்களை அனன

கவின்பெருகிய இருகாதின்

இடையே துன்ன!-விஸ்வ

(அஸ்வம்-குதிரை; சிமயப்பரன்-சிவன்; இரசிதம்- வெள்ளி)

## விஸ்வப்பிரமன், தக்ஷகப் பிரம்மாவுக்குச் சொல் விருத்தம்

135. செந்தழற் கடவு ளுக்கோர்

சிறுவியை மணஞ்செய் தீந்த

அந்தமும் ஆட்சி பெற்ற

ஐயநின் சரணம் போற்றி!

சிந்தையும் உவகை வாய்ந்த

சிறியனை அழைத்த சேதி

தொந்தரமாய் எந்த னுக்குச்

சொல்லுவீர் விரைவில் தானே!

(செந்தழற்கடவுள்- அக்கினிதேவன்; சிறுவி-மகள்)

### வசனம்

"செந்தழற் கடவுளாகிய அக்கினி பகவானுக்கு ஓர் புத்திரியைத் திருக்கலியாணஞ் செய்வித்த அழகும் பெருமையும் பெற்ற தக்ஷகப் பிரம்மாவே! உமது பாதமே சரணம்! மனதிலே சந்தோஷம் உண்டாகிச் சிறியேனாகிய என்னைத் தங்கள் சபைக்கு அழைத்த காரியத்தைத் தெரியச் சொல்லவேணும் சீக்கிரத்தில் என்னையனே!"

## தக்கன், விஸ்வப்பிரமனுக்குச் சொல்

### விருத்தம்

136. தெரியவே கூறும் என்று

சித்தமும் மகிழ்ந்தே என்னைப்

பிரியமாய்க் கேட்ட விஸ்வப்

பிரமனே விளம்பு வேன்கேள்!

விரதமாய் இருந்து சர்ப்ப

வேள்வியொன் றியற்று தற்குத்

*திறமுள யாக சாலை*

செய்தின்று தருகு வாயே!

*வசனம்*

''அழைத்த காரியத்தைத் தெரியச் சொல்லுமென்று அன்புடன் *என்னைக் கேட்ட விஸ்வப்பிரமனே,* விரதங்களை *அனுஷ்டித்துச்* சர்ப்பயாகம் ஒன்று செய்கிறதற்கு நிலையாமையாகிய ஒரு யாகசாலை, சாஸ்திர முறைமைப் படிக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேணும் ஐயா, *விஸ்வப் பிரம்மாவே!''*

## *விஸ்வப்பிரமன் சொல் தரு*

***இராகம் : ஆனந்தபைரவி*** **தாளம் : அட**

பல்லவி

137. *அப்படியே செய்குவேன்-யாகசாலைக்(கு)*

அனைவரும் வந்தெய்தவே!

*அனுபல்லவி*

எப்பொருட் கும் இறை ஈசற்கு மேலாக

செப்பரும் வரம்பெற்ற செப்பலே மாலாக-அப்படியே

*சரணம்*

அந்தர வாசிகள் ஆருஞ் சுரரினுள்ள

அற்புதம் என்றெண்ணி அதியானந்தம் கொள்ள-
அப்படியே

முப்பத்து முக்கோடி மூர்த்திகட்குக் கோனே!

முன்னங் களித்திட இந்நிமிஷத்தில் தானே!-
அப்படியே

சகல முனிவர்களும் தடுக்கிவந்து சூழ

அகில சம்பத்தும் அமைந்துமேன்மேல் வாழ-
அப்படியே

## கட்டியன் சொல் விருத்தம்

138. இந்தவிதம் விஸ்வப் பிரம்மாவும் கூறி

இயாகசா லைக்குரிய வகைகள் எல்லாம்

அந்தமுள சாஸ்திரத்தைப் பார்த்தா ராய்ந்து

அமைவுள்ள ஓர்தலத்தைச் சதுரஞ் சுத்தம்

பந்துரமாய்ச் சமமாக்கி யாக சாலை

பாங்குடனே நிருமிக்கப் பணைத்த தம்பம்

விந்தையுட னேநிறுத்தி மேன்ம றைத்து

விண்ணவரும் அதிசயிக்க விளங்கச் செய்தான்!

(அந்தமுள-அழகுள்ள; தம்பம்-யூபத்தம்பம்)

## *வசனம்*

"அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாக விஸ்வப் பிரம்மாவானவர் சொல்லி, இயாகசாலை செய்வதற்கு வேண்டிய விதிகளை யெல்லாம், அழகு பொருந்திய சோதிட சாஸ்திரங்களைப் பார்த்து, ஆராய்ந்து தேடி எடுத்து, அதில் சொல்லிய பிரகாரம் ஒரு இடத்தைச் சதுரம் செய்து, சமமாக நிரவி, இயாகசாலை அலங்காரமாய்ச் செய்விக்கப் பெரிதாகிய தூண்கள் நிறுத்திச் சூரியகாந்தியில்லாமல் மேலே மறைவாக மூடி, தேவர்களும் அதிசயப்படும்படிக்குப் பிரகாசமாகச் செய்வித்தான் என்று அறிக!"

### விஸ்வப்பிரமன், தக்கனுக்குச்சொல் விருத்தம்

139. மகஞ்செயக் கருத்தில் உன்னி
மகிழுடன் எனைய ழைத்த
இகல்புயத் தக்கப் பிரம்ம
ஏந்தலே இயம்பக் கேளும்
சகலரும் வந்து பார்த்துச்
சந்தோஷப் படும்ப படிக்கு
வகையுடன் யாக சாலை
வகுத்தனன் வந்து பாரீர்!

### வசனம்

''தக்ஷகப் பிரம்மாவே! தாங்கள் மனதிலே நினைத்த பிரகாரம், சர்ப்பயாகம் செய்வதற்கு யாகசாலை செய்வித்தேன்! சகலமானவர்களும் வந்து பார்த்து, சந்தோஷப்படும்படிக்கு அற்புதமாக அதைத் தாங்களும் பார்க்க வாருங்கள், தக்ஷகப் பிரம்மாவே!''

## தக்ஷகன், மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : தோடி**

140. அலங்காரம் உள்ள தாக
அருமையா யாக சாலை
இயங்கவே இயற்றி வந்த
இசைவிஸ்வப் பிரம்ம னுக்குத்
துலங்கிய தரள ஆரம்
சுவணமும் மிகஅ ளித்து
நலங்கினர் அவர்ம னைக்கு
நயமுடன் அனுப்பு வாயே!

(தரளம்-முத்தும்;தரள ஆரம்-முத்துமாலை; சுவணம்-சுவர்ணம்-பொன்)

## வசனம்

''கேளும், மந்திரி! மிகுந்த அழகு பொருந்திய யாகசாலை அருமையும் பிரகாசமும் உள்ளதாய்ச் செய்துவைத்து வந்த கீர்த்தியுள்ள விஸ்வப்பிரம்மனுக்குப் பிரகாசமான முத்தாரம், பொன்னும் கொடுத்து, நன்மையும் விளக்கமும் பொருந்திய அவர் மனைக்கு இன்பமுடன் அனுப்புவாய் மந்திரி!''

## மந்திரி, தக்ஷகனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

141. அரணியன் விரலில் தோன்றி
அரியநன் நிலைகள் செய்து
முரணிய வரங்கள் பெற்ற
முதல்வனே இவிட நண்ணி
கருணையா யாக சாலை
கனம்பெறச் செய்வ தற்கு
இரணநற் றிரவி யங்கள்
ஈந்திதோ அனுப்பு வேனே!

(அரணியன்- பிரம்மா)

### வசனம்

''பிரமதேவர் வலதுகால் பெருவிரலிற் பிறந்து, அரிதாகிய தவங்களைச் செய்து, பலமான உயர்ந்த வரங்களை வாங்கிய முதல்வராகிய தக்ஷகப் பிரம்மாவே, கேளும்! நாம் வாசம் செய்யும் இவ்விடத்திற்கு வந்து, நல்ல தயவுடனே பெருமை பொருந்திய யாகசாலை செய்வித்த விஸ்வப்பிரம்மாவுக்குப் பொற்றிரவியங்கள் கொடுத்து, இதோ அவர் மனைக்கு அனுப்பி வைக்கிறேன், சுவாமி!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

142. காவலின் நனிசி றந்த

கட்டியக் காரா கேளும்!

ஆவலாய் யாக சாலை

அருமை நிருமித் தீந்த

மாவிஸ்வப் பிரம்ம னுக்கு

வாஞ்சையாய் வேண மட்டும்

ஆவரணம் பொன் நல்கி

அரண்மனைக் கனுப்பு வாயே!

(நனிசிறந்த-மிகச் சிறந்த; உரிச் சொல் தொடர்;

ஆவரணம்-ஆடை)

**வசனம்**

''கொலுவாசலைக் காக்கும் தொழிலினிற் சிறந்தவனாகிய கட்டியக்காரா கேளாய்! ஆசையுடனே யாகசாலை அருமையாகச் செய்து கொடுத்த பெருமையுள்ள விஸ்வப் பிரமனுக்கு மன விருப்பமாய் வேண்டிய வரைக்கும் வஸ்திரமும் திரவியமும் கொடுத்து, அவருடைய அரண்மனையாகிய வீட்டிற்கு அனுப்பும் கட்டியக்காரா!''

## கட்டியன், மந்திரிக்குச் சொல்

**பரணி**

143. ஞான மந்திரியே

நவிற்படி விஸ்வற்(கு)

ஆன வாபரணம்

அருநிதி தருவேன்!

**வசனம்**

''கேளும், மெய்ஞ்ஞானம் பொருந்திய மந்திரியே! உங்கள் சொல்லின் பிரகாரம் விஸ்வப் பிரமனுக்கு வேண்டிய வஸ்திரம்

அருமையாகத் திரவியம் இதுகள் கொடுத்து, அவர் வாழ்மனைக்கு அனுப்புகிறேன், சுவாமி!''

## தக்கன், மந்திரிக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : சாவேரி**

144. மந்திரி கேளாய் இந்த
மகத்தினுக் காரம் பிக்க
எந்தெந்தப் பொருளும் மிக்க
ஏற்றமாய்ச் சேக ரித்து
முந்தியே இருக்கு திப்போ
முதிர்கடத் துளச முத்து
விந்தையாய்க் கொணர வேடர்
விரைவினில் வரவ ழைப்பாய்!

(சமுத்து-சமித்து-யாகத்தீ வளர்ப்பதற்கான மரக்குச்சிகள்)

### வசனம்

''கேளும், மதிமந்திரி! நாம் உத்தேசித்த சர்ப்பயாகத்துக்கு ஆரம்பஞ் செய்வதற்குப் பலபல வஸ்துக்களும் அதிகமான

முன்னமே சேகரம் செய்து வைத்திருக்கிறது ! இப்போது காட்டிலே இருக்கிற சமுத்துகள் கொண்டு வருகிறதற்கு வேடர்களைச் சீக்கிரமாக இவ்விடத்திற்கு வரவழைப்பாய் மந்திரி!''

## மந்திரி, தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

145. காதலாய்க் கௌந்த ரற்கோர்
கன்னிகை மணஞ்செய் தீந்த
மேதகு புகழ்ப டைத்து
விளங்குதக்ஷ கப்பிரம் மாவே!
ஓதரும் யாகஞ் செய்ய
ஒன்பது வகைச்ச முத்தும்
ஏதின்றிக் கொணர வல்ல
எயினரை வருவிப் பேனே!

### வசனம்

''அன்புடனே, **கௌந்தரரிஷிக்கு** உமது புத்திரிகளில் ஒருவரை விவாகஞ் செய்து கொடுத்து, மேலான கீர்த்தியைப் பெற்றுப் பிராசிக்கும் தக்ஷகப் பிரம்மாவே, கேளும்! சொல்லுதற்கு அருமையான சர்ப்பயாகஞ் செய்ய சமுத்துத் தினுசு ஒன்பதும்

குற்றமில்லாமல் கொண்டு வருகிறதற்கு வல்லமையுள்ள வேடர்களை இப்பொழுதே வரவழைக்கிறேன், சுவாமி!''

## மந்திரி, கட்டியனுக்குச் சொல்

### விருத்தம்

146. குணம்பெறு தக்கப் பிரமன்
கொலுவாசற் காத்தி ருக்கும்
வணம்பெறு கட்டி யாநீ
மகிழுடன் விரைவிற் சென்று
நிணம்பெறு மயில்வில் அம்பு
நிலையுள்ள கரத்து வேடர்
கணம்பெறும் அவரை இப்போ
கடிதினில் அழைத்து வாராய்!

(வணம்-வண்ணம்; விகாரம்நிணம்- இறைச்சி;)

### வசனம்

''நல்ல குணம் பொருந்திய தக்ஷகப் பிரம்மாவின் கொலுவாசலைக் காத்துக் கொண்டு இருக்கும் வண்ணமாகிய அழகு பொருந்திய கட்டியக்காரா! மகிழ்ச்சியுடன் சீக்கிரம் போய், மாமிசம் பொருந்திய வேல், வில், அம்பு நிலையாகக் கையிலே

வைத்திருக்கிற வேடர் கூட்டங்களை இவ்விடத்திற்குச் சலுதியில் அழைத்துக் கொண்டு வருவாய், கட்டாயம்!''

## கட்டியக்காரன், மந்திரிக்குச் சொல்

### *பரணி*

147. பேரறி வமைச்சே!

பேசிய வேடரை

வாரமுற் றிவ்விடம்

வந்திடச் செய்வேன்!

(வாரமுற்று-அன்புடன்)

### *வசனம்*

''கேளுங்கள், பெருத்த அறிவினையுடைய மந்திரியே! நீங்கள் அழைத்துவரும்படி சொல்லிய வேடர்களை அன்புடனே இவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டு வருகிறேன், சுவாமி!''

## கட்டியன், வேடருக்குச் சொல்

### விருத்தம்

148. பாலைநன் நிலத்துக் கேற்ற
பாங்குள தலைவ ரான
சாலவே டுவரே! எங்கள்
தக்ஷகப் பிரம்மா உம்மைக்
கோலமாய் இன்ற ழைத்துக்
கொண்டிங்கு விரைவி லேதான்
பாலினில் வரவு ரைத்தார்
பரிவுடன் வருகு வீரே!

(பாலினில்- தன்னிடத்தில்)

### வசனம்

''பாலைநிலத் தலைவராகிய மிகுந்த வேடர்களே! உங்களை தக்ஷகப் பிரம்மா அழகுடனே இன்றையதினம் கொலுவிற்கு அழைத்துவரும்படி உத்திரவு செய்திருக்கிறார்! அன்புடனே போகலாம் வாருங்கள் வேடர்களே!''

## வேடர்கள், கட்டியனுக்குச் சொல்

### பரணி

149. அவ்விதம் தக்கரும்
ஆக்கியா பித்ததால்
ஒவ்வியே யாங்கள்
ஓடியே வாரோம்!

(ஒவ்வியே-உடன்பட்டே)

### வசனம்

''அந்தப் பிரகாரம், தக்ஷகப் பிரம்மா உத்திரவு செய்த படியால், அந்த உத்திரவுக்கு உடன்பட்டு உன்னுடன் கூடவே வருகிறோம் கட்டியக்காரா!''

## வேடர்கள், வருகிற விருத்தம்

**இராகம் : மோகனம்**

150. வல்லியத் தோலைத் தோண்மேல்
வயங்கவே போட்டுக் கொண்டு
புல்லிய புல்வாய்த் தோலைப்
பொருந்தவே குல்லாய் போட்டு

வில்லுமம் பகழி கையில்

மளிரவே பிடித்துச் சீர்த்தி

நல்லதக்ஷ சுப்பிரம் மாவை

நாடியே வருகின் றாரே!

(வல்லியத்தோல்-புலித்தோல்; புல்வாய்த்தோல்-மான்தோல்)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், புலித்தோலைத் தோளின் பேரில் பிரகாசிக்கப் போட்டுக் கொண்டு, அற்பமாகிய மானின் தோலைப் பொருத்தமாகிய குல்லாவாகத் தரித்துக் கொண்டு, வில்லும் அழகிய கூரான பாணமும் பெருமையாய்ப் பிடித்து, நல்ல கீர்த்தியுள்ள தக்ஷகப் பிரம்மாவை விரும்பி, வேடர்கள் வருகிற விதங் காண்க!''

## வேடர்கள், வருகிற தரு

**இராகம் : காம்போதி** **தாளம் : ஆதி**

### பல்லவி

51. கொடுந்தொழில் வேடர் வந்தார்!-வனவிலங்கை

அடுந்தொழில் வேடர் வந்தார்!

## அநுபல்லவி

சுடுங்கனல் எனக்கணை விடுந்தொழில் உடையவர்
கடுஞ்சினத் துடன்பேசும் திடம்பெருகிய பொல்லா-
கொடு

வில்லும் வாளியும் எடுத்து-மிருகங்களை
விரைவினில் கடுகடுத்து-ரோமமலி
பல்லவம் தனைக்காணில்
பதுங்கிஇருந்து கொலை
வல்லமை உடன்செயும்
மர்மம்உடையோர் நிலை! - கொடு

அருணத் தோளினை நல்ல-குல்லாயாக
அருமையாய்த் தைத்துகம் புல்ல-
தரித்துக்கொண்டு
பரிவுடன் உழுவையின்
பாங்க தளந்தனை
உரிமை யுடன்புனைந்
துறும்பெரும் தீவினை-கொடு

இருப்பு வலையை எடுத்து-தக்ஷகப் பிரம்மா
இருப்பிடம் தனை அடுத்து-வலிவுடைய

செருப்புப் பதத்தில் இட்டு

செடிகளிலே நுழைவார்

பொருப்பினில் இருப்பவர்

புகல்நிணத்தில் விழைவோர்!-கொடு

(இருப்புவலை- இரும்பால் ஆனவலை)

## வேடர்கள், தக்கனுக்குச் சொல் விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

152. உறுவிதி வலது காலின்

உயர்பெறு விரலில் தோன்றி

சிறுவிதி எனப்பேர் பெற்ற

செம்மநின் அடிகள் போற்றி!

பொறையினில் பருப்ப தத்தில்

பொருந்திவாழ் கின்ற இந்த

மறவரை அழைத்த சேதி

வாஞ்சையாய் உரைசெய் வீரே!

(உறுவிதி-பிரம்மாவைக் குறித்தது; பொறை-காடு; இரும்பொறை எனல் காண்க. தக்கனைக் குறித்தது)

### வசனம்

''பிரமதேவர் வலதுகால் பெருவிரலில் அவதரித்து, சிறுவிதியாகிய சிறிய பிரம்மாவென்று பேர்படைத்த பெருமை யுள்ளவரே! உமது பாதமே சரணம்! காட்டிலிருக்கின்ற பர்வதங்களில் வாசஞ் செய்து இருக்கின்ற இந்த வேடர்களை அழைப்பித்த சமாசாரத்தை மனோபீஷ்டத்துடன் சொல்ல வேண்டுமையா, தக்ஷகப் பிரம்மாவே!''

## தக்கன், வேடர்களுக்குச் சொல்

### விருத்தம்

153. பழுவத்தில் வாசம் செய்யும்
பண்புவே டுவரே கேளீர்
விழைவுடன் உயர்ந்த சர்ப்ப
வேள்வியும் செய்வ தற்கு
தழையுமொன் பதுவி தத்துச்
சமுத்துகள் கொணர வேண்டி
அழைத்தனன் உம்மை இங்கே
அதைக் கொண்டு வருகு வீரே!

(பழுவம்-காடு; பழுவேட்டரையர் என்ற ஆட்சியைக் காணலாம்)

### வசனம்

''கானகத்தில் வாசஞ் செய்து கொண்டு இருக்கும் குணத்தினையுடைய வேடர் கூட்டங்களே, கேளுங்கள்! ஒரு சர்ப்ப யாகஞ் செய்வதற்கு ஒன்பதுவிதச் சமுத்துகள் கொண்டுவர வேண்டியதற்கு உங்களை யிவ்விடத்தில் வரவழைத்தேன்! அந்தச் சமுத்துகளைச் சேகரித்துக் கொண்டு வாருங்கள் பாலைநிலத் தலைவரே!''

## வேடர்கள், தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

154. வெள்ளியங் கிரியின் மேவும்

விமலனுக் கோர்பெண் தந்த

வள்ளலே ஒருநொ டிக்குள்

மலைசெடி கொடிவி ருட்சம்

அள்ளிய ஆரண் யத்தில்

அமையும்ஒன் பதுவி தத்துச்

சுள்ளியும் பொறுக்கிக் கட்டிச்

சுகமுடன் வருகு வோமே!

(விமலன்-சிவன்)

### வசனம்

"வெள்ளிமலையாகிய கைலாசத்தில் எழுந்தருளி யிருக்கின்ற பரமசிவனுக்கு ஒரு குமாரத்தியை விவாகஞ் செய்து கொடுத்த் கொடையாளனாகிய தக்கப் பிரம்மாவே! ஒரு நிமிஷ நேரத்தில் குன்று, செடி, கொடி, மரங்கள் நெருங்கிய காட்டிலே யிருக்கின்ற ஒன்பதுவிதச் சமுத்துகளும் பொறுக்கிச் சுமைகட்டி யெடுத்துக் கொண்டு இஷ்டமுடனே தங்களிடம் வருகிறோமையா, சுவாமி!"

## வேடர்கள், வனத்துக்குப் போகிற தரு

**இராகம் : கலியாணி** **தாளம் : அட**

### பல்லவி

155. வனத்துக்குப் புறப்பட்டனர்-வேடுவரெல்லாம்
வனத்துக்குப் புறப்பட்டனர்!

### அனுபல்லவி

அனத்தில்இருவரும் வேதன்
அடியில்வந்த தக்கன்
ஆக்ஞா பித்தபடி
அன்பாகவே மிக்க!-வன

*சரணம்*

ஒன்பது வகையாகும்

உயர்சமுத்து விவேகம்

உடனே கொணர்வோமென்(று)

உரைசெய்தே விரைவாக!-வன

செழுமை யாகப்பல

செடிகொடி தருநிறை

செறிந்த கல்லுமுள்ளு

நெருங்கி நனியுறை-வன

மகத்துக்கு வேண்டிய

வஸ்து கொண்டுவந்து

வழங்கினால் வெகுமதி

வாங்கலாம் என்றுவந்து-வன

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

**இராகம் : சாவேரி**

156. செடிபொதுளிய கான கத்தில்
சென்றுவே டுவர்கள் எல்லாம்
கடிதனில் நவவி தத்துக்
கனசமுத் துகளைத் தேடி
அடைவுடன் பொறுக்கிக் கட்டி
அவர்சிர மிசைஎ டுத்து
படபடப் புடனே தக்கன்
பாலினில் வருகின் றாரே!

(பொதுளிய-நிறைந்த; நவவிதம்- ஒன்பது வகைகள்)

## வசனம்

"அகோதெப்படி யென்றால், செடி, முள்ளு, கல்லு நெருங்கிய பெரிய காட்டிலேபோய் வேடர்கள் எல்லாம் சீக்கிரமாக ஒன்பது விதமான சமுத்துகளை அவ்விடத்தில் தேடிச் செவ்வையாய்ப் பொறுக்கிச் சுமைகட்டி, அவர்கள் தலையில் எடுத்துக் கொண்டு, சலுதியிலே தக்கன் இடத்திற்கு வந்தார் என்று அறிக!"

## வேடர்கள், தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

157. தேவர்கள் வணங்கிப் போற்றும்
சிறுவிதி எனப்பேர் பெற்று
மாவிற லுடனே வைகும்
வள்ளல்நின் அடிகள் போற்றி!
தாவிய கான கத்தில்
சமுத்துகள் சேக ரித்து
ஆவலாய் உமதி டத்துக்(கு)
அன்புடன் வந்தோம் ஐயா!

(விறல்-வெற்றி)

### வசனம்

"தேவர்கள் எல்லாம் உமது திருவடியில் வணங்கித் துதிக்கும் ீறிய பிரம்மா வென்று திருநாமம் பெற்றுப் பெரிதான ல்லமையுடனே இருக்கும் வள்ளலே! உமது பாதமே சரணம்! ட்டிலே போய்ச் சமுத்துகள் பொறுக்கிக் கட்டிக் கொண்டு சையுடனே இவ்விடம் வந்தோம், சுவாமி!"

# தக்கன், மந்திரிக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : மோகனம்

158. ஞானமந் திரியே கேளும்
நவ்விவல்லி யஞ்சீயஞ்சேர்
கானகம் தன்னில் புக்கிக்
கடிதினில் நவச முத்து
தானதைக் கொணர்ந்த ளித்த
தாஷ்டீக வேட ருக்குள்
ஆனந்தம் அடையச் செம்பொன்
ஆவர ணமுமீ வாயே!

(நவ்வி-மான்; வல்லியம்-புலி; சீயம்-சிங்கம்)

## வசனம்

"அறிவிலே மிகுந்த மந்திரியே, கேளும்! மான், புலி, சிங்கம் முதலிய அநேக மிருகங்கள் வாசஞ் செய்யும் காட்டிற்குப் போய், அதி சீக்கிரத்தில் சமுத்துகள் சேகரித்து, நம்மிடத்திற்குக் கொண்டு வந்து கொடுத்த பராக்கிரமம் பொருந்திய வேடருக்கு மனம் சந்தோஷம் உண்டாகும்படிக்குத் திரவியமும் வஸ்திரமும்

கொடுத்து அனுப்பும் மந்திரி!''

## மந்திரி தக்கனுக்குச் சொல்

## விருத்தம்

**இராகம் : சாவேரி**

159. தேவருத் திரவு செய்த
திருவாக்குக் கெதிர்வாக் குண்டோ?
தாவிய புகழ்ப ராவும்
சர்ப்பயா கம்தொ டங்க
மாவிற காஞ்ச முத்து
வகைகளைச் கொணர்ந்த விற்கு
ஆவர ணம்பொன் நல்கி
அவர்மனைக் கனுப்பு வேனே!

### வசனம்

''கேளும், தகடிகப் பிரம்மாவே! தேவரீர் உத்திரவு செய்த உத்திரவுக்குத் தடை சொல்லுவார்கள் ஒருவருமில்லை! எவ்விடங்களிலும் கீர்த்தி, பரவும்படியான சர்ப்பயாகம் செய்வதற்கு வேண்டிய சமுத்துகளைக் கொண்டுவந்து கொடுத்த வேடர்களுக்கு

ஆவரணமாகிய வஸ்திரம், திரவியம் கொடுத்து, அவர் இருப்பிடத்திற்கு அனுப்புகிறேன், ஐயா!''

## மந்திரி கட்டியனுக்குச் சொல்

## விருத்தம்

160. குத்திரங்கள் அளவில் லாத

குணமுறு கட்டி யாகேள்!

சத்திரஞ் செய்வ தற்கு

சமுத்துகள் கொண்டு வந்த

பத்திர மறவர் உள்ளம்

பரிவுற அவரவர் களுக்கு

சித்திரத் துகிலும் மிக்க

செம்பொனீந் தனுப்பு வாயே!

(குத்திரம்-பொய், திருட்டு)

### வசனம்

''வஞ்சனை, திருட்டு முதலிய இல்லாத குணமுள்ள கட்டியக்காரா! இந்தச் சர்ப்பயாகஞ் செய்வதற்குச் சமுத்தாகிய ஒன்பது தினுசு விறகுகள் கொண்டுவந்த அம்பு வில்லுடைய வேடர்களுக்கு மனதில் அன்புண்டாகும்படிக்கு அழகிய வஸ்திரமும் திரவியமும் கொடுத்தவர் இவ்விடம் அனுப்பும் பிள்ளாய் கட்டியம்!''

## கட்டியக்காரன் மந்திரிக்குச் சொல்

### பரணி

161. மந்திரி மன்னே
மறவருக் காடை
விந்தையாம் பொருள்கள்
மிகவளித் திடுவேன்!

### வசனம்

''மந்திரிகளில் சிறந்தவரே! வேடர்களுக்கு வஸ்திரமும் அநேகத் திரவியங்களுங் கொடுத்து, அவர் வாழ் மனைக்கு அனுப்புகிறேனையா சுவாமி!''

## கட்டியன் சொல்

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : காம்போதி**

162. சிறுவிதி ஆகியதக்ஷகப்பிரம் மாவும்
செப்பரிய மாட்சிசர்ப்ப யாகத் திற்கு
உறுபொருள்கள் யாவையும் சேகரங்கள் செய்தே
உரையும்போ தினிற்பரம பதத்தில் வைகும்
நறுவனவா ரம்புனை னீரோ ருகக்கண்
நாயகன்தா மோதரன்மால் காலி வண்ணன்
அறம்பெருகும் தக்கனரும் பட்ட ணத்துக்(கு)
அடல்வைனன் மீதேறி வருகின் றாரே!

(நறுவனவாரம்-மணமுள்ள துளசிமாலை; நீரோருகம்-தாமரை)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், சிறிய பிரம்மாவென்ற திருநாமம் பெற்ற தக்ஷகன் சொல்லுதற்கு அருமையாகிய பெருமை பொருந்திய சர்ப்ப யாகத்திற்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் சேகரம் செய்து இருக்கும்போது,யாகப் பத்திரிகையைப் பார்த்த, பரமபதத்திலிருக்கும் வாசனை பொருந்திய துளபமாலை தரித்த

தாமரை மலர் போன்ற நேத்திரமுள்ள மாகவிஷ்ணுவர் தருமம் விசேஷமாக நடந்து வருகின்ற தக்கமா நகரத்திற்குப் பெருமை பொருந்திய கருடாழ்வான் பேரில் ஏறிக்கொண்டு வருகிற விதங் காண்க!''

## மகாவிஷ்ணு வருகிற

## விருத்தம்

**இராகம்: சங்கராபரணம்**

163. செங்கதிர் புரைஇ ரத்னம்
திகழ்முடி கம்வி ளங்க
அங்கதம் மொய்ம்பில் மின்ன
அவிர்குழை சிரவ ணத்தில்
தங்கமார் பிற்க வுஸ்துவம்
தயங்கஇந் திரையு டன்மால்
சங்கமாம் தக்கன் யாக
சாலைக்கு வருகின் றாரே!

(இந்திரை-இலக்குமி)

## வசனம்

"அகோ தெப்படி யென்றால், சிவந்த கிரணங்களை யுடைய சூரியனுக்குச் சமானமான நவரத்தினங்கள் பிரகாசிக்கும் கிரீடம் சிரசில் ஒளி செய்யவும் அங்கதமாகிய தோளணி புயத்திற் பிரகாசிக்க விளக்கமுள்ள மகரகுண்டலங்கள் காதிலே பொருந்தியிருக்க மார்பிற் கவுஸ்துவாபரணம் சோதி செய்ய மகா லட்சுமியுடன் மகாவிஷ்ணுவானவர் கூட்டமாகிய தக்ஷகப் பிரம்மா யாக சாலைக்கு வருகின்றார் என்று அறிக!"

## மகாவிஷ்ணு வருகிற

## தரு

**இராகம் : சௌராஷ்டகம்** **தாளம் : ஆதி**

### பல்லவி

164. ஆதி நாரணர் வந்தார்!-உயர்ந்தபரஞ்
சோதி நாரணர் வந்தார்!

### அனுபல்லவி

நீதி நன்னெறி நிலைதவறா திருக்கும்
சாதுக்க ளாகிய பாகவதர்சதா பூசிக்கும்!-ஆதி

அம்புய மலரை அன்ன-அஸ்தத்தினில்

ஐம்படை பளபளென்ன -நுசுப்பினிற்

பம்புமொளி காஞ்சன பாங்குள்ள அம்பரம்

சம்பிரமா ஒளிர்தரத் தக்கமா நகரம்! -ஆதி

மிளிர்கௌஸ்துவா பரணம்-மார்பின்மேவ

மிகுகுழையிரு கரணம்!

துளபச் சிகழிகை தோளினிலே புனைந்து

அளவிலா மகிழுடன் அவிபெறவே கனிந்து-ஆதி

மகப்பத்திரிகை பார்த்து -யாகத்துக்கு

வரமனவுவகை பூர்த்து -கோகனக

மகளுடனே நெடியனவனன் மீதினில் ஏறி

வளர்பவள மலைமேல் மைமலைபோல் வீறி!-ஆதி

(வைனன்-கருடன்)

*தக்கன் மகாவிஷ்ணுவுக்குச் சொல் விருத்தம்*

165. புரிவடி நேமிசா ரங்கம்

பொலிவுள்ள தண்டு வாள்செங்

கரசரோ ருகத்திற் கொண்ட

கார்த்தனின் னடிகள் போற்றி!

மருமலி சிவப்புறுந் தாமரை

மலரி டத்தில் தோன்றும்

திருமகள் கொண்கா உந்தன்

சேவடிக் கமலம் போற்றி!

(புரி-வலம்புரி; நேமி-சக்கரம்; தண்டு-கதை; கொண்கா-தலைவனே!)

### வசனம்

"வலம்புரிச் சங்கு, கூர்மையுள்ள சக்கரம்,சார்ங்கம், பிரகாசம் பொருந்திய கெதை, வாள் என்றும் பஞ்சாயுதங்கள், தாமரைமலர் போன்ற அஸ்தத்தில் கொண்டு இருக்கும் பகவானாகிய எனது மூதாதையே உமது பாதமே சரணம்! வாசனை மிகுந்த சிவப்புள்ள தாமரைப் புஷ்பத்திற் பிறந்த மகா லட்சுமியின் நாயகனே! உமது திருவடி சரணம்! சுவாமி!"

## மகாவிஷ்ணு தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

166. திசைமுகன் விரலில் தோன்றி

சிறுவிதி எனப்பேர் பெற்ற

அசைவிலா வலிமை உற்ற

அறியதக்ஷகனே வாழி!

இசையுடன் சிறந்த சர்ப்ப

இயாகமும் செய்யச் சிந்தை

பசையுறு நற்கு ணங்கள்

பதிந்தவித் தகனே வாழி!

(திசைமுகன்-பிரம்மா)

**வசனம்**

''திசைமுகனாகிய பிரம்ம தேவன் வலதுகால் பெருவிரலில் பிறந்து, சிறியபிரம்மா வென்று திருநாமம் பெற்று மிகுந்த வல்லமை பொருந்திய தக்கனே, வாழக்கடவது! கீர்த்தியுடன் சிறப்பாகச் சர்ப்ப யாகம் நடத்துவதற்கு மனம் ஆசையும், நல்ல குணங்களும், மீசுரமான ஞான சுரூபனே வாழக்கடவது!''

## தக்கன் மகாவிஷ்ணுவுக்குச் சொல்

**விருத்தம்**

167. என்னரும் தாதை யேயும்

இரணிய கருப்ப னுக்கு

மன்னிய தாதை யாக

வயங்கென் மூதாதை யேநீர்

உன்னித மாக இங்கே

உயர்ச்சியாய் அமைத்தி ருக்கும்

பொன்னணி ஆச னத்தில்

பொருந்தியே வைகும் சுவாமி!

(தாதை-தந்தை;இரணிய கருப்பன், பிரமதேவர்)

**வசனம்**

"எனக்கு அருமையான தந்தையான பிரமதேவருக்கு மிகுந்த தகப்பனாக விளங்கிய என் பாட்டனே,நீங்கள் இவ்விடத்தில் அலங்காரமாகவும் உயர்ச்சியாகவும் செய்து இருக்கும் பொன்னினாற் செய்த ஆசனத்திலே எழுந்தருளி இருக்க வேண்டுகிறேன், சுவாமி!"

## மகாவிஷ்ணு தக்கனுக்குச் சொல்

**விருத்தம்**

168. அரிய பேரனையா

அமைந்த தக்ஷகனே!

உரியநின் சொற்படி

உற்றிருப் பேனே!

(பேரன்-விஷ்ணுவின் பேரனான தக்கன்)

### வசனம்

"கேளும், எனக்கு அருமையான பேரனாகப் பிறந்திருக்கின்ற தக்ஷகப் பிரம்மாவே! உரித்தான உன் வார்த்தைப் பிரகாரம் இந்த ஆசனத்தில் எழுந்தருளியிருக்கின்றேன், சிறுவிதியே!"

## கட்டியன் சொல் பொது விருத்தம்

**இராகம் : மத்தியமாவதி**

169. இந்திரை கொண்கன் ஆன
எழில்மர கதத்தை ஒத்த
சுந்தர வண்ண மாயன்
சுபகர யாகத் துக்கு
வந்துறை போது சத்திய
மாநக ரத்தை விட்டே
அந்தன னான சிருஷ்டிக்(கு)
அதிபதி வருகின் றானே!

(சிருஷ்டிக் கதிபதி-பிரம்மா)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், மகாலட்சுமியின் நாயகனாகிய அழகிய மரகதத்தைப் போன்ற திருமேனியை யுடைய

மகாவிஷ்ணுவானவர் சுபகரமுள்ள யாகத்துக்கு எழுந்தருளியிருக்கும் போது, தூதரினால் யாகச் சங்கதி யறிந்த பிரமதேவர், சத்திய லோகத்தை விட்டுத் தக்கமா நகரத்தில் தக்ஷகப்பிரம்மா செய்கிற சர்ப்பயாகத்துக்கு வருகிற விதங்காண்க!"

## பிரமன் வருகிற

## விருத்தம்

**இராகம் : சங்கராபரணம்**

170. வதனத்தில் திருமண் இட்டு
வயங்குசென் னியிலே பட்டு
விதமுள்ள குல்லாய் துன்ன
வெற்பெனும் புயத்து மாலை
பதமுடன் அழகு செய்யப்
பறவையாம் எகினத் துந்தி
சதியுடன் பிரமன் யாக
சாலைக்கு வருகின் றாரே!

(எகினத்துந்தி=எகினத்து+உந்தி; எகினம்-அன்னம்; சதி-சரசுவதி)

### வசனம்

"முகத்தில் திருநாமம் அணிந்து பிரகாசமாகச் சிரசிலே பட்டுக் குல்லாய் புனைந்து, மலைச்சமானமாகிய தோளில் நல்ல புட்பமாலைகள் அலங்காரமாக விளங்க, அன்னப்பட்சியின் பேரில் ஏறிக்கொண்டு, சதியாகிய சரஸ்வதி தேவியுடன் பிரமதேவர் யாகசாலைக்கு வருகிற விதங்காண்க!"

## பிரமன் வருகிற

## தரு

**இராகம் : பந்துவராளி** **தாளம் : ஆதி**

### பல்லவி

171. சிருஷ்டிசெய் கர்த்தர் வந்தார்! - ஆன்மாக்களைச்
சிருஷ்டிசெய் கர்த்தர் வந்தார்!

### அனுபல்லவி

மருத்திகழும் வனச
மலர்த்தவிசினில் வைகும்
வண்மையனா டித்தவம்
வனைபவர்க்குள் ளிதங்கும்!-சிரு

அகன்ற தடவுரத்தில் -எக்கியோபவீதம்

அலங்க சரோசகத்தில் - சிறந்த தண்டு

வகையுடன் மிளிர

மருங்கிற் பட்டுவஸ்திரம்!

வனைந்து தோளினில்

உத்தரியம் வயங்கத்திரம்!-சிரு

விளங்குஞ் செய்யகஞ்ச-வடியிற்புனை

மிதியடி எழில்மிஞ்ச -அதிவிரைவில்

உளங்கனிந்த தேதக்கன்

உவகையாய்ச் செய்மகம்

உற்றஇடத் தைநாடி

ஒதுமீ ரேழ்சகம்!-சிரு

கல்வி நல்கும் சரஸ்வதி -மருங்கினிலே

களித்து வரவே நன்னிதி-யுளவமரர்

நல்வித மாகவே

நன்னித் துதிபுரிய

நந்தலிற் சிறுவிதி

சிந்தை மிகப்பெரிய-சிரு

(நன்னிதியுளவமரர்=நல்+நதி+உள+அமரர்)

## தக்கன் பிரம்மதேவருக்குச் சொல்

### விருத்தம்

172. சீர்பெறும் அன்பால் என்னைச்
சிறுவிதி யாகப் பெற்ற
பேர்பெறும் விதியே உன்தன்
பிரசமா மலர்த்தாள் போற்றி!
ஏற்பெறு சுருதி நான்கு
இணையிலா மல்தெ ளிந்த
ஆர்பெறு சிருஷ்டி கர்த்தா
வாமென் பிதாவே போற்றி!

(ஏர்-அழகு;சுருதி-வேதம்;
கர்த்தாவாமென்பிதா=கர்த்தாவாம்+என்+பிதா)

### வசனம்

''நல்ல சிறப்பை யடையும்படிக்கு என்னைச் சிறிய பிரமனென்னைப் பெற்ற, கீர்த்திபெற்ற பிரமதேவரே! உமது பாதார விந்தமே சரணம்! அழகு பொருந்திய இருக்கு, யசுர், சாமம், அதர்வண மென்னும் நான்கு வேதங்களும் ஒருவரும். அதில் மானமில்லாமல் ஆராய்ந்து தெளிந்து நிறைவுள்ள ஆத்மாவைச் சிருஷ்டி செய்யுங் கர்த்தாவே! எனது தந்தையே, சரணம்!''

# பிரமன் தக்கனுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : தோடி

173. மேதகு தவத்தைச் செய்து
வீரிய வரத்தைப் பெற்ற
ஓதரும் திறமை வாய்ந்த
உயர்குணச் சுதனே வாழி!
மாதருக் கரசி வேத
வல்லியின் வரனே வாழி
ஏதமில் புகழ்ப டைத்த
ஏந்தலே வாழி, வாழி!

(ஏதமில்=ஏதம்+இல்;ஏதம்-குற்றம்)

## வசனம்

"மேலாகிய தவத்தைச் செய்து, பெரிதாகிய வரத்தைப் பெற்றுக்கொண்டு, அருமையான பராக்கிரமம் பொருந்திய குணமுள்ள குமாரனே, வாழக்கடவது! பெண்களுக்கெல்லாம் முதன்மையான வேதவல்லியின் நாயகனே! வாழக்கடவது! குற்றமில்லாத கீர்த்தி படைத்த பெருமையுடையவனே, வாழக் கடவது!"

## தக்கன், பிரமதேவருக்குச் சொல்

### விருத்தம்

174. எத்தலத் துற்ற ஆன்மா
இயாவையும் விரைவில் சிருஷ்டி
பத்தியாய்ச் செய்ய வல்ல
பண்புள தந்தை யேநீர்
சுத்தமாய்ச் சமைத்தி ருக்கும்
துங்கஇவ் வாச னத்தில்
சித்தமு வகைசி றந்தே
திகழுடன் இருப்பீர் சுவாமி!

(சித்தமுவகை=சித்தம்+உவகை; சித்தம்-மனம்)

### வசனம்

''எந்த வுலகத்திலுமிருக்கப்பட்ட ஆத்மாக்களை யெல்லாம் சீக்கிரத்தில் சிருஷ்டிப்பு அன்புடனே செய்யவல்லமையும் குணமும் பொருந்திய என் பிதாவே நீங்கள் பரிசுத்தமாகச் செய்து இருக்கும் உயர்ச்சியுள்ள ஆசனத்தில் மனமகிழ்ச்சியுடனே பிரகாசத்துடன் அதில் எழுந்தருளி இருமையா, சுவாமி!''

# கட்டியக்காரன் சொல் பொது

## விருத்தம்

இராகம் : சாவேரி

175. அஷ்டநேத் திரங்கள் உற்ற

அந்தணன் சர்ப்ப வேள்விக்(கு)

இஷ்டமாய் வந்து தக்கன்

ஈந்தநல் ஆச னத்தில்

தட்டிலா திருக்கும் போது,

தந்தாவெண் ணிபத்தில் ஏறி

எட்டுத் திக்கு முலாவும்

இந்திரன் வருகின் றானே!

(அஷ்ட நேத்திரங்கள்-எட்டுக்கண்கள்; வெண்ணிபத்தில்-வெள்ளையானையில்;திக்குமுலாவும் = திக்கும் + உலாவும்)

## வசனம்

"எட்டுக் கண்களை யுடைய பிரமதேவர், சர்ப்பயாகத்துக்கு இஷ்டத்துடன் வந்து, தஷகப்பிரமன் கொடுத்த அழகாகிய ஆசனத்தில் குற்றமில்லாமல் எழுந்தருளியிருந்தார். வெண்மையாகிய நான்கு கொம்பையுடைய வெள்ளை யானையின்

பேரில், எட்டுத்திக்கும் சஞ்சரிக்கும் இந்திரராஜன் தக்கன் செய்யும் யாகத்துக்கு வருகிறவிதங்காண்க!''

## இந்திரன் வருகிற

### விருத்தம்

**இராகம் : ஆனந்தபைரவி**

176. ஒற்றர்கள் கொடுபோய் ஈந்த
ஓலையைக் கரத்தில் வாங்கி
முற்றும்வா சித்துப் பார்த்து
மொழியுநல் யாகத் தின்பால்
இற்றையே புக்க எண்ணி
இமையவர் ஈட்டம் சூழ
வெற்றிசேர் புரந்த ரன்தான்
வேகமாய் வருகின் றானே!

(புரந்தரன்-இந்திரன்)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், தக்ஷகன் அனுப்பிய தூதர்கள் கொண்டு போய்க் கொடுத்த யாகப் பத்திரிகையைக் கையிலே

வாங்கி, அதில் உள்ள சங்கதி முழுமையும் வாசித்துப் பார்த்துச்,சொல்லுதற்கு அருமையான யாகத்திற்கு இன்றைய தினம் போகவேண்டு மென்று நினைத்துத் தேவர்கள் சூழ, வெற்றிமாலை தரித்த இந்திரராஜன் அதிவேகமாய் வருகிறவிதம்!''

## இந்திரன் வருகிற

### தரு

**இராகம் : அடாணா** **தாளம் : ரூபகம்**

### பல்லவி

177. இந்திர ராஜன் வந்தான்! - அதிவிரைவில்
இந்திர ராஜன் வந்தான்!

### அனுபல்லவி

சுந்தர முள்ளமாணிக் கந்திகழ் மணிமுடி
அந்தித் திடவேசிரம் சிந்தை உவந்தேகெடி!-இந்தி

மேகங்கள் சொற்கேட்க- தேவர்கள்குழு
விரும்பியே முடிதாழ்க்க- இயாவருக்கும்
மாகன முடனேசிம்

மாசனத் திலிருக்கும்!

வச்சிரதரன் யாரும்

மெச்சவேசஞ் சரிக்கும்!-இந்தி

வரையெனப் புஜகிரீதி-இருப்புயத்தில்

வயங்கவே நனிசோதி!-சுரும்பிமிரும்

விரைசெறி மலர்மாலை

மிசையலங் கவேநல்ல

வேட்கையுட னேதக்கன்

வேள்வித்தலத் தைப்புல்ல!-இந்தி

தினகரன் தனைப்போல-இருகுண்டலம்

சிரவணத் துறச்சால-தடவற்சத்தில்

புனித இரத்தினத்தார்

பொலிவிட னேபுல்ல

புகல்வரிய பிரகஸ்பதியும்

ஆசிகள் சொல்ல!-இந்தி

# தக்கன் இந்திரனுக்குச் சொல்

## விருத்தம்

இராகம் : தோடி

178. விருத்திரன் முதலாய் உள்ள
வெய்யதா னவர்கு ழாத்தை
உருத்திவெம் போர்பு ரிந்தே
ஒழித்தஇந் திரனே நீரும்
பெருத்தஇல் வாச னத்தில்
பிரபல மாகி வைகி
திருத்தமாம் சர்ப்ப யாகம்
செய்வதில் யோசிப் பாயே!

(விருத்திரன்-விருத்திராசூரன்)

## வசனம்

"விருத்திரசூரன் முதலாகிய கொடிய இராக்ஷதரை யெல்லாம் கோபித்து அவர்கள் பேரில் கடூரமான உயுத்தஞ் செய்து சங்கரித்த தேவேந்திர மகாராஜனே! நீர் பெரிதாகிய இந்த ஆசனத்தில் மேன்மையாக எழுந்தருளியிருந்து இந்தச் சர்ப்பயாகஞ் செய்வதில் முயற்சி செய்யும், ஐயா!"

## இந்திரன் தக்கனுக்குச் சொல்

### பரணி

179. தக்கப் பிரம்மாவே!

சாற்றிய படியே

முக்கிய யாக

முயற்சிசெய் வேனே!

### வசனம்

''கேளும், தக்ஷகப் பிரம்மாவே! நீங்கள் எனக்கு உத்திரவு செய்த பிரகாரம் முக்கியமான இந்தச் சர்ப்பயாகம் நடக்கிறதில் முயற்சி செய்விக்கிறேன், ஐயா!''

## கட்டியன் சொல் பொது

### விருததம

**இராகம் : தோடி**

180. இந்திரன் நண்ணிச் சர்ப்ப

யாகத்தின் முயற்சி செய்து

சொந்தமாய் இருக்கும் போது

தூதர்கை ஓலை பார்த்த

செந்தழற் கடவுள் மேடத்

தின்புறம் அதனில் ஏறி

விந்தைசேர் மாமன் சர்ப்ப

வேள்விக்கு வருகின்றாரே!

(செந்தழற்கடவுள் - அக்கினி; மேடத்தின் புறம் -ஆட்டுக்கடாவின் முதுகில்)

**வசனம்**

"அகோதெப்படி யென்றால், தேவேந்திர மகாராஜன் வந்து, தக்ஷகப்பிரம்மா செய்யும் யாகத்திற்குப் பிரயத்தினம் செய்துகொண்டு இருக்கும்போது, தூதர்கள் கொடுத்த யாகப்பத்திரிகையை வாசித்துப் பார்த்த செந்தழற்கடவுளாகிய அக்கினிபகவான் ஆட்டுக்கிடாவின் முதுகில் ஆரோகணித்துக் கொண்டு, வேடிக்கையாக மாமனாராகிய தக்ஷகப்பிரம்மா செய்யப்போகிற யாகத்துக்கு வருகிற விதங்காண்க!"

## அக்கினிபகவான் வருகிற விருத்தம்

**இராகம் : சாவேரி**

181. தந்தனி மாமனார் சர்ப்பவேள் விக்குச்

சிந்தையும் உவந்து தீவிர மாகவே

எந்தவஸ் துக்களை எரித்திட வல்ல

செந்தழற் கடவுள் திகழவே வாரார்!

(தந்தனி-இணையற்ற)

### வசனம்

''அகோதெப்படி யென்றால்,ஒருவரும் சமானமில்லாத தனது மாமனார் செய்யத் தொடங்கும் யாகத்திற்கு மனமகிழ்ச்சி யடைந்து அதிசீக்கிரமாய் எல்லா வஸ்துக்களையும் பஸ்மீகரம் செய்யும் சிவந்த ரூபம் பொருந்திய அக்கினிபகவான் பிரகாசத்துடன் வருகிற விதம் காண்க!''

## அக்கினி பகவான் வருகிற

### தரு

**இராகம் : பூரிகலியாணம்** **தாளம் : ஆதி**

### பல்லவி

182. செந்தழற் கடவுள் வந்தார்!-மனவாஞ்சையாய்ச்

செந்தழற் கடவுள் வந்தார்!

### அனுபல்லவி

சுந்தரந் தனையடர்

காண்ட வனத்தையுண்ண

அந்தண ரூபமுடன்

அருச்சுன னிடம்நண்ண-செந்

கற்புலவு மடவார்கட்

கல்லாமலே விஞ்சார்

பற்பல ருக்குந்தன்

பராக்கிரமத்தில் எஞ்சார்!-செந்

மட்டிலாச் சீர்த்திசேர

மாதவத் துள்ளதக்கன்

இட்ட மருகன்என்றே

இயாவர்களும் துதிக்க!-செந்

எதிரில் லாததிறம்

ஏய்ந்த எழில்மாடம்

அதிலே ஆரோகணித்(து)

ஆனந்த மேநீட - செந்

அந்த மிகுந்ததன்

அருமையா கியதாரம்

சிந்தை உவ'கையுடன்

சேரவர செம்பீர - செந்

# அக்கினிதேவன் தக்கனுக்குச் சொல்

## விருத்தம்

183. கஞ்சஆ சனத்தின் மேவும்
கர்த்தன்மெய்ப் புதல்வன் ஆகி
விஞ்சிய தவப்ப லத்தால்
மேதகு படைத்தோய் போற்றி!
எஞ்சலில் லாத சர்ப்ப
இயாகமும் ஆரம் பித்த
மஞ்ச னைத்த க்ஷகப்பிரம்
மாஉம தடிகள் போற்றி!

(கஞ்ச ஆசனம்-தாமரை ஆசனம்)

## வசனம்

''தாமரைக் கமல ஆசனத்தில் வீற்றிருக்கும் பிரமதேவருக்குப் புத்திரனாக அவதரித்து, மிகுந்த தபோபலத்தினால் மேலான தன்மையைப் பெற்ற முதல்வனே, சரணம்! குறைவில்லாத இந்தச் சர்ப்ப யாகத்தைத் தொடங்கிய வலிமை பொருந்திய தக்ஷகப் பிரம்மாவே உமது பாதார விந்தமே சரணம் ஐயா!''

## தக்கன், அக்கினி தேவனுக்குச் சொல்

### விருத்தம்

184. எதிரிலா ஏழு தால

ஏய்தென் கீழ்த்தி சைக்கே

அதிபதி எனப்பேர் பெற்ற

அக்கினி தேவே வாழி!

துதிபுரி யாகம் ஓமம்

சொரியவி முழுத ருந்தி

கதிர்பெறு தனஞ்செ யன்செங்

கனலிபா வகனே வாழி!

(சொரியவிமுழுதருந்தி=சொரி+அவி+முழுது+அருந்தி)

### வசனம்

"நிகரில்லாத ஏழு நாவுகள் பொருந்தி தென்கீழ்த் திக்குக்கு நாயகனாகி கீர்த்தி பொருந்திய அக்கினி தேவனே, வாழ்கக் கடவது! யாருந் தோத்திரஞ் செய்யும் இயாகத்திலும் ஓமங்களிலும் சொரிகின்ற நெய்யை யெல்லாம் புசித்து, கதிர்விட்டுப் பிரகாசிக்கும் தனஞ்செயா! சிவந்த கனலி பாவகா! நீடூழி வாழ்கக் கடவது!"

# கட்டியக்காரன் சொல்

## விருத்தம்

185. தனஞ்செயன் தாரத் தோடே
தக்கமா நகர நண்ணி
மனையிலி ருக்கும் போது
மகத்திரு முகம்ப டித்து
மனதினின் மோதம் வாய்ந்து
மயிடத்தின் மீதி வர்ந்து
கனிவுடன் களத்திரஞ் சூழக்
காலனும் வருகின் றானே!

(தனஞ்செயன்-அக்கினி பகவான்; தனஞ்செயன் தாரம்-சுவாகா தேவி)

## வசனம்

''அகோதெப்படி யென்றால், தனஞ்செயனாகிய அக்கினி பகவான், தன் தாரமான சுவாகா தேவியுடனே, தக்கமாநகரம் வந்து, அரண்மனையிலிருக்கும்போது, தக்கனனுப்பிய யாகப் பத்திரிகையை வாசித்துப் பார்த்து, மனதிலே சந்தோஷம் பொருந்தி, எருமைக் கிடாவின்பேரில் ஏறிக்கொண்டு, இஷ்டமாகத் தன் பெண்சாதி ஏழுபேர் சூழ்ந்துவர, எமதரும ராஜன், தக்கமாநகரம் வருகிற விதம் காண்க!''

# இயமன் வருகிற விருத்தம்

**இராகம் : அடாணா**

186. செ‌ன்னியில் மணியி ழைத்துத்

திகழ்மவு லியும்பு னைந்து

உன்னித முண்ட கத்தில்

ஒளிரவே நாமம் இட்டு

பொன்னணி யங்க தந்தோள்

பொருந்தவே வனைந்து வேள்வி

தன்னிலே குழைய லங்கச்

சண்டனும் வருகின்றானே!

(மவுலி - கிரீடம்; உன்னித முண்டகம் - அழகுள்ள நெற்றி; குழை - குண்டலம்; சண்டன் - எமதருமராசன்)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், சிரசிலே இரத்தினங்க ளிழைந்த பிரகாசம் பொருந்திய கிரீடம் தரித்து, அழகு பொருந்திய நெற்றியில் விளங்கும்படியாகத் திருநாமமிட்டுக்கொண்டு பொன்னினாற் செய்த அழகிய புஜகிரீதி தோளிலே பொருத்தமாக இருக்க, காதில் குண்டலங்கள் அமைவாக ஒளி செய்ய, எமதருமராஜன் வருகிற விதங் காண்க!''

# இயமன் வருகிற

## தரு

**இராகம் : அடாணா** **தாளம் : ஆதி**

### *பல்லவி*

187. தருமராஜன் வந்தான்! - மயிடமேறித்

தருமராஜன் வந்தான்!

### *அனுபல்லவி*

பெருமையுடைய செங்கோல்

பிசகாமலே எப்போதும்

சரியாகவே நடத்தும்

சத்தியவான் என்றோதும்! - தரும

அரிய செங்கோல் வேந்தன்! - நன்னீதியே

அமைந்த சற்குணச் சாந்தன்! - யாரும் வெருவப்

பிரிய முடனே சூலம்

பிடிக்கும் செங்க ராம்புயன்!

பிறங்கிய புஜகீரீதி

புனைந்த துவிதபுயன்!-தரும

சென்னியின் மகுடம் மின்ன-கரணந்தனில்

சிறந்த குண்டலம் தன்ன-சுப்பிரம

மன்னிய நவரத்ன மாலை மருமம்மேவ

மருங்கிற் புனைந்த வஸ்திரஒளி எங்கும்தாவ! -
தரும

வனப்பு மீசுரம் துலங்க -இருக்குநெற்றி

வண்ணத் திருமன் விளங்க - விசாரணையிற்

கனத்த பாதகர்களைக்

கடுஞ்சினமாய் அதட்டும்

கண்டிதம் உள்ளகாலன்

தூதரை மிரட்டும்! - தரும

(வெருவ - அஞ்ச; புஜகிரீதி - தோளணி)

## இயமன் தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

188. எவர்களும் அதிச யிக்க

இணையில்லா நெறியின் மேவித்

தவமது செய்து மேன்மை

சார்ந்த நல் வரங்கள் பெற்றுக்

குலைவுமீ சுரமாய் உற்ற

குணக்கட லேஏழ் பெண்ணை

இவர்தலாய் வதுவை செய்தெற்(கு)

ஈந்தநின் கழல்கள் போற்றி!

(வதுவை-மணம்; செய்தெற்கு= செய்து+எற்கு;எற்கு-எனக்கு; தக்கன், தன் மகள்கள் ஏழு பேர்களை எமனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்; அதை இங்கு எமதருமன் குறிக்கிறான்).

**வசனம்**

''சகலமானவர்களும் பார்த்து ஆச்சரியமடையும் படிக்கு நிகரில்லாத நல்ல வழியில் நின்று தவங்களைச் செய்து மேலான தன்மையை யடைந்து அருமையான வரங்கள் வாங்கி, மிகுந்த பெருமை பொருந்திய சற்குண சமுத்திரமே! தேவரீர், ஏழு புத்திரியை அன்புடனே எனக்குக் கலியாணம் செய்து, எனக்குக் கொடுத்த உமது இரண்டு பாதமே சரணம்! சரணம்! சுவாமி!''

## தக்கன் இயமனுக்குச் சொல்

**விருத்தம்**

189. செங்கோலின் முனைசா யாமல்

திருத்தமாய் முறைதப பாமல

பொங்கமாய் அரசு செய்யும்

புனிதன்கூற் றுவனே வாழி!

துங்கமுள் ளவரி யாரும்

துதிசெய்சற் குணம மைந்த

கங்கிலாக் கீர்த்தி வாய்ந்த

காலனே வாழி வாழி!

(துங்கமுள்ளவர்-உயர்ந்தோர்; துங்க முள்ளவரியாரும்=துங்கம்+உள்ளவர்+இயாரும்; 'யாரும்' என்பதை 'இயாரும்' என்று எழுதுவது இந்நாடகப் புலவரின் இயல்பாக உளது. இகரம், குற்றியலிகரம்; கங்கிலா=கங்கு+இலா; கங்கு-அளவு)

### வசனம்

"அரசு செய்யும் செங்கோலின் முனை சரியாயிருக்கும் படிக்கு, நல்ல நீதிமார்க்கந் தவறாமல் சந்தோஷமுடன் விசாரணை செய்யும் பரிசுத்த குணமுள்ள இயமனே வாழ்கக் கடவது! உயர்ந்த தன்மை உடையவர்கள் சகலரும் துதி செய்யும் பண்பு பொருந்திய அளவில்லாத கீர்த்திவானாகிய தருமராஜனே, வாழ்கக் கடவது!"

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

190.செய்யுந் சத்திரம் தனக்குத்

தீவிர மாக எய்தி

வெய்ய கூற்றுவன் இருக்கும்

வேளையிற் றென்மேற் கேந்தல்

துய்யவப் பதிபன் வாயு

சொலுநிதிக் கோனீசானன்

வையத் தாரோ கணித்து

மகத்துக்கு வருகின் றாரே!

(சத்திரம் - யாகம்; வேளையிற் றென்மேற்கேந்தல்=வேளையில்+தென்மேற்கு+ ஏந்தல்; தென்மேற்கு ஏந்தல்-தென்மேற்குத் திசையின் அதிபதியாம் நிருதி; நீருக்கு அதிபதியாம் வருணன் மற்றும் குபேரன், ஈசானன் ஆகியோர் வருகை குறிக்கப்படுகிறது)

**வசனம்**

''அகோதெப்படியென்றால், தக்ஷகப்பிரம்மா செய்யும் யாகத்துக்குச் சீக்கிரமாக வந்த இயமன் தன் மனைவியருடன் அரண்மனையிலிருக்கும்போது, தென்மேற்குத் திசைக்கு அரசனாகிய நிருதி, பரிசுத்தமாக்கும் நீருக்கு அதிபனாகிய வருணன், நிதிக்கு நாயகனாகிய குபேரன், ஈசானன் அவரவர்கள் வாகனத்தில் ஏறிக்கொண்டு, யாகத்துக்குத் தக்கமாநகரம் வருகிற விதங்காண்க!''

# நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்கள் வருகிற

## தரு

**இராகம் : பூரிகல்யாணி** **தாளம் : அட**

### பல்லவி

191. நிருதி வருணன் வாயு -

நிதிக்கோன் ஈசானன்!

நிகழ் மகத்துக்கு வந்தார்! - தக்ஷகன் செய்யும்

புகழ் மகத்துக்கு வந்தார்!

### அனுபல்லவி

கருதும் அவரவர்கள்

கனத்த ஊர்தியின்மிசை

காதலுடனே ஏறி

மேன்மையுடனே வீறி! - நிருதி

தக்ஷகன் செய்யும் யாகம்-பார்க்கிறதற்குத்

தருக்காக அதிவேகம்! - முடுக்குடனே

இக்ஷணம் புகவென்றே

இகயக்கில் எண்ணியே

அக்ஷய மாகவே

ஐவரும் நண்ணியே - நிருதி

சிரத்தினிலே கிரீடம் - விளங்குகின்ற

சிறப்பேஅதி விசேடம்! - விசாலமுறும்

உரத்திற் பளபளப்பாய்

ஒண்தரள ஆரம்!

கரத்தின் கரனென்னக்

கலிக்கவேவிஸ் தாரம்! - நிருதி

தோடக மலரே அன்ன-அஸ்தத்தினில்

சொகுசாய் ஆயுதங்கள் மின்ன அந்தந்த

நீடிய திக்குக்கு

நிலையாகவே யிருக்கும்

பீடுடை யவர்தவப்

பிரபலருந் துதிக்கும்! - நிருதி

(இக்ஷணம்-இந்தக் கணத்தில்; ஒண்தரளம்-ஒளிமுத்து)

## தக்ஷகப் பிரம்மாவுக்குச் சொல்

### விருத்தம்

192. ஏற்ற மாகிய த்வஞ்செய்

இருடியர் தௌத்தி யஞ்செய்

ஆற்றல் மேதகு புதிந்தே
அரியநல் வரத்தால் ஓங்கும்
சாற்றுசீர்த் தியனே வேதச்
சதுர்முகன் பகல்வா யாரும்
போற்ற வேள்வி தொடங்கும்
புண்ணியப் புனிதா போற்றி!

(தௌத்தியம் - துதி)

**வசனம்**

"மேன்மையாகிய தவங்களைச் செய்யும் மகாரிஷிகள் துதிசெய்யும்படிக்குத் தவசு மேலாகச் செய்தே அருமையான நல்ல வரங்களைப் பெற்று உயர்ந்த கீர்த்தியுள்ளவனே! வேதத்தியாயனம் செய்யும் பிரம்மதேவன் குமாரனே! யாவரும் புகழும்படிக்குச் சர்ப்ப யாகத்திற்கு ஆரம்பித்த தருமகுணமும் புனிதமும் உள்ளவனே, சரணம்! சரணம்! ஐயா!"

## தக்ஷகப்பிரம்மா நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்களுக்குச் சொல்

**கவி**

193. தந்தமா திரங்கள் தனக்கதி பதியாய்

விந்தையாய் இருக்கும் விமலரே வாழி!

சிந்தையும் உவந்து திகழ்சர்ப்ப வேள்விக்(கு)

அந்தமாய் நண்ணிய அன்பனே வாழி!

(தந்தம்=தம்+தம்; மாதிரங்கள்-திசைகள்; இப்பாடல், கலிவிருத்தம்)

### வசனம்

''தங்கள் தங்கள் திக்குகளுக்கு நாயகராக விநோதத்துடனிருக்கும் பரிசுத்தமுள்ளவரே, வாழ்கக் கடவது! மனதிற் சந்தோஷத்துடன் விளக்கமாகச் செய்யும் சர்ப்பயாகத்துக்கு அலங்காரத்துடனே யிவ்விடம் வந்த அன்புடையவரே வாழ்கக் கடவது, திக்குப் பாலகரே!''

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

**இராகம் : தோடி**

194. திக்குப் பாலகர் வந்து

செப்பமாய்ச் சத்தி ரத்தில்

புக்கியே வைகும் போது

புகலி மகரனென் றேபேர்

மிக்கவே பெற்ற திங்கள்

விமானத் தாரோ கணித்து

தக்கமா நகரத்தீ திற்குத்

தாரத்தி னுடன்வந் தானே!

(ஆரோகணித்து-ஏறி; ஆரோகணம் அவரோகணம் என்று ஏழுசுரங்களில் வருவதைக் காணலாம்)

### வசனம்

''அகோதெப்படியென்றால், இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்கள் சத்திரமாகிய யாகத்துக்கு உள்ளே போய் இருக்கும்போது, சொல்லானது இமகரனென்று நாமதேயம் பெற்ற சந்திரன், விமானத்தின் பேரில் ஏறிக்கொண்டு தக்ஷகப்பிரம்மாவின் பட்டணத்திற்குத் தன்னுடைய மனைவியர்கள் இருபத்தேழுபேருடன் கூட, சர்ப்பயாகத்திற்கு வருகிற விதம்!''

## சந்திரன் வருகிற கியால்

### தரு

இராகம் : மத்தியமாவதி தாளம் : ஆதி

### பல்லவி

195. சந்திரன் சிந்தை மகிழ்ந்(து)

அந்தம தாக வந்தனனே!

*அனுபல்லவி*

எந்த உலகத்தினரும

இராக்கதிரன் என்றே சொல்லும்

சுந்தரமே நண்ணிய

அசுரனென்றே நாமம் புல்லும்! - சந்

தக்ஷகன் என்றொளி மேவுந்-

தனையர்கள் ஐம்பது பேரில்

பக்ஷமுடன் இருபத் தேழு

பாவையரை நன்மணம் செய்த - சந்

சகலமும் அற்புதம் அடையத்

தரங்கம் எறியும் பாற்கடலில்

மகிமை உடனே அவதரித்த

வழுத்தும் கோள்களில் ஒன்றான - சந்

குமுத நறுநெய் தற்குக்

குலவிய நண்பன் எனமெத்த

அமுத கிரணம் பொழியும்

அம்புலி என்றே பேர்பெற்ற! - சந்

(இராக்கதிரன் =இரா + கதிரன் ; இரவில் கதிர்வீசும் திங்கள்; தரங்கம்-அலை; அம்புலி-திங்கள்; பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் அம்புலிப்பருவம் என வரல் காண்க)

## சந்திரன், தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

196. புரியுடன் இருபத் தேழு
புதல்வியை இனிதாய் மன்றல்
புரியவே எனக்குத் தந்த
புண்ணிய மாமா போற்றி!
அரியநல் லவர்கள் வாங்க
அளவிலா தவர்கள் செய்து
பெரியவன் எனவி ளங்கும்
பிரபல முதல்வா போற்றி!

(மாமா - இங்கு தக்கனைக் குறிக்கும்)

### வசனம்

"ஆசையுடனே தேவரீர் இருபத்தேழு குமாரத்தியை இஷ்டத்துடன் திருகலியாணம் அடியேனுக்குச் செய்து கொடுத்த தருமமிகுந்த மாமனே! உமது பாதமே சரணம்! அரிதாகிய வரங்கள் பெற வேண்டியதற்கு மிதமில்லாத தவங்களைச் செய்து

யாவருக்கும் மேன்மையுடையவனாகப் பிரகாசிக்கும் கீர்த்தியுள்ள முதல்வனாகிய தக்ஷகப்பிரம்மாவே, சரணம்!''

## தக்கன், சந்திரனுக்குச் சொல்

### விருத்தம்

197. எத்தலத் தவரும் போற்ற
இமகரம் வாய்ந்து நன்கு
புத்தியின் நனிசிறந்த
பொலிவுள சசியே வாழி!
குத்திரஞ் சிறிதும் இல்லாக்
குபேரவம் புலியே வாழி!
பத்தினி மாரோ டேநீ
பல்லாண்டு வாழ்கு வாயே!

(சசி-திங்கள்; வாழ்குவாயே என்ற சொல் குச்சாரியை பெற்று வந்தது)

### வசனம்

''எந்த வுலகத்திலிருப்பவர்களும் புகழும்படியான குளிர்ந்த கிரணம் பொருந்திய நல்ல அறிவிலும் சிறந்து விளங்கிய சந்திரனே

வாழ்கக் கடவாய்! கபடவஞ்சனை கொஞ்சமும் மனதிலில்லாத குபேரனே, அம்புலியே வாழ்கக் கடவாய்! உனது மனையர் இருபத்தேழ் பேருடனே நீ பல்லாண்டாகிய அநேககாலம் வாழ்கக் கடவாய், மருகனே!''

(மனையர் = மனை + ய் + அர் = மனையர்; ய் - உடம்படுமெய்;
அர் - பலர்பால் விகுதி; மனைவியர் என்பது பொருள்)

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

**இராகம் : தோடி**

198. இமகரம் உடைய திங்கள்
இயாகசா லைக்கு நண்ணி
அமைவுடன் இருக்கும் போது
ஆறிரண் டாமா தித்தர்
கமையொழுக் கம்மி குந்தக்
கன்சர்ப்ப யாகத் திற்கு
இமைமுடி குயவி லுந்தி
இஷ்டமாய் வருகின்றாரே!

(ஆதித்தர்-சூரியர்; ஆறிரண்டு-( 6 X 2) பன்னிரண்டு;
கமை-ஒழுக்கம்)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், குளிர்ந்த கிரணங்களையுடை சந்திரன், தக்கனுடைய யாகசாலைக்கு வந்து இருக்கும்போது பன்னிரண்டு சூரியர்கள் பொறுமையும் ஆசாரமும் மிகுந்த தக்ஷகப்பிரம்மா செய்யப்போகிற சர்ப்ப யாகத்திற்குப் பிரகாசிக்கும் சிகரத்தையுடைய இரதத்திலேறிக் கொண்டு அன்புடனே வருகிற விதங்காண்க!''

## பன்னிரண்டு சூரியர் வருகிற

### தரு

**இராகம் : பூரிகலியாணி** **தாளம் : ஆதி**

### பல்லவி

199. பம்பு கிரண மேவும்

பரந்த காயத்து லாவும்

பன்னிருவர்கள் வந்தார்!

### அனுபல்லவி

கம்பொருந் தியமுடி

கதிர்மணி ஒளிவீச

கர்ணத்தில் அணிந்த

காதணிப் பிரகாச - பம்பு

அரவிந்த நண்பாளன்(று)

அனைவர்களும் கொண்டாடும்

கரவில்லா அந்தணர்

காலைமாலை நாடும்! - பம்பு

புயத்தினில் அங்கதம்

பொலிவுடனே துன்ன

புயக மணியாரம்

பொருந்திவற்ச மின்ன! - பம்பு

அழகிய நுதலினில்

அவிர்செயத் திருநாமம்

பழைய மறையவர்கள்

பண்ணவர் தொழுநேமம்! - பம்பு

(காயம்-உலகம்; கர்ணம்-காது; நுதல்-நெற்றி)

## ஆதித்தர்கள், தக்கனுக்குப் போற்றி

### விருத்தம்

200. கடிகமழ் வாலம் போரு
கத்தினர் மிசையு தித்த
வடிவவெண் ணிறத்தாள் வாணி
வரன்தந்த புதல்வா போற்றி!
திடமுடன் வரத்தைப் பெற்றுச்
செப்பரும் பெருமை உற்ற
கொடையினிற் சிறந்த உந்தன்
கோகன கத்தாள் போற்றி!

(கனகத்தாள்-பொற்றாள்;பொற்றாளை உடையவன் என்று தக்கனை இங்கு, சூரியர்கள் போற்றுகின்றனர்)

**வசனம்**

''வாசனை வீசப்பட்ட வெண்மை பொருந்திய தாமரை மலர்மேல் அவதாரஞ் செய்த வெள்ளை மேனியுள்ள சரஸ்வதியினுடைய நாயகனாகிய பிரம்மதேவர் பெற்ற புத்திரனாகிய தக்ஷகப்பிரம்மாவே, சரணம்! மனோதைரியத்துடன் மேலான வரங்கள் வாங்கிக் கொண்டு சொல்லுதற்கு அருமையான பெருமையை அடைந்து கொடுக்குந் தன்மையிற் சிறந்தவுமது தாமரை மலர்போன்ற பாதங்கள் சரணம்!சரணம் ஐயா!''

## தக்கன், ஆதித்தர் பன்னிருவருக்குச் சொல்

## விருத்தம்

**இராகம்: ஆனந்த பைரவி**

201. சாந்தமும் ஒழுக்க மாட்சி
தயாளமும் ஆற்றல் ஞானம்
வாய்ந்தவா தித்த ரேநீர்
மகிழ்வன வரதம் வாழி!
காந்தியார் சிவந்த வெய்ய
கதிர்சகஸ் திரம்ப டைத்த
வேந்தனே சுபக ரங்கள்
மேவிமேன் மேலாய் வாழி!

## வசனம்

''சாந்தமாகிய பொறுமையும், ஆசாரமும், பெருமையும், தயாளமும், மிகுந்த அறிவும் பொருந்திய ஆதித்தராகிய பன்னிருவர்களே, நீர் சந்தோஷத்துடனே சதாகாலமும் வாழ்கக் கடவது! பிரகாசம் பொருந்திய சிவந்த கிரணங்கள் ஆயிரம் படைத்த சூரியர்களே, மங்களாகரத்துடன், மேல்மேலாக வாழ்ந்திருக்கக் கடவீர், ஆதித்தர்களே!

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

இராகம் : தோடி

202. ஆயிரம் கிரணம் கொண்ட
ஆதித்தர் ஆறி ரண்டு
தூயருந் சத்தி ரத்தில்
துன்னியங் கிருக்கும் போது
தாயிலு மன்போ ரேகா
தசஉருத் திரர்கள் தாமும்
நேயமாய்த் தக்கன் செய்யும்
நெடுமகம் தனக்கு வாரார்!

## வசனம்

''அகோதெப்படி யென்றால், ஆயிரங் கிரணங்களைக் கொண்ட சூரியர்கள் பன்னிரண்டு பேர்களும் யாகசாலைக்கு வந்து, அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தார்கள். பெற்றதாயைப் பார்க்கிலும் அதிக அன்புடையவர்களான பதினோரு உருத்திரர்களும் இஷ்டத்துடனே தக்ஷகப் பிரமன் செய்யும் பெரிய சர்ப்பயாகத்துக்கு வருகிற விதங் காண்க!''

# பதினோருருத்திரர்கள் வருகிற தரு

**இராகம்: ஸ்ரீராகம்** **தாளம்: அட**

## *பல்லவி*

203. உருத்திரர் வந்தார்! - ஏகாதச

உருத்திரர் வந்தார்!

## *அனுபல்லவி*

பெருத்த ஒற்றவர் தந்த

பிறங்கும் திருமுகம்

அருத்தி உடனே வாசித்(து)

ஆவலுடனே மகம்! - உரு

பட்டிழை யம்பரம்

பாங்காகவே இடை

கட்டிக திரார

மகலத்துற நன்னடை - உரு

குண்டலம் செவியினில்

குலவித் துளங்கவே

முண்டகம் தனில்நீறு

மண்டலம் விளங்கவே! - உரு

கருத்துடனே தக்ஷகன்

செய்சர்ப்ப யாகம்

பெருக்கமாய்க் கண்டவிர்ப்

பாகம்பெற விவேகம்! - உரு

(ஏகாதச - பதினொன்று)

## பதினோரு உருத்திரர்கள் தக்கனுக்குப் போற்றி

### விருத்தம்

204. பெருவிதி யாம்வே தற்குப்

பிள்ளையாய் அவத ரித்தே

ஒருசிறுவிதி யெனப்பேர் பெற்ற

உன்சரோ ருகத்தாள் போற்றி!

அருமையாம் சர்ப்ப வேள்வி

அடைவுடன் செய்வ தற்குப்

பிரியமாய் நினைத்த தக்கப்

பிரமநின் சரணம் போற்றி!

### வசனம்

''பெருமை பொருந்திய விதியென்னும் பெயரையுடைய பிரமதேவருக்குப் புத்திரனாகப் பிறந்து, ஒருவரும் சமானமில்லாத சிறியவிதியென்று திருநாமம் பெற்றவுமது பாதாரவிந்தமே சரணம்! சொல்லுவதற்கு அருமையான சர்ப்பயாகம் மேன்மையாகச் செய்வதற்கு இஷ்டமாக எண்ணியாரம்பித்த தக்ஷகப் பிரமனே, வுமது பாதமே சரணம்!''

## தக்கன், பதினோருருத்திரர்க்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

205. பெருத்தமாண் புள்ளோ ரென்றும்
பேசுமே காத சப்பேர்
உருத்திர ரேயயெந் நாளும்
உத்துங்கம் உடனே வாழி!
திருத்திய மணிப தித்துத்
திகழ்பதக் கங்கள் நன்றாய்
தரித்தது விளங்கு மார்பு
தடமுறும் விமலா வாழி

(உத்துங்கம்-உயர்ச்சியும் புகழும்)

### வசனம்

''மிகுந்த பெருமையுடையவர்கள் எப்பொழுதும் சொல்லப்பட்ட பதினோருருத்திரர் என்று கீர்த்திபெற்றவர்களே! நீங்கள் எந்த நாளைக்கும் உயர்ச்சியுடனே வாழ்கக் கடவது! செவ்வையாக இரத்தினங்களைப் பதித்துப் பிரகாசிக்கப்பட்ட பதக்கங்களைச் செவ்வையாய் அணிந்துகொண்டு, அதுஒளி செய்கின்ற விசாலம் பொருந்திய மார்புள்ள விமலரே வாழ்கக்கடவது!''

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

206. இயம்பும்ஏ காத சத்தர்

இசையுறு உருத்தி ராளும்

நயம்பெற யாக சாலை

நண்ணியாங் கிருக்கும் போது

பயம்பனி சிறிதில் லாது

பரவிச்சஞ் சரிக்கும் தீரன்

சயம்பெறு முனிவர் நார

தருமிதோ வருகின் றாரே!

(சயம்பெறு-வெற்றிகொள்)

## வசனம்

''அகோதெப்படி யென்றால், பன்னொருவரென்று சொல்லப் பட்ட கீர்த்திபொருந்திய உருத்திரர்கள் இன்பமாய் அவிர்ப்பாகம் பெற்றுக்கொள்ள யாகசாலைக்கு வந்து, அவ்விடத்தில் இருக்கும்போது, அச்சம், வருத்தம் கொஞ்சமு மில்லாது, எந்த இடத்துக்கும்போய்ச் சஞ்சாரம் செய்துவரும் தைரியசாலியாகிய வெற்றிபெறும் நாரதமுனிவர்,சர்ப்ப யாகத்துக்கு வருகிற விதம்காண்க!''

## நாரதர், வருகிற விருத்தம்

**இராகம் : தோடி**

207. அரவிந்த மலரை ஒத்த
அஸ்தத்தில் வலிய தண்டு
பெருகமண் டலமும் பற்றிப்
பிடியங்கா வியுமு டுத்திச்
சிரமிசை நெடுங்கோ டீரஞ்
சிறிதுற முடித்துக் கொண்டு
வரமுனி வர்கள் போற்று
மாட்சிநா ரதர்வந் தாரே!

(அரவிந்தம்-தாமரை; கோடீரம்-சடை)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், தாமரை மலருக்குச் சமானமாகிய கையிலே பலம்பொருந்திய தண்டும் கமண்டலமும் பிடித்துக் கொண்டு காவி வஸ்திரம் இடையிலே தரித்துக்கொண்டு, சிரசில் நீட்சியாக வளர்ந்திருக்கும் சடையைச் சுருக்கிச் சிறிதாக முடித்து, வரங்களைப் பெற்ற மகாரிஷிகள் துதிக்கும் பெருமையுள்ள நாரத முனிவர், தக்ஷகப்பிரம்மா யாகசாலைக்கு வருகிறாரென்றறிக!''

## நாரதர் வருகிற கியால்

### தரு

**இராகம் : மோகனம்** **தாளம் : அட**

### பல்லவி

208. மிகுமாதவ நாரதர் வந்தார்! - இதோ
தகுமாதவ நாரதர் வந்தார்!

### அனுபல்லவி

நிகரா ரெனவே
நெடும்வீ ணையினில்
சுகமே பெருகும்
சுதிபா டும்வல - மிகு

ஒளிரா வரண

முயர்கா வியுமே

மிளிர்மீ சுரமா

இடையில் மினவே! - மிகு

அதிபார ரமதா

கியசெஞ் சடையைப்

பதிவா கமுடிந்

துயர்பாங் குடனே! - மிகு

திருமார் பினிலே

திகழ்நூல் திவள

இருதாள் குறடும்

எழிலே செயவே! - மிகு

இணையார் செவியில்

இருகுண் டலமே

மணிசெய் யகரச்

செபமா லையுடன் - மிகு

உலகத் தினிலே

உளபல் லோர்க்கும்

கலகத் தினையே

கனிவாய்ப் புரியும் - மிகு

மறையோ திறைவன்

மகவா யுதித்த

நிறைஞா னம்விளங்

கியமாட் சியினன்! - மிகு

## தக்கன், நாரதருக்குச் சொல்

### விருத்தம்

209. நாதத்தில் சிறந்த வீணை

நாளுமின் புடனே பாடி

போதத்தை மிகஉள் ளத்தில்

பொருந்திய முனிவர் கோவே!

தீதற்ற இயல்பாய் இங்கு

செய்தநல் ஆச னத்தில்

கோதற்ற மேன்மை ஆகக்

கோவென இருப்பீர் ஐயா!

(கோதற்ற-குற்றமற்ற; நாலுமின்புடனே=நாளும்+இன்புடனே)

### வசனம்

''இராகத்திற்கு இசைந்த சத்தத்திற் சிறந்த வீணையைச் சதாகாலமும் இஷ்டத்துடனே பாடியும், மெய்ஞ்ஞானத்தை மனதிலே பொருந்தியிருக்கும் இரிஷிகளுக்கெல்லாம் நாயகா! குற்றமில்லாமல் அழகுடனே இந்த யாகசாலைக்குள் செய்து இருக்கும் ஆசனத்தில் களங்க மில்லாமல் உயர்ச்சியாக யாவருக்கு முதல்வராக எழுந்தருளியிருப்பீர், நாரத மகாமுனிவரே!''

## நாரதர் தக்ஷகப் பிரம்மாவுக்குச் சொல்

### *பரணி*

210. தக்ஷக னேநீர்

சாற்றிய படியே

பக்ஷமாய்ப் பீடம்

பதிவுடன் இருப்பேன்!

(பீடம் - இருக்கை)

### வசனம்

''கேளும், தக்ஷகப் பிரம்மாவே! நீர் சொல்லிய பிரகாரம் அன்புடனே கொடுத்த ஆசனத்தில் பொருந்தி இருக்கின்றேனையா, சிறுவிதியே!''

## கட்டியக்காரன் சொல்

### எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**இராகம் : சாவேரி**

211. அந்தமுடன் தக்ஷகன்செய் சர்ப்ப வேள்விக்(கு)
அன்புடனே பரமபத நாதன் வேதன்
இந்திரனே முதலியமுப் பத்து மூன்று
இயற்கோடி இமையவர்கள் எண்ணா றெட்டு
முந்தியமா தவமுனிவர் பணிநாட் டுள்ளோர்
மொழியுமட்ட திசையதிபர் முன்னான் கெல்லை
சந்திரனே காதசருத் திரரே ஆதி
சகலரும்மே வினர்கள் சிவன் தவிரத் தானே!

(சந்திரனேகாதச=சந்திரன்+ஏகாதச)

### வசனம்

''அகோதெப்படியென்றால், தக்ஷகப் பிரமன் அழகுடனே செய்யப்பட்ட சர்ப்ப யாகத்துக்கு இஷ்டமாகப் பரமபத நாதனாகிய மகாவிஷ்ணு, பிரம்மதேவன், இந்திரனாதியாய் முப்பத்து முக்கோடித் தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள், நாகலோகத்திலுள்ள

ஆதிசேஷன் முதலியவர்கள் அஷ்டதிக்குப் பாலகராகிய இந்திரன், அக்கினி, இயமன்,நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பன்னிரண்டு சூரியர், சந்திரன்,பதினோரு உருத்திரர், கருடகாந்தருவர், சித்தர், வித்தியாதரர், அஷ்டவசுக்கள் முதலிய இன்னம் சகலமானவர்களும் வந்து நிறைந்து இருந்தார்கள், சிவன் தவிர என்றறிக!''

## தக்கன், கலைக்கோட்டு முனிவருக்குச் சொல்

### *அறுசீர்க் கழிநெடில்*

### விருத்தம்

212. வனிதையர் முகம்பா ராது
வனத்தினில் தவத்தைச் செய்து
கனதைஉற் றிருக்கும் தூய
கலைக்கோட்டு முனிவ ரேநீர்
புனித யாக சாலைக்குள்
புக்கிஇவ் விடத்தில் வைகி
இனிதுடன் ஆரம் பஞ்செய்(து)
யாகத்தை நடத்து வீரே!

(வனிதை-பெண்)

### வசனம்

''ஸ்திரீகளின் முகத்தைப் பார்க்காமல் ஆரண்யத்தில் பெரிய தவங்களைச் செய்துகொண்டு, பெருமை பொருந்தியிருக்கும் பரிசுத்தமுள்ள கலைக்கோட்டு மகாரிஷியே! நீங்கள் இந்தப் புனிதமுள்ள யாகசாலைக்குள் போய், அந்த இடத்தில் உட்கார்ந்து மனவாஞ்சையுடன் ஆரம்பஞ் செய்து இயாகவேலை நடத்துமையா, முனிவரே!''

## கலைக்கோட்டு முனிவர், தக்கனுக்குச் சொல்

### அறுசீர்க்கழிநெடில் விருத்தம்

**இராகம் : தோடி**

213. தக்கப்பிரம் மாவே கேளும்!

சாற்றிய படியே யானும்

பக்குவ மாக இந்தப்

பாரிய யாகம் தன்னை

மிக்கநற் சீர்த்தி ஓங்க

மேதகாய் இயற்று கின்றேன்!

முக்கியப் பொருள்கள் கேட்கு

முன்னமே தருகு வாயே!

(பாரிய-பெரிதான)

### வசனம்

"கேளும், தக்ஷகப் பிரம்மாவே! நீர் சொல்லிய பிரகாரம், நான் தகுதியாக இந்தப் பெரிதாகிய சர்ப்பயாகத்தை மிகுந்த, நல்ல, கீர்த்தி யுண்டாகும்படிக்கு மேன்மையாகச் செய்கின்றேன்! அதற்கு முக்கியமான வஸ்துக்களைக் கேட்கிறதற்கு முன்னமே கொடுத்தருளுமையா சிறுவிதியே!"

## தக்கன் சொல்

### பரணி

214. கர்த்தனே நீங்கள்

கழறிய படிக்கு

வஸ்துகள் யாவையும்

வழங்குவேன் ஐயா!

### வசனம்

"கேளும், கலைக்கோட்டு முனிவரே! நீங்கள் சொல்லிய பிரகாரம் யாகத்துக்கு வேண்டிய பொருள்கள் எல்லாம் தடையில்லாமல் கொடுக்கிறேன்! யாகத்துக்கு ஆரம்பிக்கலாம், முனியீஸ்வரரே!"

## கலைக்கோட்டு முனிவர் சொல்

### தோத்திரம் சுலோகம்

215. சுக்லாம் பரதரம்
விஷ்ணும் சதுர்புஜம்
பிரசன்ன வதனம் த்யாயேத்
சர்வ விக்னோப சாந்தயே!

## இதுவும் கலைக்கோட்டு முனிவர் சொல்

### விநாயக தோத்திரம்

216. சுமுகாய நமா ! ஏக தந்தாய நமா !
கபிலாய நமா ! கஜகர்ணிகாய நமா !
லம்போதராய நமா ! விகடாய நமா !
விக்கின ராஜாய நமா ! தூமகேதுவே நமா !
கணாதிய க்ஷாய நமா ! பாலசந்திராய நமா !
சூர்ப்பகர்ணாய நமா ! ஏரம்பாய நமா !
ஸ்கந்தபூர்வ ஜாய நமா ! ஸ்கந்த கிரசாய நமா !
உமாசுதாய நமா ! வக்ரதுண்டாய நமா !

(ஏகதந்தன்-ஒற்றைக்கொம்பன்; கஜகர்ணி-யானைக்காதான்)

# கட்டியன் சொல்

## எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : மோகனம்**

217\. மாதவனாங் கலைக்கோட்டு முனிவர் சர்ப்ப
மகத்தினிற்கு விநாயகரை இறைஞ்சிப் போற்றி
ஓதமிலா மல்தொடங்கி நடத்தும் போழ்தில்
எதிர்இருந்த நாரதன்அங் கெழுந்து பார்த்து
ஆதிபர மன்தவிர மற்ற தேவர்
அனைவர்களும் அமர்ந்திருக்கக் கண்டு கௌரி
நாதனுறும் இரசிதமா திரத்தி னுக்கு
நாரதரும் வேகமுடன் எண்ணி னாரே!

(இரசிதமாதிரம்-சிவனின் வெள்ளி மலை)

### வசனம்

''அகோதெப்படியென்றால், மகத்தாகிய தவ மகிமையுள்ள கலைக்கோட்டு முனிவர் விநாயகக் கடவுளை வணங்கித் தோத்திரஞ் செய்து, சர்ப்ப யாகத்திற்கு ஆரம்பித்து,செய்யும்போது, எதிரிலிருந்த நாரதமகரிஷி எழுந்திருந்து, அந்த யாக சாலை முழுமையுஞ் சுற்றிப்பார்த்துப் பரமசிவன் தவிர, மற்ற தேவர்கள்

எல்லாரும் வந்திருக்கக் கண்டு, கௌரிநாதனாகிய சிவனிருக்கும் இரசிதமாதிரமான வெள்ளி மலைக்கு, நாரதமகாரிஷி, அதிகவேகமாக வருகிற விதங்காண்க!"

## நாரதர் வருகிற

## தரு

**இராகம் : சங்கராபரணம்** **தாளம் : அட**

### பல்லவி

218. கைலைக்குப் போராரே!- நாரதரும்

கௌரிபால் வாராரே!

### அனுபல்லவி

எய்தும்ஊழ் வினைகளை எரியச் செய்துதவம்

இயற்று முனிவர்கள் இனந்துதி மகத்துவ - கைலை

சிரத்தில் நெடுஞ்சடை-துலங்க நடு

திகழ்க்காவி யாகுமுடை-ஆசியத்தினில்

திருத்திய திருமண்

சிறப்புடனே விளங்க

சிதமேவும் எக்கியோப

விதமார்பினில் துளங்க!-கைலை

பாணியில் வீணை பற்றி - நாதத்துடன்

பாணி இயலாய் ஒற்று - பாடிக்கொண்டு

சேணுலவு கின்னரர்கள் சிரமசைக்க

மாணுலவு நல்மயேசன் உறையுந்தக்க ! - கைலை

கையினில் செபமாலை - எடுத்துக் கொண்டு

கருத்துடன் நனிவேலை - செயப்போறாப் போல்

மெய்யில் வியர்வைநீர்

விழவே நடைநடந்து

மிகுந்த செடிமுட்கல்

மேவும் இடங்கடந்து ! - கைலை

(துளங்க-அசைய)

## கட்டியன் சொல் பொது

### விருத்தம்

219. சுருதிமுற் றுணர்ந்த ஞானத்

தூயநா ரதரும் கைலை

கருதியே வருகும் போது

கண்ணுதல் மூர்த்தி யான

பகுதிநேர் பரசு கொண்ட

பரன்கொலு வாசல் காக்கும்

பெருதிறல் கட்டியக் காரன்

பெட்புடன் வருகின் றானே!

(பெட்பு-அன்பு)

*வசனம்*

"அகோதெப்படி யென்றால், நான்கு வேதங்களும் குறைவில்லாமல் அறிந்த மெஞ்ஞானமும் பரிசுத்தமு முடைய நாரத மகாரிஷி கைலாசகிரிக்குப் போகவேணுமென்று நினைத்து வரும்போது, நெற்றிக்கண்ணை யுடைய சூரியப்பிரகாசம் போன்ற பரசாயுதப்பரமன் கொலுவாசலைக் காக்கும் பெரிதான, திராணி பொருந்திய கட்டியக்காரன் அன்புடனே வருகிற விதங் காண்க!"

## கட்டியன் வருகிற தரு

**இராகம் : தோடி** **தாளம் : அட**

*பல்லவி*

220. வீரக் கட்டியக்காரன் வந்தான்-விதரண

சூரக் கட்டியக்காரன் வந்தான்!

## அனுபல்லவி

தீரமுடன் சகல தேவர்களை வெருட்டி

ஆரவா ரத்துடன் அதட்டும் மகாகெட்டி!- வீர

கஞ்சக் கரத்தினில் வெற்றி-தரும்படையைக்

கதழ்வுடனே எடுத்துப் பற்றி - பிரகாசம்

விஞ்சும் பவளத்தாழ்

வடங்கள் மேன்மேலாக

மேவப் புனைந்துகொண்டு

உளந்தனில் மாலாக! - வீர

எழில்ம ருங்கினில் தட்டி-சல்லடம் தன்னை

இயலாய்ப் பிசிந்து கட்டி!-சிறுநுதலில்

அழகுடனே விபூதி

அலங்காரமாக இட்டு

ஆண்மை உள்ளசிவ

கணங்களையும் மிரட்டும்! - வீர

திகழா னனத்தில் வன்ன-முடையநன்கு

திலதப் பொட்டொளி மின்ன- சரிகைமிக

நிகழும்பாகை தலையில்

நேயமுடன் புனைந்து

நிமலன் இரண்டுபத

நீரோருக நினைந்து - வீர

## கட்டியக்காரன் சொல்

### கட்டியம்

221. சீர்மேவு பண்ணவர்கள் அனுதினமும் துதிசெய்து

சேவடி வணங்கும் அமலன்

சேமாமாரு கௌரிக்கு வாமபா கத்தினைத்

திறமாக வேயளித் தேதான்

கூர்மேவு பரசாயுதம் புள்ளிமான் தன்னைச்

சோகனக வத்த முற்றோன்

கூறரிய திரிபுரங் களைநகைத் தானனக்

கோவழலி னாலெ ரித்தோன்!

பேர்மேவு முப்பத்து முக்கோடி இமையவர்கள்

பெட்டிடன் இறைஞ்சு பாதன்

பிழையிலா தீரெட்டு வயதுமார்க் கண்டற்குப்

பிரபல மதாய்நல் கினோன்!

தார்மேவு மதலை கூவிளம் வெண்ணி றப்பிறை

தரித்த கோடீ ரப்பரன்

தகையுற்ற நவரத்ன கொலுவிற்கு வருகிறார்

சகலரும் எச்ச ரிக்கை!

(வாமபாகம்-இடப்பாகம்;சேவடி=செம்மை+அடி;
இமையவர்கள்-தேவர்கள்; ஈரெட்டு வயது=பதினாறுவயது)

## பரமசிவன் வருகிற விருத்தம்

**இராகம் : சாவேரி**

222. பலமணிக சிதவிக சிதம ருவும்
பருப்பதக் கைலையில் பரிவாய்
நலமுறும் ஒழுக்க சிவகண மதிக
நண்ணிதம் பிருபுடை அணுகப்
புலமுறும் இதய அறிவுள குரவர்
போற்றரும் பரப்பிரம்ம ரூபம்
இலகிய பரமன் அன்பருக் கெளியன்
இயல்பெறு கொலுவில் வந்தனனே!

(இருபுடை-இருபக்கங்கள்;போற்றரும்=போற்ற+அரும்)

### வசனம்

''அகோதெப்படி யென்றால்,அநேக நவரத்னங்கள் பதித்த மலர்ச்சியையுடைய மலையாகிய கைலாசத்தில், அன்புடனே நல்ல

ஆசார நெறியுள்ள சிவகணங்கள் பொருத்தமாய்த் தமது இரண்டு பக்கங்களிலும் சூழ்ந்துவர, தெளிவு பொருந்திய மனதுள்ளவர் அறிவாளிகளாகிய பெரியோர் துதி செய்யும் அருமையான பரம்பிரம்மமாகிய ரூபம் பிரகாசிக்கின்ற பரமசிவன் அடியாருக்குக் காண்பதற்கு சுலபமானவன்! அலங்காரமுற்ற கொலுவில் விநோதமாக வருகிற விதங் காண்க!''

## *சிவன் வருகிற தரு*

**இராகம் : பூரிகலியாணி** **தாளம் : ஆதி**

### *பல்லவி*

223. இமயவல்லிக் கோர்பாகம்-ஈந்தபரனன்பாக
எழிற்கொலு வந்தனனே!

### *அனுபல்லவி*

அமலமாகிய நந்தி
அபரமாரோ கணித்து
அழகிய இரசிதம்
ஆடும்பொருப் பிடித்து இமய

அருமைஉள்ள சாந்த ஒழுக்க அன்பரித
ஆலயஞ் சஞ்சரிப்பேன்-ஆத்தி

அம்புலி கூவிளம் தும்மை கடுக்கைகர

ஆற்றை வேணியில் தரித்தோன்-எதிர்

ஒருவரு நிகரில்லா தோடி வந்தமத - இமய

ஓங்கல் தோலை உரித்தோன் பொல்லா

உக்கிரமுள்ள ராமரக்கர் வாசஞ் செய்த

ஊர்மூன்றையும் எரித்தோன் -மனம்

பிரியமுட ணங்கதா பரணம் பூண்ட

பெருமான் அடியவரைப் பெட்புடனே ஆண்ட

வரிபுலித் தோலினன் மாகாளியுடன் தாண்ட

வம்புரிந்தோன் சுந்தரன் அன்புக்காய் வேண்ட - இமய

மாது பரவை மந்திரம் - கங்குலினிலே

தூது சென்றே தந்திரம் - அவட்குரைத்து

மன்னுஞ் சுந்தரற்கு மருவச் செய்துவைத்த

பன்னும் பிரபஞ்சங்களிற் பரவிய பிரசித்த! - இமை

(பரவை - பரவை நாச்சியார்; சுந்தரருக்காகச் சிவன், பரவைநாச்சியாரிடம் தூது சென்றதாகப் பெரியபுராணம் கூறும். தக்கன் கதை மிகப்பழையது; அதைக் கூறும்போது, பிற்காலச் சுந்தரர் கதையைக் கூறுவது காலமுரண் ஆகும்)

## கட்டியக்காரன், பரமசிவனுக்கு எச்சரிக்கை கூறல்

224. மணிகொண்ட கிரீடம்வனை வாசவன் தனைக்காத்த

வள்ளலே எச்சரிக்கை!

மான்மழுவைச் செங்காந்தன் போன்றகைத் தலமேத்து

மகிமையா எச்சரிக்கை!

திணிகொண்ட மதவாரணத் தோலு ரித்தவதி

தீரனே எச்சரிக்கை!

திறமேவு கூற்றுவனை பதமலரினால் சாய்த்த

தேவனே எச்சரிக்கை!

அணிகொண்ட சுந்தரற் கரிவைமனை யிற்புக்கும்

அண்ணலே எச்சரிக்கை!

அருச்சுனற்காய் பாசுபதம் அன்புடன் தந்த

அமலனே எச்சரிக்கை!

பணிகொண்ட கலனணி வடவிருட் சத்துற்ற

பரமனே எச்சரிக்கை!

பாங்குபெறு திரிநேத்திரா செஞ்ச டைப்பரா

பகவனே எச்சரிக்கை!

(மதவாரணம் = மத + வாரணம்; தோலுரித்தவதிதீரனே = தோல் + உரித்த + அதி + தீரனே; திரிநேத்திரன் - முக்கண்ணன்)

## நந்திகேசுரர் சொல்

### விருத்தம்

இராகம் : தோடி

225. தாருகா வனத்தர் விட்ட
தந்தியின் தோலு ரித்தும்
மேருபோல் வந்த உக்கிர
வேங்கையின் அதளந் தன்னை
சீருடன் உடையாய்க் கொண்ட
சிவபெரு மானே நின்னம்
போருக மலரை ஒத்த
பொற்கழல் இணைகள் போற்றி!

(தந்தி-யானை; நின்னம் போருக=நின்+அம்போருக)

### வசனம்

''தாருகா வனத்துத் தபசிகள் விட்ட மதயானைத் தோலை யுரித்துச் சம்மதித்தும், மலையைப் போல் உம்மைக் கொல்லவந்த புலியின் தோலை யுரித்து, வஸ்திரமாகத் தரித்துக்கொண்ட பரமசிவமே! உம்முடைய அம்போருகமாகிய தாமரை மலருக்குச் சமானமுள்ள அழகிய இரண்டு பாதங்கள் சரணம், ஐயா!''

## சிவபத்தர்கள் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

226. வளர்பிறை மதலை யாரம்
மருமலர் ஆத்தி வில்வம்
கிளர்பெறு கோடீ ரத்தில்
கிழமையாய் அணிந்தோய் போற்றி
தளர்விலா தெம்மைக் காக்கும்
தயாபரா விபுல வெண்மை
விளர்கைலை வளரயின் மேவும்
விமலனின் பாதம் போற்றி!

(கிளர்-ஒளி; கோடீரம் - சடை; தளர்விலாதெம்மை =தளர்விலாது + எம்மை)

### வசனம்

"வளரப்பட்ட மூன்றாம் பிறை, கொன்றை மாலை, வாசனை பொருந்திய ஆத்திமலர், வில்வம் பிரகாசம் மிகுந்த சடா பாரத்தில் உரித்தாய் அணிந்த முதல்வனே சரணம்! எங்களுக்கு யாதொரு மனந்தளர்வு மில்லாமல் இரட்சிக்கும் தயையுடைய பரனே! பெருமையும் வெண்மையுமுள்ள கைலாய பர்வதத்தில்

வீற்றிருக்கின்ற விமலமாகிய பரமசிவமே! உமது பாதார விந்தமே சரணம், ஐயா சுவாமி!''

## கட்டியன் சொல்

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : சாவேரி**

227. இணையில்லா சிவபத்தர் ஈட்டம் சூழ
இரசிதநற் கைலைதனில் அமல நாதன்
கணையனைய நேத்திரப்பார் வதியி னோடு
களிப்புடனே கொலுவினில்வீற் றிருக்கும் போது
திணையுடைய வாரியர்கள் புகழ்ந்த வத்தில்
சிறந்தவரா கியநார தருமங் குற்றுப்
பிணையுடனே அம்பிகையை நோக்கித் தக்கன்
பெருவேள்வி செய்யும்பிர பலஞ்சொல் வானே!

(ஈட்டம் - கூட்டம்; கணை - அம்பு; திணை - ஒழுக்கம்; திணையுடையவாரியர்கள்= திணை + உடைய + ஆரியர்கள்)

#### வசனம்

''அகோதெப்படியென்றால், ஒருவருஞ் சமானஞ் சொல்லப்படாத சிவபத்தர்கள் பக்கங்களில் சூழ்ந்து கொண்டு

இருக்க வெள்ளி மலையாகிய கைலாசத்தில் பரமசிவன் அன்புபோலுங் கூர்மையாக நீண்ட கண்களையுடைய பார்வதி அம்மன் சமேதராகச் சந்தோஷத்துடனே கொலுவீற்றிருக்கும்போது, நல்லொழுக்கமுள்ள பெரியோர்கள் புகழும் தவத்தில் சிரேஷ்டராகிய நாரதமகாமுனிவரும், பரமசிவன் பார்வதியும் இருக்கும் இடத்திற்குப்போய், அன்புடனே ஈஸ்வரியைப் பார்த்து, தக்ஷகப்பிரமன் பெரிதாகச் செய்யப்பட்ட யாகத்தின் பிரபலமாகிய கீர்த்தியை எடுத்துச் சொல்லுகிற விதம் காண்க!''

## நாரதர் பரமசிவனுக்கும் பார்வதியம்மனுக்கும் சொல்

### விருத்தம்

228. பஞ்சவக் கரத்த மர்ந்து
பத்தரைப் புரக்கும் பாந்தள்
மஞ்செ்சன வேத ரித்த
மயேசநின் சரணம் போற்றி!
இஞ்சொல் எண்பத்து நான்காம்
இலட்சசீ வன்க ளுக்கும்
எஞ்சலிற் படிய ளக்கும்
ஈஸ்வரி நின்தாள் போற்றி!

(பஞ்சவக்கரம்=பஞ்ச+அக்கரம்; இஞ்சொல்-இன்சொல்)

### வசனம்

''ஐந்தாகிய எழுத்தில் பொருந்தி, உமது பக்திமான்களைப் புரக்கும் சர்ப்பாபரணந் தரித்த பரமசிவமே! உமது பாதமே சரணம்! யாவரும் சொல்லப்பட்ட எண்பத்துநான்கு லட்சம் சீவராசிகளையும் தினந்தோறும் அதற்குப் படியளந்து காப்பாற்றும் ஈஸ்வரி, உமது பாதமே சரணம், அம்மா!''

## நாரதர், பார்வதிக்குத் தக்கன் யாகஞ் செய்கிறதைச் சொல்

### தரு

**இராகம் : கலியாணி** **தாளம் : அட**

### பல்லவி

229. பெருமையை என்னசொல்வேன்? தக்கன்வேள்வி
அருமையை என்னசொல்வேன்?

### அனுபல்லவி

உரிமையா முப்பத்து மூன்றுகோடி சுரர்
ஓங்கும் புகழுள்ள சித்தர்வித்யா தரர்!

இரவி பதினொருவர் ஏகாதச ருத்திரர்!

இவர்களெல்லாங் கூடிஇயற்றும் சர்ப்ப சத்திர-பெரு

இருபத்தேழ் மனைவியை இட்டுக்கொண்டு சந்திரன்

இஷ்டமுடன் நண்ணி இருக்கிறான்விண்ணிந்திரன்

பருவத்துடன் எய்திப் பதிந்திருக்கிறார் தந்திரர்!

பலருங் கூடியேயாங்கு பாங்காகவே மந்திர - பெரு

அகலு கின்றஇட அஷ்டதிக் கதிபதி

ஆறெட்டுச் சகஸ்திர அருந்தவத் தயாநிதி

சுகமுடன் திரளாகச் சூழ்ந்துகொண் டித்ததி

சுபகரமாய்ச் செய்யும் தூய்மகத் தின்ஸ்திதி ! - பெரு

(சுரர் - தேவர்; இரவி - சூரியன்)

## பார்வதி, பரமசிவனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

230. எண்ணரும் பிராண நாதா

இன்றைய தினத்தில் தந்தை

மன்னிய சர்ப்ப யாகம்

மாண்புடன் செய்கின் றாராம்

பன்னரும் யாகத் திற்குப்
பரிந்துநாம் இரண்டு பேரும்
முன்னமே புக்க வேண்டும்
முதமுடன் வருகு வீரே !

(பரிந்து - அன்புடன்; முதமுடன் - மகிழ்வுடன்)

**வசனம்**

''கேளும், என் பிராண நாதா ! இன்றையதினம், என் தந்தையாகிய தக்ஷகப்பிரம்மா, சர்ப்பயாகம் செய்கிறதாக நாரத மகாரிஷி சொன்னார் ! அந்த யாகத்திற்கு அன்புடனே நாமிருவரும் தக்கமாநகரம் போக வேண்டும் ! சந்தோஷத்துடனே வாரும், என் பிராண நாதா !''

## பரமசிவன், பார்வதிக்குச் சொல்

**விருத்தம்**

**இராகம் : மத்தியமாவதி**

231. கந்தரம் அனைய கேசம்
காவிஅம் பனைய நாட்டம்
அந்தர மின்ம ருங்குல்
அமைந்தஅம் பிகையே கேளும் !

மந்திரம் அனைய மொய்ம்பு
மாட்சிதக்ஷ கப்பிரம் மாசன்
தந்தைசெய் யாகச் சேதி
சாற்றாமல் செய்கின் றாரே !

(கந்தரம் - நீர்மேகம்; அம்பனைய = அம்பு + அனைய; நாட்டம், கண்ணைக் குறித்தது ஆகுபெயர்; அந்தரம் - ஆகாயம்; மருங்குல் - இடை)

### வசனம்

"நீர் கொண்ட மேகத்தைப் போன்ற கூந்தலும், கருங்குவளை அம்பு போலும் நேத்திரமும், ஆகாயத்திற்றோன்றும் மின்னலை யொத்த இடையும் பொருந்திய பார்வதியே ! மந்திர மலையை யொத்த புயத்தினையுடைய பெருடையுள்ள தக்ஷகப்பிரம்மாவாகிய உன் தகப்பன் செய்யப்பட்ட யாகத்திற்கு, எனக்குச் சங்கதி தெரிவிக்காமற் செய்கிறாரே, நாம் எப்படிப் போகலாம், பெண்ணே?"

## இதுவும் பரமசிவன், பார்வதிக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

232. அம்மகம் புரியும் சேதி
அறிந்தந்த இடத்தி னிற்கு

விம்மிநாம் போனோம் ஆகில்
வேட்கையாய் உனது தந்தை
செம்மையென் றுள்ளத் தெண்ணிச்
சீர்மரி யாதை செய்து
நம்மையும் அனுப்ப மாட்டான்
நாமங்கு புகத்த காதே!

(அம்மகம் = அ + மகம்; விம்மி - விரும்பி)

### வசனம்

"கேளும், பெண்ணே பார்வதா! அந்தச் சர்ப்பயாகம் செய்யும் சங்கதி, நாமே ஒருவரால் தெரிந்துகொண்டு, அந்த யாகசாலைக்கு நாம் போக விரும்பிச்சென்றால், ஆசையுடன் உன் பிதா, தக்ஷகப்பிரம்மா, நாம் வந்ததே மேன்மையென்று மனதில் நினைத்து, நமக்கு மரியாதை செய்து வைத்திருந்து அனுப்பமாட்டான். ஆகையால், நாமும் அவ்விடத்திற்குப் போகத்தகாது பெண்ணே, பார்வதா!"

## பார்வதி, பரமசிவனுக்குச் சொல்

### விருத்தம்

இராகம் : முகாரி

233. என்னருந் தகப்பன் செய்த
ஏதத்தை என்னைப் பற்றி

மன்னிக்க வேண்டும் சர்ப்ப

மகத்திற்குப் போவ தற்கு

இந்நிமி ஷத்திற் பாங்கி

ஏந்திழை யாரைக் கூட்டி

நன்னய முடனே தக்க

நகரத்துக் கனுப்பு வீரே !

(ஏதம் - குற்றம்)

**வசனம்**

''கேளும், பிராணநாதா ! என்னுடைய தகப்பன் செய்த குற்றத்தை, அடியாளைப் பற்றிப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன் ! நான் யாகத்திற்குப் போவதற்கு இந்த நேரத்தில் தோழிப் பெண்களைக் கூட்டி, இன்பமாகத் தக்க நகரத்திற்கு அனுப்பவேணும், என் பிராண நாயகா !''

## இதுவும் பார்வதா தேவி, பரமசிவனைத் தக்கமாநகரம் வருகிறதற்குச் செலவு கேட்குதல்

**தரு**

**இராகம் : அசாவேரி** **தாளம் : ஆதி**

**பல்லவி**

234. செலவு தாருமையா - மகம் பார்க்கச்

செலவு தாருமையா !

## அனுபல்லவி

உலகமெல் லாம்பணி

ஒளிசெய் அம்புயப் பாதா !

இலகிய பிறையணி

எனது பிராண நாதா ! - செலவு

என்பிதா உயர்தக்க - பிரம்மா

இயாகஞ் செய்கிறார் மிக்க - சிந்தையில்

அன்புட னேசென்று அதியங்களைப் பார்த்து

இன்புடனே வருவேன்! என்சொல் செவியிலோர்த்து !
- செலவு

என்தன் கூடப் பிறந்த - பேரெல்லாம்

எய்தி இருக்கிறார் அந்த - இடத்திற்கு

மின்திகழ் தாய்பிதா

மேவி இருக்குமனை

நன்றெனவே எண்ணி

நண்ணவேணும் அங்கனை -செலவு

அழகுச் சர்ப்ப வேள்வி - காண்பதற்(கு)

அருமை என்று கேள்வி-ஆகையால்

தழைவாய்ப் பிறந்தகத்தில்

தடுதியாய் நடக்குது!

விழைவுடனே பார்க்க

வேண்டினேன் இப்போது! - செலவு

# பரமசிவன், பார்வதா தேவிக்குச் சொல்

## விருத்தம்

**இராகம் : காம்போதி**

235. வடிவத்தில் எவர்க ளுஞ்ச
மானமே சொலஒண் ணாத
துடியிடை மாதே உன்தன்
தோழியை அழைத்துக் கொண்டு
படபடப் புடனே சென்று
பாங்குள சர்ப்ப யாகம்
தடையில்லா மற்பார்த் தேநீ
சலுதியில் வருகு வாயே!

(துடி-உடுக்கை)

## வசனம்

''கேளும், ரூப லாவண்ணியத்தில் ஒருவரையுஞ் சமானஞ் சொல்லப்படாத உடுக்கை போலும் இடையினையுள்ள பார்வதா தேவியே! உன்னிடைய தோழிமார்களை அழைத்துக்கொண்டு அதிசீக்கிரமாகப் போய், பாங்காய்ச் செய்கின்ற சர்ப்பயாகம் யாதொரு தடையுமில்லாமலே பார்த்துச் சீக்கிரமாக வருவாய் பெண்ணே!''

## பார்வதா தேவி, பரமசிவனுக்குச் சொல்

### பரணி

236. கைலைவாழ் பரனே
கட்டளைப் படியே
செய்மகம் பார்த்துத்
தீவிரம் வருவேன்!

### வசனம்

"கேளும், கைலையங்கிரியில் வாசஞ் செய்யும் என் பிராண நாதா! உமது உத்திரவுப் பிரகாரம் சர்ப்ப யாகத்துக்குப் போய், அதைப் பார்த்துச் சலுதியில் வருகிறேன், ஐயா சுவாமி!"

## கட்டியக்காரன் சொல் பொது

### விருத்தம்

237. வெண்ணிட பத்தில் உந்தி
வேட்கையாய்ச் சஞ்ச ரிக்கும்
கண்ணுதல் மூர்த்தி சொற்ற
கட்டளை சிரமேற் கொண்டு
பண்ணெனக் குரல்கள் வாய்ந்த
பாங்கியர் இருவர் சூழ

வண்ணமா மரக தஞ்ச

மானவம் பிகைவந் தாளே!

(வெண்ணிடபம் = வெண்மை + இடபம்; வெள்ளைநிறக் காளை; மரகதஞ்சமான=மரகதம்+சமான)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால் வெள்ளை நிறமுள்ள ரிஷபவாகனத்திலேறி ஆசையுடனே எவ்விடங்களிலுஞ் சஞ்சாரஞ் செய்யும் நெற்றிக்கண்ணை யுடைய பரமசிவன் சொல்லிய வாக்கியத்தைச் சிரசின் மேல் வைத்துக் கொண்டு பண்ணாகிய இசையென்று சொல்லுங்குரல்கள் பொருந்திய தோழிமார் இரண்டுபேருடன் அழகும் பிரகாசமும் மரகதம் போன்ற திருமேனியும் உள்ள பார்வதா தேவியம்மன் தக்கமாநகரத்துக்கு வருகிற விதங் காண்க!''

## பார்வதியம்மன், கைலாசம் விட்டுத் தக்கமாநகரம் வருகிற

**தரு**

**இராகம் : பூரிகலியாணி** **தாளம் : அடதாள சாப்பு**

**பல்லவி**

238. பவளம் வடிவமுற்ற - பரனுத் தரவுபெற்ற

பார்வதாதேவி வந்தாள்!

### அநுபல்லவி

இவர்தலுடன் தக்ஷகன்
இயற்றுஞ் சர்ப்பயாகம்
இக்ஷணம் பார்க்கவென்(று)
எண்ணியே அதிமோகம்
எய்திய ஏந்திழை
மாதர் சிரோன்மணி
பெய்வளை சரசும்
போருக மலரணி! - பவ

நீர்கொண்ட மங்குலைப்
போர்செய் கருங்குழலும்
நீண்ட கரும்பைஉறழ்
மொழியும் மிக்க
கூர்கொண்ட வயிலம்பை
ஏர்கொண்ட சுரும்புசெங்
கோகனகத் தைவென்ற
விழியும் பட்டு
வார்கொண்ட இருகொங்கை
வயங்குந்தென் னங்குரும்பை
மானுங் கவின்பரவு
வளங்கொள்முல் லையரும்பை

நேர்கொண்ட வெண்மூரல்
நிகழ்த்தரு மிமகர
நிலவென்ன எழிற்பெறு
வதன வசீகர - பவ

நிகரறுவளை கந்தரமும்-மார்பினில்
நெகளுகவென ஒளிர்சரமும் - வடவிலை
தகவரியவனச் சடரமும் - சிற்றிடை
தடிதுடியெனச் சொலுந்தரமும் - உறுமல்குல்
சர்ப்பப் படத்தை ஒக்கும்-தாளிற்றரித்திருக்கும்
பொற்பு தண்டைச் சிலம்பு - புணரியென ஒலிக்கும்! - பவ

(மங்குல் - மேகம்; உறழ்-ஒத்த; உவம உருபு)

## கட்டியன் சொல்

### எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : தோடி**

239. ஆவலுடன் எண்ணாண்கந் தருமம் தன்னை
அதிகமாய் விருத்திசெய்து கீர்த்தி மன்னும்
பாவையுறழ் பார்வதா தேவிக் கங்கு
பாங்கிஇரு வர்கள்சூழ வருகும் போது
தூவிவிள ரோதிமநன் னடைப்பி றங்கு
தோகைசிகண் டிச்சாயல் துடிம ருங்குப்

காவிநய னம்விளங்கும் தேவ வல்லிக்

கனதைசிறு விதிமனைவி வருகின் றாளே!

(தேவிக்கங்கு=தேவிக்கு+அங்கு;ஓதிம நன்னடை-அன்னநடை; சிகண்டி-மயில்;காவி-கருங்குவளை மலர்)

### வசனம்

''மனவாஞ்சையுடன் முப்பத்திரண்டு தருமங்களையும் விசேஷமாக வளரச் செய்து, கீர்த்தியுயர்ந்த பாவைபோலும் உருவ முள்ள பார்வதா தேவிக்கு ஏவினதொழில் செய்யும் தோழிமார் இரண்டுபேர் பக்கத்தில் வரவும், தக்கமாநகரம் வரும்போது, வெண்மையான சிறகினை யுடைய அன்னம்போல் நடைபிரகாசிக்கின்ற தோகை மயில் போலும் சாயல், உடுக்கை போலும் இடை, கருங்குவளை மலருக்குச் சமானமுள்ள நேத்திரம் பிரகாசிக்கின்ற வேதவல்லி யென்னும் பெயரையுடையவள்; தக்ஷகப்பிரமன் பெண்சாதி வருகிற விதங் காண்க!''

## வேதவல்லி வருகிற

### தரு

**இராகம் : பந்துவராளி** **தாளம் : ஆதி**

### பல்லவி

240. மீதலகும் புகழ் - மாதிகையே திகழ்

வேதவல்லியும் வந்தாள்!

## அனுபல்லவி

வேதமந்திரம் சொல்லி
வேள்வியதைத் தொடங்கும்
வேளையில் வான்மின்
வல்லியென நுடங்கும்
ஓதரிய நுண்ணிடை
உடுக்கையென லாமெங்கும்
உலவுகின்ற திற்சிறை
ஓதிமமும் ஒதுங்கும் - மீத

உதகத்தினி லேடறும்
சைவலத்தைப் புயலை
உவமைசொல்லும் கேசமும்-அதன்மீதில்
ஓங்கிய சூரியர்களும்
உதயம் செய்ததுபோல
உறையில்லைப் பிரகாசமும்-உயர்ந்தவரும்
பதமிளிர் செப்புபம்பர
பயோதரம் கண்டால்
பண்ணவர்கள் கொள்வார் நேசமும்-சிவந்தசெம்
பவளவா யுந்தரள
மனையமுழ ரலினெழிற்
பார்த்தவர் பெருகுவார் பாசமும் - செய்யப்

பாங்குறு கமலக் கையும் -மாலின்
பல்லமெனச் சொல்லு மெய்யும்-நல்ல
தேங்கமழ் மலர்களை எய்யும்-மாரன்
சிந்தை மகிழ்ந்துதுதி செய்யும்! - வடிவுறு

செம்பவளத்தை நிகர்த்தவாய்க் குயில்
இன்பமுறக் குரலார்சாயன் மயில்!
செறிந்த மருவாரிசப் பொலன்கொடி
சிறந்த நுண்ணிடைத் திருப்பைங்கொடி! - மீத

(வல்லி-கொடி; தரளம்-முத்து; மாறன்-மன்மதன்; சாயன், கடைப்போலி)

## கட்டியக்காரன் சொல்

### பரணி

241. வந்த தோர்வேத
வல்லி பாதத்தில்
விந்தைப் பார்வதியாள்
விரும்பி யேபணிவாள்!

(வேதவல்லி-தக்கன் மனைவி)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், இயாகசாலையில் வந்து இருந்த

வேதவல்லியின் பாதத்தில் பார்வதாதேவி அன்புடனே சேவிக்கிற விதங் காண்க!''

## பார்வதி, தாயாகிய வேதவல்லிக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

242. பண்ணருந் தவப்ப லத்தால்
பரிவுடன் என்னைப் பெற்ற
அன்னையே உனது செய்ய
அரவிந்த மலர்த்தாள் போற்றி!
வன்னமா பரணம் பூண்ட
மாதருக் கரசே போற்றி!
மன்னெழில் வேத வல்லி
மாதாநின் சரணம் போற்றி!

(செய்ய-சிவந்த; வன்னம்+ஆபரணம்=வன்னமாபரணம்)

### வசனம்

''சொல்லுதற்கு அருமையான தபோபலத்தினால் அன்புடன் என்னைப் பெற்ற தாயே,உமது சிவந்த தாமரைமலர் போன்ற பாதமே சரணம்!அழகிய ஆபரணங்களைத் தரித்த பெண்களுக்கு எல்லாம் நாயகியே, சரணம்! மிகுந்த அலங்காரமுள்ள வேதவல்லி யென்னும் பெயரை யுடைய அன்னையே! உமது பாதமே சரணம், அம்மா!''

## கட்டியக்காரன் சொல்

### விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

243. மரகத நிறம்வி ளங்கு
　　　மாதுமை யவள்தன் தாயின்
சரணத் தாமரை மலர்க்கண்
　　　சாஷ்டாங் கமாகச் சேவித்(து)
இருகரம் குவித்த பெண்ணை
　　　ஏறெடுத் துப்பா ராமல்
உரியநல் வசன மாக
　　　உபசரிக் காதி ருந்தாள்!

(சேவித்து-வணங்கி)

### வசனம்

''அகோதெப்படி யென்றால்,மரகதமாகிய பச்சைமேனி பிரகாசிக்கும் பார்வதாதேவியின் பமுடனே, தனது தாயாரைச் சாஷ்டாங்கமாகப் பாதார விந்தத்தில் சேவித்து, இரண்டு கையுங் கூப்பிக் கும்பிட்டு நின்ற குமாரத்தியாகிய பார்வதியை, வேதவல்லியாகிய தாய், முகம்நிமிர்ந்து பாராமலும், நல்ல வசனமா. யுபசாரஞ் சொல்லாமலு மிருந்தாளென்றறிக!''

## பார்வதி, தோழிக்குச் சொல்

### பரணி

244\. அந்தமார் அன்னை
 அனுசரணை இல்லை!
தந்தையைப் பணிவேன்
 தாதியே வருவீர்!

(அந்தமார்=அந்தம்+ஆர்; அந்தம்-அழகு)

### வசனம்

"அழகிய வடிவுள்ள என் தாயார், என்னைத் தழுவி உபசாரஞ் செய்யாமல் இருந்துவிட்டாள்! என்னைப் பெற்ற தந்தையாகிய தக்ஷகப் பிரம்மாவைச் சேவிக்கப் போகிறேன்! என்னுடன் கூடவாருங்கள், தோழிமார்களே!"

## தோழி சொல்

### வசனம்

"அப்படியே வருகிறோம்மா, பார்வதித்தாயே!"

## பார்வதி, தக்கனுக்குச் சொல்

### விருத்தம்

**இராகம் : கேதார கௌளம்**

245. பொறையுடன் தவத்தைச் செய்து
புகழ்பெற வரத்தைப் பெற்று
சிறுவிதி எனப்பேர் வாய்ந்த
செம்மல்நின் சரணம் போற்றி!
குறைவிலா துயிரை எல்லாம்
குணமுட னேசிருஷ் டிக்கும்
இறையவன் பதத்தில் தோன்றும்
எந்தைநின் கழல்கள் போற்றி!

(பொறை-பொறுமை; குறைவிலாதுயிரை = குறைவிலாது + உயிரை)

### வசனம்

''பொறுமையுடன் நல்ல தவத்தைச் செய்து, கீர்த்தி பெறும்படிக்கு மேன்மையான வரங்கள் வாங்கிச் சிறியபிரமனென்று திருநாமம் பெற்ற பெருமையிற் சிறந்த உமது பாதமே சரணம்! யாதொரு குறைவுமில்லாமல் சீவன்களையெல்லாம் நற்குணமுடன் படைக்கும்படியான பிரம தேவன் திருவடியிற் பிறந்த எனது பிதாவே! உமது பாதமே சரணம், தந்தையே!''

# கட்டியன் சொல் பொது

## விருத்தம்

**இராகம் : தோடி**

246. இவ்விதம் அன்னை ஏசா(து)
இருக்கஅம் பிகைவெ றுத்து
தெவ்வர்கள் வணங்கும் தந்தை
சிறுவிதி இடத்திற் புக்கு
செவ்விஅம் புயப்ப தத்தில்
சேவிக்க அவன்சி னந்தே
ஔவிய மனத்தன் ஆக
அவமதிப் பாயு ரைப்பான்!

(தெவ்வர்-பகைவர்; ஔவியம்-பொறாமை; 'ஔவியம் பேசேல் என்ற ஔவையார் வாக்குக் காண்க)

## வசனம்

''அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாகப் பார்வதியானவள், தனது அன்னையாகிய வேதவல்லியைச் சேவிக்க, அவள் பேசாமலிருந்தபடியால், மனதிலே வெறுப்புண்டாகி, சத்துருக்கள் வணங்குந் திராணியுள்ள தன் தகப்பனாகிய தக்ஷகப்பிரம்மா வைகும் இடத்திற்குப் போய், அவருடைய அழகிய தாமரைமலர் போன்றள பாதத்தில் சேவிக்க, தக்ஷகப் பிரமன் கோபித்து, பொறாமையுள்ள மனத்தனாகப் பார்வதியை அலட்சியமாகப் பேசுகிற விதங்காண்க!''

## தக்கன், பார்வதிக்குச் சொல்

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : கும்பகாம்போதி**

247. கொடுந்தொழில்செய் வேடன்எச்சில் முழுதும் உண்ட
குலவீணன் ஊர்தோறும் தலைஓட் டைக்கொண்(டு)
இடுபிச்சைச் சோற்றினுக் கின்புற் றிரந்த
இழிதொழிலாண் தபமுனிவர் தாரம் ஆன
வடிவுளபூங் குழல்மாதர் கற்ப ழித்து
மாபாவம் தேடியதுன் மார்க்க மூடன்
உடைபுலியச் சிவன்குணமே உனக்குண் டாகி
ஓலைஎழு தாதிருந்தும் ஓடி வந்தாய்!

(சோற்றினுக் கின்புற்றிரந்த = சோற்றினுக்கு+இன்புற்று+ இரந்த; 'வேடன்'; கண்ணப்பனைக் குறிக்கும்)

### வசனம்

"கொலை செய்யுந் தொழில்களையுடைய வேடனாகிய கண்ணப்பன் கொடுத்த எச்சில் பழங்களை யெல்லாம் புசித்த ஜாதி கெட்டவன்! ஊர்கள் எங்கும் தலையோடாகிய கபாலத்தைக் கையிலே ஏந்திக்கொண்டு, யாவரும் கொடுக்கப்பட்ட பிச்சைச் சோற்றினுக்கு இஷ்டம் வைத்து, இரந்த இழிவான தொழில் செய்யப்பட்டவன்!தாருகாவனத்து மகாரிஷிகள் மனைவியரான அழகிலே மிகுந்த மலர் முடித்த கூந்தலுள்ள ரிஷி பத்தினிகள்

கற்பைக் கெடுதி செய்து, பெரிதாகிய பாவங்களைத் தேடிக்கொண்ட துன்மார்க்கக் குணமுள்ள அறிவில்லாதவன் வஸ்திர ஈனமாய்ப் புலித்தோலைத் தரித்த அந்தச் சிவன் குணமே உனக்கு உண்டாகி அல்லவா, நான் அந்தச் சிவனுக்கு யாகச்சேதி ஓலை யெழுதி அனுப்பாமலிருந்தும் நீ யோடிவந்தது பார்வதியே!

## தக்கன், பார்வதியை நிந்தித்தல்

### தரு

**இராகம் : கேதார கௌளம்**

### பல்லவி

248. புத்தியை என்னசொல்வேன்? - உனக்கிருக்கும்
புத்தியை என்னசொல்வேன்?

### அனுபல்லவி

சித்தத்தில் விதரனை சிறிதும் உனக்கில்லை!
பித்தன்குணமே பிறந்ததால் வந்த தொல்லை! - புத்

பிணத்தை அளவைநாடி உண்டுகளிக்கும்
பேயுடன் சுடலை ஆடிக்-கொண்டுதிரியும்
குணக்கேடு ஆண்டியுடனே கூடிநீ வாழ்ந்தது
கோதிலாப் பெருமையும் சாதியும் தாழ்ந்தது! - புத்

இதயத்(து) அன்பு தாங்கி கண்ணப்பன் தந்த

எச்சிற் பழத்தை வாங்கி-அருந்திய

கதியில்லாத அற்பன் சதியாய்நீ அமைந்ததால்

கேள்விச் சொல்லைக்கேட்டில் வேள்விக்கு நண்ணிய - புத்

எழின்மிர் கண்டன் கருத்து - மகிழச்சுதன்

ஈரெட்டு வயது ரைத்துப்- பின்னந்தச்சொல்

பழுதடைய என்றும்பதினா(று) என்ற சத்தியம்

பண்ணிய பரமன்தன் பண்புனக்கே நித்தியம்! -புத்

தாருகா வனத்தில் உற்ற-மாதர்கள் கற்பை

தபுத்துப் பாவத்தைப் பெற்ற-சிவனிதன்றி

ஊரினில் தலையோட்டை உள்ளங்கையினில் ஏந்தி

உண்டி இறந்தவன் பெண்டானதால் வந்த -புத்

(பித்தன்-சிவன்; சுடலை-சுடுகாடு; ஐ,புடைபெயர்ச்சிவிகுதி. சதி-மனைவி; ஈரெட்டு=2 x 8=16; இரந்தவன்-யாசித்தவன்)

## கட்டியன் சொல் பொது

### *பரணி*

**இராகம் : தோடி**

249. செம்மைக்கண் டக்கன்

சிவனை நிந்திக்க

அம்மைகேட் டுள்ள

அழுதிரங் குவளே!

(செம்மைக்கண்டக்கன்=செம்மை+கண்+தக்கன்;'அம்மை', பார்வதியைக் குறிக்கும்)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், சிவந்த கண்களையுடைய தகப்பன், பரமசிவனை நிந்தனை செய்ய, அதைப் பார்வதியம்மன் கேட்டு,மனம் பதைத்து அழுது புலம்புகிற விதங்காண்க!''

## பார்வதி புலம்பல்

### கண்ணிகள்

**இராகம் : முகாரி** **தாளம் : ரூபகம்**

250. இவ்விடத்தில் சர்ப்பயாகம் இயலுடன் நடக்குதென்று
செவ்விநா ரதமுனிவன் செப்பயான் மனமகிழ்ந்து

பிராணநா தருக்குரைத்துப் பிரபலயா கத்துக்குநாம்
விராவியேபுக வேண்டும்நீர் வேட்கையாக வாருமென்று

இன்பமாக யானழைத்தேன் இயாகச்சேதி சொல்லஇல்லை
அன்புடனவ் விடம்போக அடாதெனவுரைத் தாரேயான்

வேள்விபார்த்து வாரேனென்று விளம்பியே மிகவிரைந்து
தாழ்வில்லாமல் ஏவல்செய்யும் தாதிமா ருடனேவந்தேன்!

வந்துதாய் மலரடியில் வணங்கினேன் அவள்என்னுடன்
பந்தமாக ஒருவசனம் பகராமல் மரமாய்நின்றாள்!

பெற்றதக்ஷகப் பிரம்மாவைப் பெட்டிடன்
பணிந்துநின்றேன்
சற்று நல்லுரை பேசாமல் சாற்றினார் அவதூரேதான்

என்னிட பிராணநாதர் ''இவ்விடம் புகாதே'' என்று
முன்னமே உரைத்தாரந்த மொழிகடந்து வந்தேனையோ!

வாஎன உனையழைத்து மரியாதைகள் செய்யாரென்று
மேவுபல் விதமுரைத்தார் மெல்லியும்கே ளாமல்வந்தேன்!

இந்தப்பா தகன்வளர்த்த இயாக்கையும் இருக்கலாகா(து)
அந்தமுடன் வேறுதேக மாகியீச னிடம்புகுவேன்!

அந்திரம்வாழ் தேவராதி அனைவரையும் வரவழைத்துத்
தொந்தமாகச் செய்யும்வேள்வி சுடலையாகப்
போகவேண்டும்!

பெற்றபெண்ணை அழைத்திடாமல் பெருமையாகச்
செய்தயாகம்
சுற்றிநாய் கழுகுபேய்கள் சூழும்ஈம மாகவேண்டும்!

## கட்டிக்காரன் சொல்

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : தோடி**

251. அம்பிகைஇவ் விதமாக மனம்வ ருத்தி
அலறிஅமு தேதனது தேக மாய்க்க
பம்பியஒன் பதுவிதமா கியச முத்திற்
பசுநெய்யி னாற்பிறங்கி எழுந்து நீண்ட
தம்பமென இருக்கும்யா கத்தி னங்கி
தனிலிறங்கி மற்றொருதே கத்தைச் சார்ந்தாள்
வெம்பிசிவ னுமைபிரிவால் வெகுளச் செந்தீ
விழியினிலே வீரபத்திரன் மேவி னானே!

(சமுத்தில் - சமித்தில்)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், பார்வதியம்மன் இந்தப்பிரகாரமாக மனம் வகுத்தப்பட்டு, அலறி அழுது, தன்னுடைய சரீரத்தை ஒழிக்கவேணுமென்று நினைத்து, பொலிவாகிய ஒன்பது தினுசாகிய சமுத்தில் பசுநெய் சொரிந்து, அதினால் பிரகாசமாக எழுந்து நீண்டிருக்குந் தம்பம்போல எரிந்து கொண்டிருக்கும் யாகத்தின் அக்கினியில் இறங்கிப் **பர்வதராஜன் குமாரத்தியாக** அவதாரஞ் செய்தாள்! பரமசிவன், பார்வதியம்மன் பிரிந்துபோன படியால், காமத்தினால் வருந்தி, தக்கனாலல்லவா இவ்விதம் துன்பமுண்டாச்சுது என்று கோபித்துக்கொள்ள, அப்போது, செந்தீவிழியாகிய நெற்றிக்கண்ணில் வீரபத்திரர் வந்து தோன்றினா ரென்றறிக!''

## வீரபத்திரன் வருகிற பொது விருத்தம்

**இராகம் : மோகனம்**

252. மயிலிற கினைநி காச
மரகதக் கல்இ ழைத்த
இயலுள மௌலி பூண்டே
இருகர் ணத்தில் நல்ல
வியனறு குண்ட லங்கள்
மின்னமும் பத்தி ரண்டு
சயமுறு படைகள் ஏந்தித்
தகைவீர பத்திரர் வந்தார்!

(மௌலி - கிரீடம்; சயம் - வெற்றி; கர்ணத்தில் - காதில்; நிகாச - போன்ற)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், மயிலிறகினைப் போன்ற பச்சைக் கல்லுகள் பதித்த, அழகு பொருந்திய கிரீடம் தரிந்து இரண்டு காதிலும் நல்ல பெருமை பொருந்திய குண்டலங்கள் பிரகாசிக்க அஸ்தத்தில் முப்பத்திரண்டு ஆயுதங்கள் பிடித்துக்கொண்டு பெருமையுள்ள வீரபுத்திரர் வந்தார் என்று சகலரும் அறிக!''

## வீரபத்திரர் வருகிற தரு

இராகம் : தோடி தாளம் : அடதாளச் சாப்பு

### பல்லவி

253. வீரபத்திரர் வந்தார்! - அகோர
வீரபத்திரர் வந்தார்!

### அனுபல்லவி

ஈரமதி கடுக்கை தாராரும் வில்வம்ப
கீரதிபுனைந் தோன்கண் ணாரழலில் உதித்த - வீர

தக்கன் நிந்தை சொல்லப் - பார்வதிகேட்டுத்
தாளாமல் அழல்புல்ல - அதனாலே,

இக்கவலை வந்த தென்றுமனம் விண்டு
மிக்கசிவன் காமம் மேவிச்சினம் கொண்டு-வீர

முடியின் மௌலி துலங்க -இருசெவியின்
மொழியும் குழைகள் இலங்க-பராக்கிரம

வடிவுறும் வாகுமேற் புஜகிரீதி மருவ
மாட்சியுறும் தெவ்வர் ஈட்டம்கண்டு வெருவ-வீர

செக்கர்வானிறத் துடையோன்- பவளம்போலத்
திகழ்கின்ற செஞ்சடையோன்! - விளக்கமாக

மொய்க்க உடம்பெங்கும் ஒழியுமுப்பத் திரண்டு
முனையுள்ள ஆயுதம் மனமகிழ்வாய்க் கொண்டு-வீர

என்னை அழைத்த சேதி- தந்தையே இப்போ(து)
இயம்பும் என்றே ஓதி!- பொருதுநீண்ட

வன்னவில்லுக் கொடுவர் வழுத்தச் சமானமில்லான்
வான மின்னிய இடிதானென்ற கடுஞ்சொல்லான்!-வீர

## வீரபத்திரர் சிவனுக்குச் சொல்

### எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : தோடி**

254. அடல்பெறு வேங்கைச் சருமநன் குறவே
ஆடையாய் மருங்கினில் புனைந்த
மிடல்பெறு வெளிறு மேனியேற் றினிலே
விரும்பி யாரோ கணித்து லவும்
கடல்பெறு விடமார் கண்டனே இமையோர்
காட்சியே மாட்சி சேரன் பர்க்கு
உடல்பெறு பிணியை அகற்குமெய்ப் பரனே!
ஒளிர்ப தாம்பு யமலர் போற்றி!

(சருமம்-தோல்; மருங்கு-இடை; விடமார்-விடம் நிறைந்த)

### வசனம்

''பராக்கிரமம் பொருந்திய புலியின்தோலையுரித்து, நன்மையுள்ள வஸ்திரமாக இடையிலே தரித்த வலிமையுள்ள வெண்ணிறமாகிய இடபவாகனத்தில் ஏறி, எவ்விடங்களிலும் சஞ்சரிக்கும் பாற்சமுத்திரத்திலே பிறந்த ஆலகால விடத்தைக் கண்டத்திலே யுடையவரே! தேவர்களுக்குக் காட்சி கொடுக்கப்பட்டவரே! பெருமையுள்ள உனது அன்பர்களுக்குச் சரீரத்திலுண்டாகிய வியாதிகளை நிவர்த்திசெய்து ரட்சிக்கும் பரமசிவமே! உமது பிரகாசம் பொருந்திய பாதாரவிந்தமே சரணம்!''

## வீரபத்திரர் பரமசிவனுக்குச் சொல் பரணி

255. உழைபர(சு) ஏந்தும்
உத்தமா எனைஇங்(கு)
அழைத்த சேதியினை
அருள்புரி வீரே!

(உழை-மான்; பரசு-மழு எனும் ஆயுதம்)

### வசனம்

''கேளும், மானும் மழுவும் திருக்கரத்தில் கொண்ட உத்தம குணமுள்ள என் தந்தையே! இவ்விடத்தில் அடியேனை அழைப்பித்த சேதியைத் தெரியச் சொல்ல வேணுமையா என் பிதாவே!''

# பரமசிவன், வீரபத்திரருக்குச் சொல்

## எழுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : கும்ப காம்போதி அல்லது நாட்டை**

256. மைந்தனே கேளாய் தக்கமா நகரம்
வாழ்க்கையில் விஞ்சிய தக்கன்
எந்தனை அகற்றி மற்றயா வரையும்
இனியநன் குடன்வர வழைத்துச்
சிந்தையு மகிழ்வாய்ச் சர்ப்பயா கத்தைச்
செய்கிறான் தனையோர் நொடியில்
நந்தவே புரிந்தன் னோன்றிணி சென்னி
நறுக்கியில் விடம்வரு வாளே!

(புரிந்தன்னோன்றிணி=புரிந்து+அன்னோன்+திணி;
சென்னி-தலை)

### வசனம்

''கேளும், எனது குமாரனே! தக்கமா நகரத்தில் மிகுந்த வாழ்க்கை பொருந்திய தக்ஷகன் எனக்குச் சங்கதி தெரிவிக்காமல், மற்ற சகலமான தேவர்களுக்கும் ஓலையெழுதி, சங்கதி தெரிவித்து, அவர்களை வரவழைத்து வைத்துக் கொண்டு, மனமகிழ்ச்சியுடனே சர்ப்பயாகம் செய்கிறான்; அந்த யாகத்தை ஒரு நொடிப்பொழுதில் கெடுதியடையும்படிக்குச் செய்து, அந்தத் தக்ஷகன் வலிமையுள்ள சிரசை அறுத்துத் தள்ளிவிட்டு, இந்தவிடம் வந்து சேரும் பிள்ளாய், வீரபத்திரா!''

## வீரபத்திரர், பரமசிவனுக்குச் சொல்

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

இராகம் : ஆனந்த பைரவி

257. கந்தமலி ஆத்திமத லைத்தார் பூண்ட
கைலைவளர் பரம்பொருளே கடவும் கோவே
உந்தனருந் திருவருளால் இக்க ணத்தில்
உக்கிரமாய்த் தக்கனுறை ஊரில் நண்ணி
எந்தனுயர் திராணியினால் அவன்செய் சர்ப்ப
இயாகமதை ஒருநொடியில் அழித்துத் தக்கன்
கந்தனையங் கறுத்திகுத்து வெற்றி வாய்ந்து
கதமுடனிங் செய்துவனுட் களிக்க நீரே!

(தக்கன் கந்தனை- தக்கனின் கழுத்தை)

### வசனம்

"கேளும், வாசனை மிகுந்த ஆத்திமாலை, கொன்றை மாலையைத் தரித்த கைலையம் பதியில் வாழ்கின்ற பரமாத்மாவாகிய தேவர் கோவே! உம்முடைய அருமையான கிருபாகடாட்சத்தினாலே ஒரு க்ஷணப் பொழுதில் அதிக உக்கிரமாகிய கடூரத்துடன் தக்ஷகனிருக்கும் நகரத்துக்குப் போய் என்னுடைய மேலான வலிமையினால் அந்தத் தக்ஷகன் செய்யப்பட்ட சர்ப்ப யாகத்தை ஒரு நொடி நேரத்தில் அழித்து அவன் சிரசை அறுத்து அவ்விடத்தில் வீழச் செய்து, செயம் பெற்றுச்

சிறப்புடனே இந்தக் கைலாய பதிக்கு உமதுமனம் சந்தோஷம் அடையும் படிக்கு வருகிறேன் பிதாவே!''

## பரமசிவன், வீரபத்திரருக்குச் சொல்

### அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : காம்போதி**

258. காதலாய் இங்கி ருக்கும்
கணங்களை அழைத்துக் கொண்டு
போதவே சேனை சூழப்
பொலிவுடன் விரைவில் புக்கி
மேதகி யாகம் செய்யும்
விரலுள தக்கன் சென்னி
சேதித்து மகஞ்சி தைத்துத்
தீவிரம் வருகு வாயே!

(மேதகி யாகம்= மேதகு+ இயாகம்)

### வசனம்

''ஆசையுடனே இந்தக் கைலை மலையில் வாசஞ் செய்து கொண்டு இருக்கும் நமது பூத கணங்களை அழைத்துக் கொண்டு, அதிகத் திரளான சேனா சைனியங்கள் பக்கங்களில் சூழ்ந்து வரும்படிக்குச் சீக்கிரமாகப்போய் மேன்மையுடனே இயாகஞ் செய்யும் திராணியுள்ள

தக்ஷகன் தலையை வெட்டிப் பூமியிற் றள்ளிவிட்டுச் சர்ப்பயாகத்தை அழித்துச் சீக்கிரம் வருவாய் வீரபத்திரா!''

## வீரபத்திரர், பரமசிவனுக்குச் சொல் விருத்தம்

**இராகம் : ஆனந்த பைரவி**

259. அருண பரசும் அஸ்த
அம்புய மலரில் ஏந்தும்
கருணையங் கடலே உன்தன்
கட்டளை சிரமேற் கொண்டு
தருணமா மகஞ்செய் தீர
தக்கனைச் சேனை வென்று
இரணவெம் பூமி யாக
இயாகசா லையைச்செய் வேனே!

(அருணம்-மான்; அஸ்தம்-கை; அம்புயமலர்-தாமரை; 'அஸ்த அம்புயமலர்' என்றது உருவகம்).

### வசனம்

''மானும் மழுவும் தாமரைமலர் போன்ற கரத்திலே வைத்திருக்கும் கிருபா சமுத்திரமே! உம்முடைய உத்தரவைச் சிரசின்மேற் கொண்டு, இந்தச் சமயம் பெருமையுள்ள சர்ப்பயாகம், செய்யும் தைரியசாலியாகிய தக்ஷகனையும், அவன் சேனா சைனியங்களையும் சம்மாரஞ் செய்து அந்த யாகசாலையை இரணகளமாகச் செய்து வருகிறேன் பாரும், என் தந்தையே!''

## பரமசிவன், வீரபத்திரருக்குச் சொல்

### வசனம்

''அப்படியே செய்து வருவாயப்பா, வீரபத்திரா!''

## வீரபத்திரர், உயுத்த சன்னாகத்துடன் வருகிற

### தரு

**இராகம் : நாட்டை** **தாளம் : அடதாளம்**

### பல்லவி

260. வேள்வியை அதஞ்செய்ய
விறல்தக்கன் சிரங்கொய்ய
வீரபத்திரர் வந்தார்!-அதிவீர
வீரபத்திரர் வந்தார்!

### அனுபல்லவி

தாழ்வில்லாக் கைலையில் தங்கிளப் போதுமே
வாழ்கின்ற சிவகண மருங்கினிற் சூழவே!-வீர

புகழாய் விருதுபிடிக்கத்- திறமையுள்ள
பூதங்கள் குடைபிடிக்க-இதயத்தினில்

மகிழ்வாய்ச் சிலபூதம்
வாய்வைத்து வளையூத
மிருகோணக் கொம்போலி
மேவவே பிரக்கியாத-வேள்

சிலபூதம் யானைத்தேகம்-எடுத்தங்கு
சிலபூதம் குதிரைத்தேகம்- எய்தியதப்பாற்
பலபூதம் இரதத்தின்
படிவங்கள் எடுத்துப்பின்
இலகுவாய்ச் சிலபூதம்
இமையவ ராகிமுன்-வேள்

அளவில்லாப் பேயின்கணம்-அனந்தரூபம்
அமைந்துவரவே அக்கணம்-யாதொரு
தளர்விலாச் சிலபேய்கள்
தகர்கலை மான்கொம்பு
பிளிர வாயில்வைத்துப்
பிறங்க தொனிக்கவம்பு-வேள்

புல்லங் குழல்களெங்கும்-முரசுடுக்கை
புகல்தவுண்டை மிருதங்கம்-சிலம்புகள்
உள்ள வழிகள்தோறும்
ஒலிசெய்யவே புக்கி

கள்ள மனத்தொடு-தக்கன்

கனதைப் பதிக்கி-வேள்

(படிவங்கள்-உருவங்கள்; அனந்த ரூபம்-பலவகை வடிவங்கள்; புல்லங்குழல்-புல்லாங்குழல்; அம்முச்சாரியை பெற்றது.)

## வீரபத்திரர், யாகசாலையிடம் போய்ச் சொல்லுகிற

### எழுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்

**இராகம் : நாட்டை**

261 ஆரடா இங்கென் தன்தையை அகற்றி
அமரர்கள் யாரையும் அழைத்து
சீரடா சர்ப்ய யாகநன் கியற்றும்
சிறுவிதி தக்ஷகப் பிரமப்
பேரடா உனக்குக் கொடுத்தவ னியாவன்
பின்றுணை உனக்குவந் தவர்மேல்
கூரடா பாணம் விடுத்தவன் சிரத்தைக்
கொள்ளைகொள் வேனிதோ பாராய்!

(கொடுத்தவனியாவன்= கொடுத்தவன்+இயாவன்; இகரம், குற்றியலிகரம்)

### வசனம்

"ஆரடா, அடா! இந்த யாக சாலைக்குள் இருக்கின்றவன் என் தந்தையாகிய பரமசிவனை யழையாமல், மற்ற தேவர்கள்

அனைவரையும் வரவழைத்து வைத்துக் கொண்டு, சிறப்புடனே சர்ப்பயாகம் செவ்வையாகச் செய்யும் உனக்குச் சிறுவிதியாகிய சிறிய பிரம்மா என்றும், தக்ஷகப் பிரம்மா என்றும் பேர் கொடுத்தவன் எவன்? உனக்குச் சகாயமாக வந்தவர்கள் பேரில் கூர்மையான அஸ்திரங்கள் பிரயோகஞ் செய்கிறேன்! தலைமை அறுத்துத் தள்ளும்படிக்குப் பாராய் தக்ஷகப் பிரமனே!''

## வீரபத்திரர், அஷ்டதிக்குப் பாலர்கள் பேரில் உயுத்தஞ் செய்தல்

**இராகம்: மத்தியமாவதி** **தாளம் : ஆதி**

### *தர்க்கம்-கண்ணிகள்*

262. திக்குப் பாலகரான தேவரே!-இவ்விடம் வந்த
சேதி யாதுரை மகானு பாவரே!

**அஷ்டதிக்குப் பாலகர் சொல் :**

தக்கப் பிரமன் சர்ப்ப யாகமே- செய்கிறதாயெமைச்
சார்பாய் அழைத்தாரிங்கு வந்தோம் வேகமே!

**வீரபத்திரன் சொல் :**

என்றகப் பனையகற்றிச் செய்கிற-யாகத்துக்குநீர்
எய்தியதால் உம்மேல் வாளி எய்கிறேன்!

**அஷ்டதிக்குப் பாலர்கள் சொல் :**

உன்றன் வெங்கணைகள் விழஎய்தேன்-சூரியவத்திரம்
ஓங்குவில்லில் பிரயோகமும் செய்தேன்!

**வீரபத்திரன் :**

செய்த பாணத்தைக் கதையினால் அடித்தேன்! - உங்கள் மார்பினில்
திறமுளவடி யஸ்திரம் தொடுத்தேன்!

**அஷ்டத்திக்குப் பாலர் சொல் :**

கைதவமுடன் தொட்ட வஸ்திரத்தை-ஓர்சூலத்தினால்
கண்டித்தேன் பாரடாஎன் சமர்த்தை!

**வீரபத்திரர் சொல் :**

உமதுடலங் கண்முற்றும் சல்லடை- கண்ணாகவே இதோ
ஓங்கி எய்தேன் உரியவெம்படை!

**அஷ்டதிக்குப் பாலர் சொல் :**

அமலனேஉன் படைகளை இருக்க-இதோயிணையில்
வாதவெங்கணை எய்தனன் செருக்க!

# கட்டியக்காரன் சொல்

## எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : சாவேரி**

263. அஷ்டத்திக்குப் பாலகர்கள் மீதிற் கோபம்
ஆகியடல் உளவீர பத்தி ரத்தே
வட்டிகழும் சூலஆ யுதம்வி டுத்து
வந்திருந்த பலருயிரை வதைசெய் தப்பால்
தொட்டமுடி பன்னிருவர் பல்லு திர்த்துத்
தூயகலை மங்கையின்ந சியைஅ றுத்து
வட்டமதி யைத்தாளால் தேய்த்து வேத
வல்லியிரு செவியறுத்து வருத்தி னானே!

(கலைமங்கை-சரசுவதி; நாசி-மூக்கு; வேதவல்லி-தக்கனின் மனைவி)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், வலிமை பொருந்திய வீரபத்திரதேவர், அஷ்டத்திக்குப் பாலகராகிய இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு,குபேரன், ஈசானன் என்னும் எண்மரின்மேல் கோபம் பிரவேசித்து, கூர்மை பொருந்திய சூலாயுதம் பிரயோகம் செய்து, அவர்கள் புறம்கொடுத்து ஓடும்படிக்குச் செய்து, யாகத்துக்கு வந்திருந்த

அநேகம் பேர்களையும் வருத்தப்படும்படிக்கு வாட்டி, அதன்பின்பு கிரீடதாரான பன்னிரண்டு சூரியர்களுடைய பல்லுகளை உதிரச் செய்து, பரிசுத்தமான சரஸ்வதியை மூக்கையறுத்து, சந்திரனைக் காலினால் தேய்த்து, தக்கன் பெண்சாதியாகிய வேதவல்லியை இரண்டு காதையும் அறுத்து, யாவரையும் வருத்தப்படும்படிக்குப் செய்தார் வீரபத்திரர் என்று அறிக!''

## இதுவும் கட்டியக்காரன் சொல்

### *அறுசீரடியாசிரிய விருத்தம்*

**இராகம் : மத்தியமாவதி**

264. அருமைசேர் யாக கர்த்தா
ஆகிய கலைக்கோட் டாரை
பெருமைபேச ருஞ்ச ரீரம்
பிராணனும் வேறாய்ப் போக
உரிமைசேர் தோலு ரித்து
உயர்யாக சாலை புக்கி
குருமைசேர் யாகஸ் தம்பம்
கொப்பெனப் பிடுங்கி னாரே!''

**வசனம்**

''இந்தப் பிரகாரம், அருமையாய் யாகஞ்செய்யக் கர்த்தாவாக

ஏற்படுத்தியிலிருந்த கலைக்கோட்டு மகாரிஷியினுடைய பெருமை பொருந்திய உடலைத் தோலுரித்துச் சரீரம் வேறு, பிராணம் வேறாகச் செய்து, மேன்மையுள்ள யாகசாலைக்குட் பிரவேசித்துப் பெருமையுள்ள யாகஸ்தம்பத்தைக் கோபத்துடனே பிடுங்கிப் போட்டார் வீரபத்திரர் என்றறிக!''

## தக்கன், வீரபத்திரருக்குச் சொல்

### பரணி

265. மதத்தினிற் குரிய
மதலைநட் டதைநீ
இகுத்தஉன் திறத்தை
இதோபார்க் கிறேன்வா!''

(இகுத்த-பிடுங்கிய)

### வசனம்

''கேளடா, அடா வீரபத்திரா! யாகத்துக்கு உரிமையாக மந்திர ஆவாகனத்துடன் நட்ட ஸ்தம்பத்தை நீ, சிறுபிள்ளைத் தனமாகப் பிடுங்கிக் கீழே போட்ட உன் திராணியைப் பார்க்கிறேன்! என்னுடன் சண்டை செய்ய வாடா, வீரபத்திரா!''

# தக்கனுக்கும் வீரபத்திரருக்கும் உயுத்தம்

**இராகம்:நாட்டை** **தாளம்:அடதாளச் சாப்பு**

**வீரபத்திரர்**

266. என்னப்பனைத் தள்ளி இயாகம் செய்வதற்கு
உன்னிய தென்னநீ உரைசெய் தக்ஷகனே!

**தக்ஷகன் சொல் :**

என்னைப் பலதேவர் இறைஞ்சினார் பெண்கொண்ட
உன்னப்பன் வணங்காத உன்மத்தம் என்ன?

**வீரபத்திரர் :**

என்னஉன் புத்தியை இயம்புவேன் எல்லார்க்கும்
மன்னும் பரப்பிரம்ம மானவன் வள்ளல்

**தக்கன் :**

பரப்பிரம்மா வானாலும் பாவையாம் என்பெண்ணை
மருவ மணம்செய்த மருகன்தான் போடா!

**வீரபத்திரர் :**

போடாஎன்(று) எளிதாகப் புகலாதே இக்கணம்
வீடாமல் வெஞ்சமர் விரும்பிச்செய் மூடா!

**தக்கன் :**

சமர்செய்ய வந்தஉன் தாடாண்மை அறிகிறேன்
அமர்செய் வில்லைவளைத் தைங்கணை தொடுத்தேன்!

**வீரபத்திரர் :**

தொடுத்த பாணங்களைத் துண்டாகவே வெட்டி
அடுத்துப் பத்துப்பாணம் அதிர்ந்திட விடுத்தேன்!

**தக்கன் சொல் :**

விடுத்த வாளிகளை வெட்டிவிழத் தள்ளி
கடுத்தர்த்தச் சந்திரக் கணைகளை எய்தேன்!

**வீரபத்திரர் :**

எய்தஅர்த்த சந்திர எனும்படை விழுந்திட
வைதிகழ் சூலத்தால் மடித்துவேல் எறிந்தேன்!

**தக்கன் :**

எறிந்த வேலாயுதம் இற்று விழப்பாரில்
செறிந்த தண்டினாலே சிதையவே அடித்தேன்!

('என்னப்பன்', 'உன்னப்பன்' ஆகியன சிவனைக் குறிக்கும்;
புகலாதே- கூறாதே; அமர்-போர்; வாளி-அம்பு; அர்த்தச்
சந்திர-பிறைச் சந்திர; வைதிகழ்-கூரிய)

# தக்கன் வீரபத்திரருக்குச் சொல் விருத்தம்

இராகம் : கும்பகாம்போதி

267. சாஸ்திரப் படிக்கு நட்ட
தம்பத்தைப் பிடுங்கி வீசும்
ஆத்திரக் காரா உன்னை
அரைநிமி ஷத்திற் குள்ளே
கோத்திரம் பேரில் லாமல்
கொன்றுபா தாளம் வானம்
தாத்திரி எங்கும் என்பேர்
தயங்கவே செய்வேன் பாராய்!

(தாத்திரி-மத்திய உலகம்)

வசனம்

"ஆரடா, அடா வீரபத்திரா! வேதசாஸ்திர முறைப்படிக்கு மந்திரோபதேசத்துடன் இந்த யாகசாலையில் நட்டிருந்த யாகஸ்தம்பத்தை ஆத்திரமாகப் பிடுங்கி யெறிந்து விட்ட உன்னை, அரைநிமிஷ நேரத்திற்குள் கோத்திரமும் பேரும் இல்லாமல் போகும்படி சம்மாரம் செய்து, சொர்க்கம், மத்தியம், பாதாளம் என்னும் மூன்று லோகமும், என் பேரும் கீர்த்தியும் பிரகாசிக்கும் படிக்குச் செய்கிறேன் பாரடா, வீரபத்திரா!"

# வீரபத்திரருக்கும் தக்கனுக்கும் உயுத்தம்

**வீரபத்திரர் சொல் :**

268. மகத்துக் கென்பிதாவை நீக்கி உனதிரண்டு
வாகு பராக்கிரமம் பார்க்கிறேன்!

## தக்கன் சொல் தரு

**இராகம்: புன்னாகவராளி** **தாளம்: ரூபகம்**

269. செகத்தினைப் படைக்கும் விறல்விதி - யாகும் பிரமன்
சேயை நீயென்ன பார்ப்ப தென்திறம்?

**வீர:**

திறலுடன் பலசரங்களை எடுத்தே-என்மார்பிலக்காய்
தீவிரமுடன் பாயவே விடுத்தேன்!

**தக்கன்:**

விறலுடனந்தக் கணைகளைத் தெறுத்தேன்-என் மார்புறாமல்
மிகுதியாகவோர் பத்தம்பு விடுத்தேன்!

**வீர:**

பஞ்சமுகக் கூரம்பினால் அறுத்துநின் உடலிற்கணை
பனியென மூடிக் கொள்ளவே நிறைத்தேன்!

**தக்கன்:**

வெஞ்சினத்தொடு கட்கமும் பிடித்து - கணை நொடிக்குள்
வெட்டிக் கதையைச் சுழற்றிமேல் விடுத்தேன்!

**வீர:**

சுழற்றி எறிந்தகதையை ஓர்சூலம்-கொண்டேபிளந்து
துகளாய் விழவே செய்தனன் சால!

**தக்கன்:**

அழற்சமான அஸ்திரங்கள் பன்னொன்று-நின்கழுத்துக்குநே
ராகவிடுத்தேன் செயங்கொளக் கொன்று!

## *கட்டியக்காரன் சொல்*

### *எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**இராகம் : சாவேரி**

270. இந்தவிதம் வீரபத்திரர் தக்க னோடே
இயம்பரிய கொடுஞ்சமரம் புரிந்தன் னோன்தான்
நொந்திளைக்கும் வேளையைப்பார்த் தரிய சூல
நொறில்விடவே தக்கன்கந் தரமி குத்து
விந்தையெனப் பலருரைக்கச் சிரமும் யாக
வெந்தழலில் வீழ்ந்தப்பால் வேத வல்லி

சிந்தைதளர்ந் தவன்மார்பில் புடைத்துக் கொண்டு
சிலம்பினாள் மேல்விழுந்து புலம்பி னாளே!

(இயம்பரிய= இயம்பு+ அரிய; சொல்வதற்கரிய)

**வசனம்**

''அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாக, வீரபத்திரர் தக்ஷகப் பிரமனுடன் சொல்லுதற்கு அருமையான, கொடுமையான, சண்டை செய்து, அந்தத் தக்ஷகப் பிரமன் சரீரம் நொந்து, கைசோர்ந்து இருக்கும் சமயம் பார்த்து, அரிதாகிய பரமசிவனது சூலாயுதத்தைப் பிரயோகஞ் செய்ய, அது சீக்கிரமாகப்போய்த் தக்ஷகன் கழுத்தை அறுத்து, ''இது அதிசயம்'' என்று பலரும் சொல்ல, தலை யாக அக்கினியில் விழுந்தது !

அதன் பின்பு, வேதவல்லியாகிய அவன் பெண்சாதி மனது தளர்ந்து, தன் மார்பில் கைகளால் மோதியடித்துக் கொண்டு, கூக்குரலிட்டுப் புருஷன், சரீரத்தின்பேரில் விழுந்து புலம்புகிற விதங்காண்க !''

## வேதவல்லி புலம்புகிற தரு

**இராகம் : கெண்டா** **தாளம் : ரூபகம்**

271. ஐயையோ நானென்ன செய்வேன்
ஆவிவைத் தெவ்விதம் உய்வேன்?

மெய்யர்கள் புகழுநாதன் வேதங்களுணர் பிரக்யாதன்
சகலருக்கு மேலாயன்று தானிருக்க வேணுமென்று

வகையுடன் பெருந்தவத்தை மாண்புடன்செய்தாய் சமர்த்தாய்
உன்னிட திராணியாலே உம்பராதியை மேன்மேலே
மன்னவே வரவழைத்து மயேஸ்வரனையே நிந்தித்து

செப்பரிய சர்ப்பயாகம் செய்யவெண்ணினதும் விவேகம்
அப்படி யிருக்குன்னாவி அகலுமோ நானலறக்கூவி?

என்னபாவத்தைச் செய்தேனோ? ஏழைசனத்தை வைதேனோ?
மன்னறம் அழிவுசெய்தேனோ? வனத்திலரும்பைக் கொய்தேனோ?

மகிழ்நனும் சிறப்புற்றோங்க மாதவஞ்செய்தேனே பாங்காய்!
மகிமைசேர் சுரர்கள்கோவே வரனைத்தந் தருளவாவே!

## *கட்டியக்காரன் சொல்*

### *என்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்*

**இராகம் : தோடி**

272. வேதவல்லி இந்தவிதம் புலம்பும் போது
வீரபத்திரன் படையை வீசிக் கொண்டு
மேதகுடன் வரும்போது கர்த்த ரான
விஷ்ணுவின்மேல் படவரும் வெண்டெ ழுந்து
போதவாக் கிரமித்து வைன தேயன்
புயத்தினிலா ரோகணித்துப் பொலிவு வாய்ந்த
ஓதரிய வைம்படையும் கரத்தில் பற்றி
உக்கிரனை வளைத்தமரம் புரிகு வாரே!

(படவவரும் = பட + அவரும்; போதவாக்கிரமித்து = போத + ஆக்கிரமித்து; ஓதரியவைம்படை = ஓதரிய + ஐம்படை; வளைத்தமரம்=வளைத்து + அமரம்)

### வசனம்

"அகோதெப்படி யென்றால், இந்தப் பிரகாரமாக வேதவல்லி தன் புருஷனாகிய தக்ஷகப்பிரம்மா இறந்ததற்கு அழுது புலம்பிக்கொண்டு இருக்கும்போது, வீரபத்திரர், தன் கையிலே பிடித்திருந்த ஆயுதத்தைச் சந்தோஷத்தினால் வீசிக்கொண்டு பெருமையடைந்தோமென்று வரும்போது, சர்வசீவ ரட்சகக் கர்த்தாவாகிய மகாவிஷ்ணுவின் மேல் பட, அவர் கோபித்து எழுந்திருந்து, அதிகமாய்ப் பேரொலி செய்து, கெருடாழ்வான் பேரில் ஏறிக்கொண்டு, பிரகாசம் பொருந்திய அருமையுள்ள சங்கு, சக்கரம், சார்வ்கம், தண்டு, வாள் என்னும் பஞ்சாயுதம் கையிலே பிடித்துக் கொண்டு, வீரபத்திரனை வளைத்துக்கொண்டு, உயுத்தஞ்செய்யத் தொடங்கினார் என்றறிக!"

## மகாவிஷ்ணு வீரபத்திரருக்குச் சொல்

### விருத்தம்

273. பிஞ்சகன் அழற்கண் வந்த
பெருமையோ வீர பத்திரா?
அஞ்சிடா திருக்கும் உன்தன்
ஆண்மையோ செருக்கோ தக்கன்
கொஞ்சவல் லமையான் தன்னைக்
கோறல்செய் தனனாம் என்ற

விஞ்சிய கர்வ மோஎன்

மேற்படை படந டந்தாய் ?

(பிஞ்சகன் - சிவன்; அழற்கண் - அக்கினிக்கண்; கோறல் - கொல்லுதல்; முதனீண்டது)

**வசனம்**

"கேளடா, வீரபத்திரா ! பிஞ்சகனாகிய பரமசிவனது அக்கினிக் கண்ணில் அவதரித்தோ மென்கிற பெருமையோ? சகலருக்கும் பயப்படாமல் இருக்கிறோமென்கிற ஆண்மைத்தனமோ? சந்தோஷமோ? கொஞ்ச வல்லமையுள்ள தக்ஷகனைச் சம்மாரஞ் செய்தோம் நாம் என்கிற மிகுந்த கர்வமோ என்பேரில் உன்னுடைய கையிலிருக்கும் ஆயுதம் படும்படிக்கு நடந்து போனது வீரபத்திரா?

## விஷ்ணுவுக்கும் வீரபத்திரருக்கும் சண்டை

**இராகம் : நாட்டை** **தாளம் : அட**

274. ஏதடா உனக்கிந்த இறுமாப்பு வந்ததென்மேல்,

ஏதிபட நடந்தாய் வீரபத்திரா?

**வீரபத்திரர் :**

மோதியமர் புரிய முடுகிவர வில்லைஎன்

முன்கைப் படைபட்டது கர்த்தனே!

விஷ்ணு :

மதியில்லாத உன்தன் வல்லமை அறிகிறேன்
வாளி ஐந்து விடுத்தேன் பாரடா !

வீரபத்திரர் :

கொதிப்புள்ள அக்கினி அஸ்திரம் விருத்ததை
கொப்பென விழச்செய்தேன் நேரிலே !

விஷ்ணு :

வடிகணை பதினைந்து மார்விலக்குப் பார்த்து
வலிவுடன் விடுத்தனன் பத்திரா !

வீரபத்திரர் :

கடிதினில் பதினைந்து கணைகளும் விழஎய்து
சுழற்றி விடுத்தேன் பாருமே !

விஷ்ணு :

கழற்றி விடுத்ததண்டை தூளாக விழச்செய்து
தோமரம் எறிந்தனன் பத்திரா !

வீரபத்திரா :

வழுத்தரும் தோமரம் மாயச்செய் தேபிண்டி
வலிவுறு பாலமு மெறிந்தேன் !

**விஷ்ணு :**

பிண்டி பாலந்தன்னைச் பிசகாமல் நொறுக்கியே
பெரிதைம்பது பகழி தெறித்தேன் !

**வீரபத்திரர் :**

கண்டிதம் செய்தந்த ஐம்பது பாணமும்
கதையினாற் பொடியாக வடித்தேன் !

(மார்பிலக்கு = மார்பு + இலக்கு; தோமரம், பகழி, பிண்டி, பாலம் - பழந்தமிழர் போராயுதங்கள்)

## கட்டியக்காரன் சொல்

### விருத்தம்

**இராகம் : காம்போதி**

275. இருவரும் இந்த வண்ணம்
எய்த்திடா தமரம் செய்ய
மருவன வலங்கன் மாயன்
வலவுக் கிரனைச் செயிக்கக்
கருதிச்சக் கரத்தை பறபக்
கையினில் எடுக்க மோசம்
வருமென்று மனதில் எண்ணி
மயேஸ்வரன் வருகின் றானே !

(எய்த்திடா தமரம் = எய்த்திடாது + அமரம்; பறப - பத்ம)

### வசனம்

"இந்தப் பிரகாரமாக, மகாவிஷ்ணுவும் வீரபத்திரரும் ஒருவருக்கு ஒருவர் இளைக்காமல் பாணங்கள் விட்டு, சண்டை செய்ய, வாசனை பொருந்திய துளபமாலை மார்பனான மகாவிஷ்ணுவானவர், வீரபத்திரனைச் செயம்பெற வேணுமென்று திருவுளத்தில் நினைத்துச், சக்கராயுதத்தைத் தனது தாமரை மலர்போன்ற அஸ்தத்தில் எடுக்க, அதை யறிந்த பரமசிவன், வீரபத்திரருக்கு ஆபத்து வருமென்று மனதிலே நினைத்துத் தக்கமா நகரத்துக்கு மகாவிஷ்ணுவினிடம் வருகிற விதங் காண்க !"

## பரமசிவன் வருகிற

### விருத்தம்

**இராகம் : தோடி**

276. செங்கையில் பரசு புள்ளி
செறிஅரு ணத்தை ஏந்திக்
கொங்கவிழ் மதலைத் தாமம்
கோடீரம் இசைவி ளங்கப்
பொங்கமாய்ச் சிவக ணங்கள்
புடையினில் மிகவே சூழத்
தங்கிடை யுழுவை யாடை
தயங்கச்சங் கரன்வந் தாரே !

(புள்ளிசெறி அருணம் - புள்ளிமான்)

### வசனம்

''அகோதெப்படி யென்றால், சிவந்த கையிலே பரசாகிய மழுவாயுதமும் புள்ளி மிகுந்த சரீரமுடைய மானும் பிடித்துக்கொண்டு, வாசனை வீசப்பட்ட கொன்றைமாலை சடாபாரத்தில் பிரகாசிக்கச் சந்தோஷத்துடன் மிகுந்த சிவகணங்கள் பக்கங்கில் சூழ்ந்து வரவும் இடையிலே புலித்தோல் அணிந்தது விளங்கவும் பரமசிவன் வந்தார்.''

## பரமசிவன் வருகிற

### தரு

**இராகம் : காம்போதி** **தாளம் : ஆதி**

### பல்லவி

277. கைலாச நாதர் வந்தார் ! – சிவ
கணங்கள் நெருங்கிச் சூழ
கடிந்தவர் அடிதாழ !

### அனுபல்லவி

பைநாக வளையானவிற் பரிதிபடை யெடுத்து
பாலன்மேல் விடஎண்ணுங் காலங்கண்டே அடுத்து – கை

### சரணம்

சிரசில் செவ்வேணி துலங்க - குழைச்செவியில்
தினகரன் என்ன இலங்க - அருவிசொரி
வரைசெறி தடமொய்ம்பு வாகங்கதம் வயங்க
மருமத்தினிற் சர்ப்பாபரண நனிதயங்க ! - கை

கடுக்கை மலரை வனைந்து - மிகுமணங்
கமழ்கண்ணி முடிபு னைந்து - திரண்டநீள்
மிடற்றினிலே கரியவிடங் கெழுமி விளங்க
தரித்த உருத்திரர் கடிதாவடங்கள் துலங்க - கை

வல்லியச் சருமம் வன்ன - முறுமிடையில்
வனைந்து பளபளென்ன - இருக்கநன்றாய்
துல்லிய வெண்பிறை சோதி செய்யச்சடை
பல்லிய முழங்கவே பரிந்து வெள்ளைவிடை - கை

## கட்டியக்காரன் சொல்

### பொது பரணி

278. இராசித விலங்க
வீசனும் வந்து
பரந்தா மற்கிதம்
பண்புடன் உரைப்பார் !

## வசனம்

"அகோதெப்படி யென்றால், வெள்ளிமலையில் வாசம் செய்யும் பரமசிவன், தக்ஷகன் யாகசாலைக்கு வந்து, பரந்தாமனாகிய மகாவிஷ்ணுவுக்கு மனம் இஷ்டம் உண்டாகும் படிக்குச் சொல்லுகிற விதங் காண்க !"

## பரமசிவன், மகாவிஷ்ணுவுக்குச் சொல்

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம்:ஆனந்த பைரவி**

279. பத்தியுறும் பாகவதர் கணத்தை அன்பாய்
பரிபாலனஞ் செய்தெழில் வைகுந் தத்தில்
நித்திரிய சூரிகளுடன் வீற்றிருக்கும் நாதா
நேமிபடை வீரபத் திரன்மே லேவ
எத்தனஞ்செய் திடலாமே என்னைப் பற்றி
எடுத்தசுத ரிதனத்தை இருப்பி டத்தில்
வைத்துச்சிறி யன்செய்த பிழையை இன்று
மன்னித்து வாஞ்சையுடன் இரட்சிப் பீரே

(கணத்தை - கூட்டத்தை)

### வசனம்

“பத்தி வைராக்கியம் பொருந்திய பாகவதர் கூட்டங்களை இஷ்டமாக இரட்சித்துக் கொண்டு இருக்கும் அழகிய வைகுந்தத்தில் நித்திய சூரிகளுக்கு நாயகா ! சக்கராயுதத்தை வீரபத்திரன் பேரில் பிரயோகஞ் செய்யலாகுமா? என்னைப்பற்றித் தேவரீர் திருக்கரத்தில் எடுத்த சக்கராயதத்தை, அது இருக்கும் இடத்தில் வைத்துச் சிறியவனாகிய வீரபத்திரன் செய்த குற்றத்தை இன்றைய தினம் பொறுத்து, அன்புடனே இரட்சியுமையா சுவாமி !”

## மகாவிஷ்ணு பரமசிவனுக்குச் சொல்

### எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

280. வாரணத்தின் சருமத்தை உரித்துப் போர்த்த
மதியணிந்த சங்கரனே மகனிங் கெய்தி
பூரணவேள் விக்குவந்தோர் தமைஎ திர்த்துப்
போர்செய்து சவட்டிச்சிறு விதியைக் கொன்று
சீரணியும் இயாகத்தை அழித்தான் முன்போல்
தேவர்களை எழுப்பிமகம் பூர்த்தி செய்து
ஓரணவும் அவிர்ப்பாகம் அன்பாய்ப் பெற்றே
இரசிதமா திரங்கதழ்வில் எய்து வாயே !

(இரசிதமாதிரம் - வெள்ளிமலை)

### வசனம்

"வாரணமாகிய மதயானையின் தோலை யுரித்துப் போர்த்த, சந்திரனைச் சடையிலே தரித்த பரமசிவனே ! உன் குமாரனாகிய வீரபத்திரன் இவ்விடத்திற்கு வந்த, நிறைவாக இந்த இயாகத்துக்கு வந்தவர்களை யெல்லாம் எதிரிட்டுச் சண்டை செய்து, வென்று, தக்ஷக பிரமனையுஞ் சங்கரித்த, சிறப்புப் பொருந்திய யாகத்தையும் அதஞ்செய்தான் ! ஆகையல், முன்போலத் தேவர்களையும் மற்றவர்களையும் எழுப்பி, யாகத்தையும் குறைவில்லாமல் பூர்த்தி செய்து, அழகாக அவிர்ப்பாகம் பெற்று, அன்புடனே வெள்ளி மலையாகிய கைலைக்குச் சிறப்புடனே போயிருக்கலாம் சாம்பவ மூர்த்தியே !"

## பரமசிவன், மகாவிஷ்ணுவுக்குச் செலல்

### அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம்

**இராகம் : தோடி**

281. பஞ்சவட் படைக ரங்கொட்
பைம்புயல் வண்ணா தேவர்
நெஞ்சினில் இன்ப மாக
நினைந்தபிர கார மிற்றை
எஞ்சிய பேரை எல்லாம்
எழுப்பியிச் சத்தி ரத்தை
விஞ்சவே பூர்த்தி செய்து
வியந்தவிர்ப் பாகம் கொள்வோம் !

(புயல் - மேகம்)

### வசனம்

''கூர்மையுள்ள பஞ்சாயுதங்கள் கையிலே கொண்ட பசுமை தங்கிய மேகம் போன்ற திருமேனி யுடையவரே ! தேவரீர் மனதிலே இஷ்டமாய் எண்ணிய பிரகாரம் இன்றைய தினம் உயுத்தத்தில் இறந்தவர்களையெல்லாம் உயிர்பெற்று எழுந்திருக்கும்படி செய்து, இந்த யாகத்தை மிகுதியாக நடத்திப் பூர்த்தி செய்து சந்தோஷத்துடன் அவிர்ப்பாகம் பெற்றுக் கொள்வோமையா, வைகுந்த பதியே !''

## மகாவிஷ்ணு பரமசிவனுக்குச் சொல் பரணி

282. இறந்தவர் தம்மை
எழுப்பியிங் கிருத்திச்
சிறந்திட வேள்வியைச்
செய்து முடிப்பீர் !

### வசனம்

''இறந்தவரை யெழுப்பி, அவர்களை வைத்துக்கொண்டு யாகத்தைச் செய்து நிறைவேற்றிவையும் சாம்ப மூர்த்தியே !''

### தக்க நாடகம் முற்றும்